ரிஜிஸ்டர் நெ. 2041. தனிப்பிரதி விலை ஒரு அணா.

# குடி அரசு

| | | |
|---|---|---|
| வருட சந்தா முன் பணம் | — ரூ. | 3—0 |
| 6-மாத சந்தா ,, | — ,, | 1—12 |
| வெளி நாட்டிற்கு ,, | — ,, | 5—0 |

ஞாயிறுதோறும் வெளிவரும்.

வியாபாரிகள் விளம்பரம் அங் 1 க்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1 க்கு ரூ. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 8. | ஈரோடு, ஆங்கிரஸ-ஹு ஆடி-மீ 16-உ (31—7—1932) | மலர் 14.



விற்பவணக்குத்தயார். விற்பவணக்குத்தயார்.

## தோழர். ம. சிங்காரவேலு பி.ஏ., பி.எல்.,

## அவர்கள் எழுதிய

# "கடவுளும் பிரபஞ்சமும்"

என்ற சிறந்த ஆராய்ச்சி நூல். கடவுள் ஒருவர் உண்டா என்பதும், கடவுளுக்கும் பிரபஞ்சத்திற்குமுள்ள சம்பந்தா சம்பந்தமும், கடவுளது வேலை என்ன என்பதையும், சவிஸ்தாரமாக ஆராய்ச்சி அறிவுடனும், பூத பௌதிக விஞ்ஞான சாஸ்திர விளக்கங்களுடனும், தக்க மேற்கோள் உதாரணங்களுடனும், இனிய தமிழில், எளிய நடையில், யாவரும் படித்துணரும் வண்ணம் எழுதப்பட்ட ஓர் சிறந்த நூல். பகுத்தறிவு வளர்ச்சியும், உலக முற்போக்குமடைந்துள்ள இதுகாலை, அஞ்ஞானத்திலும், மூடபக்தியிலும் கிடந்துழலும் நம் மக்கள் அவசியம் படித்துப் பயன்பெறவேண்டுமென்றே கூறுவோம். "கடவுள்" என்னும் வார்த்தை வெறும் சொல் மயக்கே யொழிய வேறில்லை என்பதையும், புராணக்காரர்கள் கடவுளைக் கற்பித்திருக்கும் பொய்புரைகளையும், தத்துவ நூலாசிரியர்கள் கடவுளைப்பற்றிக் கூறும் கற்பனைகளையும் விஞ்ஞான முகத்தால் ஆராய்ந்து, அவைகள் யாவும் கற்பனைகள் என்பதைத் தெள்ளிதில் விளக்கப்பட்டுளது. "கோழி முதலில் உண்டானதா முட்டை முதலில் உண்டானதா", "மரம் முந்தியதா, வித்து முந்தியதா", "பில்லி சூனியம்", முதலியன பற்றிய சந்தேகங்களுக்கு விடையும், அநுபந்தமும் சேர்க்கப்பட்டுளது. அதிக பக்கங்கள், குறைந்த விலை. உங்கள் ஆர்டரை இன்றே பதிவு செய்து கொள்ளுங்கள்.

சுமார் 100 பக்கங்கள் கொண்ட பிரதி 1-க்கு விலை அணா 0—4—0

தனிப்பிரதி வேண்டுவோர் 5-அணா தபால்தலைகள் அனுப்பவேண்டும்.

மானேஜர்,

குடி அரசு புக்டிபோ, ஈரோடு.

## விற்பனைக்காக நம்மிடம் உள்ள இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

| | | |
|---|---|---|
| 1. | இயற்கைமதம் ... | 0—8—0 |
| 2. | சிதம்பர ரகசியம் ... | 0—8—0 |
| 3. | சுதந்தரப்போர் அல்லது உப்பள முற்றுகை | 0—4—0 |
| 4. | பகுத்தறிவேவிடுதலை அல்லது ஜீவாத்மா இல்லை (சித்திரப்படங்களுடன் 100 பக்கங்களுக்கு மேல் உள்ளது) ... | 0—6—0 |
| 5. | மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை | 0—8—0 |
| 6. | ஆராய்ச்சி அணிகலம் ... | 0—12—0 |
| 7. | சென்னை லோக்கல் போர்டு ஆக்ட் ... | 2—0—0 |
| 8. | மோட்டார்க்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அனுபோகப்பயிற்சியும் (50 படங்களுடன் 200 பக்கங்கள் அடங்கிய பெரிய புஸ்தகம் ஆர்டருடன் 4 அணு ஸ்டாம்பு அனுப்பவேண்டும்) ... | 2—0—0 |
| | சுயராஜ்யம் யாருக்கு ... | 0—1—0 |
| | சாமிகளின் அடிமைகள் ... | 0—12—0 |

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிறயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணு ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணுவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

### 'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல்வருஷத்திலிருந்து சென்ற வருஷம்வரை 6 வருஷகாலம் வெளியான மலர்களைத்தனித் தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வருஷமாலை கிரயம் ரூ. 4—0—0
ரிவோல்ட்டு ஒருவருஷமாலை பைண்ட் செய்தது கிரயம் ரூ. 4—0—0

**மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,**
ஈரோடு.

## சுயமரியாதை இயக்கப் பத்திரிகைகள்.

### 'தமிழன்'

வாரப்பதிப்பு
உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு ,, 4—0—0
ஆசிரியர்: ஜி, அப்பாதுரையார்,
விலாசம்:—
மானேஜர் "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை P. O.
கோலார் தங்கவயல் (S. I.)

### முன்னேற்றம்.

வாரப்பதிப்பு.
சிங்கப்பூரிலிருந்து வெளிவருவது
உள்நாடு சந்தா $. 5—0—0
இந்தியாவுக்கு ரூ. 8—0—0
ஆசிரியர்:- கோ. சாரங்கபாணி.
விலாசம்:—
மானேஜர்: "முன்னேற்றம்"
152 சிலிகிரோட், சிங்கப்பூர்.

### "சமதர்மம்"

சுயமரியாதை மாதப் பத்திரிகை.
ஆசிரியர்:— ஆர். ராஜகோபாலன்
வருடசந்தா உள்நாடு 1—0—0.
,, வெளிநாடு 1—8—0.
மானேஜர்,
சமதர்மம் ஆபீஸ்,
230-30வது வீதி ரெங்கூன்.

### சுயராஜியம் யாருக்கு?

தோழர் ம.சிங்காரவேலு பி.ஏ., பி. எல்., அவர்களால் எழுதியது. இதில் ஜாதிமதக்கொடுமை, சமூக இன்னல்கள், அரசியல், பொருளாதாரக்கொடுமைகள், காங்கிரசின் போலி வேஷம், தீண்டாமைஒழிப்பதின் அவசியம் முதலியனபற்றி இனிய, எளிய நடையில் வெகு தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

பிரதி 1க்கு விலை 0—1—0.
கிடைக்குமிடம்:—
குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

## ஆனந்தரின்

இந்திய பற்பசை (டூத்பேஸ்ட்)
பற்களைப்பளிங்கு போலாக்கும். எல்லா ஷாப்புகளிலும் கிடைக்கும்.

தமிழ் வைத்தியசாலை,
221, தங்கசாலை வீதி,
சென்னை




## Read.
## The 'Citizen'

and become a True Citizen.

The only Monthly Magazine in India purely devoted to the civic, Social and economic Interests of the Indians. Annual Subscription Rs. 2—0—0.

For advertisement please apply to:—
The Publisher
The Citizen
86, East Andar Street,
Teppakulam, Trichy.

## சத்தியாக்கிரகமா? சண்டித்தனமா?

மேற் கண்ட 6—9—31 ந் தேதி "குடி அரசி"ல் வெளியான "சத்தியாக்கிரகமா சண்டித்தனமா" என்ற தலையங்கத்தை புத்தக ரூபமாக வெளியிட்டிருக்கிறோம். இதை விநியோகிக்க விருப்பமுள்ள சுயமரியாதை அன்பர்கள் முன்பணமனுப்பிப் பெற்றுக்கொள்ள வேண்டுகிறோம். 100 புஸ்தகம் விலை ரூ. 0—12—0.

1 ரூ. ஸ்டாம்பு அனுப்பினால் 100 புஸ்தகம் புக் போஸ்டில் அனுப்பப்படும். மானேஜர்,
குடி அரசு, ஈரோடு.

## "சாமிகளின் அடிமை"

"இந்திய மாதா" என்னும் நூலை இயற்றிய மிஸ். மேயோவால் எழுதப்பட்ட ஆங்கில நூலின் மொழிபெயர்ப்பு. இதில் ஹிந்துக்கள் என்போரின் கடவுள், மதம் என்பவற்றின்பேரால் அநுஷ்டித்துவரும் கொடிய, அநாசாரபழக்க வழக்கங்களைக்கண்டுணரலாம், இனிய தமிழ், எளியநடை, ருசிகர கதைகள்.

அசல் விலை ரூ. 1—8—0.
இப்போதைய விலை ரூ. 0—12—0.
கிடைக்குமிடம்:—
குடி அரசு புத்தகசாலை, ஈரோடு.

பண்டிதர். உயர்திரு. சாமி சிதம்பரனார் அவர்களியற்றிய

## மாதர் சுதந்திரம் அல்லது
# பெண் மக்கள் பெருமை.

என்னும் அரிய நூல் விலை அணு 8. (எட்டு)
கிடைக்குமிடம்:—"குடி அரசு" புத்தகாலயம் ஈரோடு,
இம்பீரியல் பிரஸ், மாயவரம்.

## "பசிக்கும் வயிற்றிற்கு ஒரு கவள சாதம் கொடுக்க சக்தியற்ற சாமிகளும், சாஸ்திரங்களும் இந்நாட்டுக்கு வேண்டியதில்லை"

# தமிழர் மகாநாடா? சைவக்கூட்டமா?

## தமிழர் சமவுரிமைக்கும், தமிழ் மொழி வளர்ச்சிக்கும் உண்மை வழிகாணுமா?

### சீர்திருத்தக்காரர்களே! ஏமாறாதீர்கள்!

(சாமி, சிதம்பரனார்)

தஞ்சை, திருச்சிஜில்லாத் தமிழர் மகாநாடு என்னும் பெயருடன் ஒரு மகாநாடு "தமிழர் மகாநாடு" "தமிழ்ப்புலவர் மகாநாடு" தமிழ் மாணவர் மகாநாடு என மூன்று பிரிவுகளாக திருச்சிஜில்லாவைச் சேர்ந்த துறையூரில் நடைபெறப் போவதாகச் சிலமாதங்களாகப் பத்திரிகைகளில் அறிக்கைகள் வெளி வந்துகொண்டிருக்கின்றன.

இம்மகாநாட்டை முதலில் 1932-ஜூலை மாதம் 23, 24-ம் தேதிகளில் கூட்டுவதாகத் தீர்மானிக்கப்பட்டு இப்பொழுது ஆகஸ்ட் மாதம் 6, 7-ம் தேதிகளில் கூட்டுவதாக மாற்றியிருக்கிறார்கள் என்ற செய்தியையும் பத்திரிகைகளின் வாயிலாக உணர்ந்தோம்.

இம்மகாநாடு சம்பந்தமான அறிக்கைகளைப் பத்திரிகைகளில் கண்ட ஆரம்பகாலத்திலேயே இதைப்பற்றி நமக்கு ஒரு சந்தேகம் உண்டாயிற்று. இம்மகாநாட்டை மூன்று பிரிவாகப் பிரித்து நடத்தும் காரணத்தினால் இது சமூக சீர்திருத்தம் சம்பந்தமான மகாநாடா? அல்லது வெறும் மொழி சம்பந்தமாக மட்டிலும் கவனிக்கக்கூடிய மகாநாடா? அல்லது அரசியல் நோக்கத்தை அடிப்படையாகக்கொண்ட மகாநாடா? அல்லது எல்லாம் சம்பந்தப்பட்ட மகாநாடா? என்ற சந்தேகங்களுக்கு உள்ளானோம்.

இதன்பின் சென்ற மாதத்தில் தஞ்சைக்கரந்தைத்தமிழ்ச் சங்கத்தின் ஆண்டு விழாவின்போது அச்சங்கத்தின் தலைவர் திரு. த. வே. உமாமகேஸ்வரன்பிள்ளை அவர்கள் வீட்டில் தமிழர் மகாநாடு சம்பந்தமாக ஒரு சிறு கூட்டம் நடைபெற்றது. அப்பொழுது மேற்கண்ட நமது சந்தேகங்களை மகாநாட்டு நிர்வாகிகளிடம் தெரிவித்தபோது, அவர்கள் தமிழர்களின் சமூகச்சீர்திருத்த சம்பந்தமாகவும், மொழி வளர்ச்சி சம்பந்தமாகவும் ஆலோசனைசெய்வதே மகாநாட்டின் நோக்கமென்று தெரிவித்தார்கள். மகாநாடு சமய சம்பந்தமுடையது அன்று என்பதையும் தெரிவித்தனர். இவ்வாறு அவர்கள் தெரிவித்த பின்னர், இத்தகைய நோக்கமுடைய மகாநாட்டைச் சீர்திருத்தக்காரர்களாகிய நாங்கள் ஆதரிப்பதற்குத்தடையில்லையென்று கூறினோம். நமது நோக்கமாகிய சீர்திருத்தக்கொள்கைகளை ஆதரிக்கின்றவர்கள் எந்தக் கூட்டத்தினர்களாயிருந்தாலுஞ் சரி, அவர்கள் வைதீகர்களாயினும், லௌகிகர்களாயினும், அரசியல் வாதிகளாயினும், மதவாதிகளாயினும் அவர்களுடன் சீர்திருத்த விஷயத்திற்காக ஒத்துழைப்பது எவ்வகையிலும் தவறாகாதென்பது நமது அபிப்பிராயமாகும். இக்காரணத்தாலேயே நாம் மகாநாட்டில் பங்கெடுத்துக் கொள்வதாகவும் கூறினோம்.

ஆனால் மகாநாடு நடத்த முன் வந்திருப்பவர்களும், அதன் நிர்வாகத்தில் சம்பந்தப்பட்டிருக்கின்றவர்களும், சைவ சமயப்பற்று மிக உடையவர்களாக இருப்பதனாலும் அவர்கள் தமிழ்மொழி என்ற பெயரைச் சொல்லிக்கொண்டு சைவ சமயத்தை வளர்க்க இதுவரையிலும் முயன்று கொண்டிருப்பவர்களாதலாலும், இம்மகாநாடு சீர்திருத்தத்தின் பேராலும், மொழியின் பேராலும் சமயத்தை வளர்க்க ஏற்பட்ட மகாநாடாக இருக்கக்கூடும் என்றே இன்னும் பலர் மனத்தில் சந்தேகங்கள் இருந்து கொண்டிருக்கின்றன. இதற்குக் காரணம் இம்மகாநாட்டார் வெளியிட்ட அறிக்கைகளில் "சமய சம்பந்தமான விஷயங்கள் மகாநாட்டில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப் படமாட்டாது" என்று ஒருவிதமான உறுதி மொழியும் கூறாதிருப்பதேயாகும். இவ்வாறு ஒரு உறுதி மொழியைத் தெரிவித்திருப்பார்களானால் யாரும் சந்தேகப்படுவதற்கு இடமில்லை. ஆனால் அவர்கள் ஒரு அறிக்கையிலும் இத்தகைய கருத்தை வெளியிடவேயில்லை.

இம்மகாநாடு சம்பந்தமாக வெளியிடப்பட்டிருக்கும் 9-வது அறிக்கையில் "மகாநாட்டின் நோக்கங்கள்" என்ற தலைப்பின் கீழ், கீழ்வரும் விஷயங்கள் காணப்படுகின்றன.

1. "மக்களுள் வேறுபாடு பிறப்பினால் இல்லை என்பதை உணர்ந்து ஏழை மக்களை நம்மைப்போல் மேன்மையடைவிக்கவும், சுதந்தர தாகங் கொண்டுள்ள நம்முடைய நாட்டிற்குக்கல்வியை அடிப்படையாகக்கொண்டாலன்றி அஸ்திவாரமில்லாத வீடுபோலாகுமாதலின் தாய்மொழியைத் தற்காலத்திற்கு ஏற்றமுறையில் பயில்வித்து நம்முடைய நாட்டைச் சீர்திருத்தவும்"

2. "சோம்பேரிகள் உண்டு உறங்குவதற்கு இடமாக அமைந்துகிடக்கின்ற பொதுச்சொத்துக்களை நம்முடைய ஏழைமக்களின் கைத்தொழில் கல்வி முதலியவற்றிற்குப்பயன்படுத்த முயற்சிக்கவும்"

3. "அறிவு, ஆற்றல், ஆண்மை, கல்வி, செல்வம், கைத்தொழில், வாணிபம் முதலியவற்றில் ஏனைய நாடுகளினின்றும் நம்முடைய தமிழ் நாடு ஒரு சிறிதும் பின்னிட்டதன்றென்பதை மெய்ப்பிக்கவும்"

4. "தமிழ் நாட்டில் உள்ள எல்லாமக்களும் தங்கள் சுயஉரிமையுடன் யாதொரு தடங்கலுமின்றி வழிபடத்தக்க வேற்றுமையில்லாத அன்பு வடிவாகிய ஓர் தெய்வவழிபாட்டைக் கைக்கொள்ளச் செய்யவும்" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதிலேயே சில சந்தேகங்கள் கொள்ளவேண்டியிருக்கிறது. 3-வது பிரிவில் குறிப்பிட்டிருக்கும் விஷயமும், 4-வது பிரிவில் குறிப்பிட்டிருக்கும் விஷயமும் சந்தேகப்படுவதற்கு இடங்கொடுக்கக் கூடியனவாக இருக்கின்றன.

தற்காலத்தில் மற்றைய நாடுகளைக் காட்டிலும் அறிவிலும், ஆற்றலிலும் ஆண்மையிலும், கல்வியிலும், செல்வத்திலும், கைத்தொழில்களிலும், வாணிபத்திலும், மற்றும் பல வகையிலும் நமது நாடுதான் பிற்போக்கான நிலைமையில் இருந்து வருகிறது என்பது மலைமேல் ஏற்றிய விளக்குப்போன்றதாகும். உண்மை இவ்வாறிருக்க மேற்கூறியவைகளில் "ஏனைய நாடுகளினின்றும் நம்முடைய தமிழ்நாடு ஒருசிறிதும் பின்னிட்டதன்றென்பதை மெய்ப்பிக்கவும்" என்று குறித்திருப்பதில் என்ன பொருளிருக்கின்றதென்று கேட்கின்றோம். தமிழ்ப்புலவர்கள் இப்பொழுதும் மேடைகளில் நின்று கொண்டு "தமிழ்மொழி எம்மொழிக்கும் பிற்பட்டதன்று. எல்லாக்கலைகளும் இம்மொழியில் இருக்கின்றன. இம்மொழியில் இல்லாத கலைகள்வேறு எம்மொழியிலும் இல்லை. இம்மொழி சிவபெருமானாலேயே அருளிச் செய்யப்பட்டது. ஆனால் அவைகள் அந்தப்பழைய நூல்கள் எல்லாம் கடலில் அமிழ்ந்துபோய் விட்டன" என்று சொல்லி முடிப்பதுபோல் தமிழர்கள் மகாநாட்டிலும் தமிழ் நாட்டின் பண்டைப்பெருமையைப்பேசித்தீர்த்து விடப்போகிறார்களா? என்று எம்போன்றவர்கள் கேட்பதும், ஐயமுறுவதும் இயல்பேயன்றோ? அந்தக்காலத்தில் தமிழர்கள் எலிமயிர்க்கம்பளம் நெய்து பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தார்கள். கிரேக்க தேசத்துக்கும், தமிழ் நாட்டுக்கும் போக்குவரவு இருந்தது. எகிப்துதேசத்திலும் தமிழர் நாகரிகம் பரவியிருந்தது. கப்பல்கள் கட்டுவதிலும், போர் செய்வதிலும், சித்திரவேலைப்பாடுகளாலும், தமிழர்கள் சிறந்திருந்தனர்" என்று பெருமைபேசிவிடுவதனால் மாத்திரம் தற்காலத்தில் உள்ள இழி நிலைமையைப் போக்கி விடமுடியுமா? ஆகையால் மேற்காட்டிய மூன்றாவது பிரிவை "அறிவு, ஆற்றல், ஆண்மை, கல்வி, செல்வம், கைத்தொழில், வாணிபம் முதலியவற்றில் தமிழ் நாட்டை ஏனைய நாடுகளுக்குச் சமமாக்க முயற்சிக்கவும். என்று குறிப்பிட்டிருப்பார்களானால் யாரும் சந்தேகப்பட இடமிருந்திராது.

அடுத்தபடியாக 4-வது பிரிவை எடுத்துக்கொள்ளுவோம். அப்பிரிவுபற்றி இம்மகாநாட்டில் ஆலோசிக்க வேண்டியது அவசியந்தானா? என்பது முதற் கேள்வி, அப்பிரிவிற் கண்டபடி ஒரு முடிவுக்கு வர முடியுமா? என்பது இரண்டாவது கேள்வி, எண்ணற்ற சமயங்களும், எண்ணற்ற கடவுள்களும் மலிந்து கிடக்கும் நமது நாட்டில், ஒரு தெய்வ வழிபாட்டை ஏற்படுத்துவது முடியாத காரியம். ஒவ்வொருவரும் தாம் தாம் நினைத்துக்கொண்டிருக்கும் கடவுளையே பொதுக்கடவுள் எனக்கூறி அவ்வழிபாட்டை ஒப்புக் கொள்ளச் செய்யவே முயலுவார்கள். இவ்வகையில் ஒருவருக்கொருவர், கருத்து வேற்றுமைகளும், பிளவுகளும் ஏற்படுவது திண்ணம்.

சைவத் தமிழ்ப்புலவர்களெல்லாம், "வேற்றுமையில்லாத அன்பு வடிவாகிய ஓர் தெய்வம்" சிவன் தான் என்று கூறுவார்கள். அவர்கள் கூட்டமும், அவர்களை ஆதரிக்கின்றவர்களின் கூட்டமும் மிகுதியாக உள்ள ஒரு கூட்டத்தில் "சிவபெருமான் வழிபாடுதான் வேற்றுமையில்லாத அன்பு வடிவாகிய ஓர் தெய்வவழிபாடு" என்று தீர்மானிக்கப்படக் கூடலாம். இவ்வாறு தீர்மானிக்கப் படுமானால் இதுவும் மற்றொரு சைவப்பெரியார் மகாநாடு என்பதைத் தவிர வேறென்ன? என்று பலர் கேட்க இருக்கும் கேள்விகளுக்கு என்ன சமாதானம் கூறமுடியும்? ஆகையால் 4-வது பிரிவு அவசியமே இல்லை.

இனி மற்றொரு கேள்வி எழுந்திருக்கிறது, அதாவது, "தமிழர் மகாநாடு" என்று கூட்டினால்போதாதா? அதிலேயே, தமிழர்களின், அரசியல், சமூகம், மொழி முதலிய எல்லா வகையும் சம்பந்தப்பட்டவைகளை ஆலோசித்து முடிவு செய்து கொள்ளக்கூடாதா? "தமிழ்ப்புலவர் மகாநாடு" "தமிழ்

(தொடர்ச்சி 18ம் பக்கம் பார்க்க)

# நம்பிக்கையீனத்தால் மனித சமூகம் அடைந்துள்ள இலாபம்.

## (Humanity's Gain From Unbelief.

### (By Charles Bradlaugh)

[சாமவேதனர்]

(முன் தொடர்ச்சி)

இனி, கிறைஸ்தவம் என்றால் என்ன? விவிலியம் என்ற நூலிலுள்ள பழையபுதிய, ஏற்பாடுகளிலிருந்து கிறைஸ்தவ சமயத்தின் மூலக்கொள்கைகளை அறியலாம். பழைய ஏற்பாட்டில் கொடிய சட்டங்களும், குரூர விதிகளும் அடங்கியுள்ளன. எனவே தற்காலக்கிறைஸ்தவர் சிலர் தமது கிறைஸ்தவத்திற்கும் பழைய ஏற்பாட்டிற்கும் தொடர்பில்லையென்றும், தமது சமயக்கொள்கைக்கும், பழைய ஏற்பாட்டின்சிலபகுதிகளுக்கும் பெரிதும் வேற்றுமையுண்டென்றும் கூறித் தப்ப முயல்கின்றனர். இவ்வாறு கிறைஸ்தவர் சிலர் கூறுவதற்குக் காரணமென்ன? பழையஏற்பாட்டின் மிலேச்சத்தனமான சட்டங்கள் ஆகியவற்றைக் கண்டித்து அறிஞர் பேசியும், எழுதியும் வந்தனர் "கடவுள்" பழைய ஏற்பாட்டில் இரக்கமற்ற ஓர் பொல்லா அரக்கனாகவும், கள்வனாகவும், காமியாகவும் கொலைஞனாகவும் காட்டும் பாகங்கள் உள்ளன. அவற்றைக் கண்டித்தோரை கிறைஸ்தவ சபை "பதிதர்" என்றும், "அவிசுவாசிகள்" (Heretics & Infidels) என்றும் தூற்றி வந்தது. ஆனால் காலஞ்செல்லச் செல்ல, அறிவு ஓங்க, ஓங்க "பதிதர்" அவிசுவாசிகளின் கூற்றின் உண்மை வெளியாயிற்று. எனவே சீர்திருந்திய கிறைஸ்தவ சபைகள் தஞ்சமயத்தை காலத்திற்கேற்ப மாற்றியமைத்தனர். நம்பிக்கையீனர், நம்பிக்கையாளருக்கு உதவி புரிந்தமையை இங்கு காண்க! தண்ணளியுடையமக்கள் பழைய ஏற்பாட்டின் மிருகத்தனத்தையும் கண்டு வெறுத்தொதுக்கினர். ஆதலின் சீர்திருந்திய கிறைஸ்தவர் பழைய ஏற்பாட்டைத் தள்ளினர். விவிலியத்தின் பழைய, புதிய ஏற்பாடுகளை மனிதனுக்கு "கடவுள்" அருளிய வெளிப்படுத்தல்கள் என்று நம்பினாலன்றி கிறைஸ்தவத்திற்கு மற்ற மதங்களைவிட அதிக உயர்வோ, மதிப்போ அளிக்க முடியாது. கிறிஸ்தவருக்கு விவிலியத்தைத்தவிர்த்து "வெளிப்படுத்தப்பட்ட" "திருமறைகள்" வேறில்லையல்லவா? இருப்பின் அவை யாவை? சீர்திருந்திய கிறைஸ்தவர் பழைய ஏற்பாட்டைத்தள்ளி விடுதற்குக் காரணம் என்னவெனில் அவர்கள் அறிஞர்கள் அதாவது "நாத்திக மணம் வீசும் நம்பிக்கையீனர்கள்" எழுதிய சிறந்த நூல்களிலிருந்தும், கவிகளிலிருந்தும் பழைய ஏற்பாட்டைக் காட்டிலும் பன்மடங்கு பலவழியிலும் சிறந்த "திருமறை"யை ஆக்கக்கூடுமாதலாலென்க. இத்தகையோர் கிறைஸ்தவத்தைத்தாண்டிக் கடந்த "ஞானிகளே யாகுவர். ஈசுவின் "சுயமேதியாகபலியை" (பிறர் பொருட்டு தன்னுயிரை ஈதல்) ஒப்புக்கொள்ளாவிடில் கிறைஸ்தவத்தை ஒருசமயமாக ஏற்க வழியில்லை. ஆனால் ஆதாமின் (முதல் மனிதன்) வீழ்ச்சியை (அவன் புனிதனாய்ப்பாவமற்றவனாய்ப் படைக்கப்பட்டான்) ப்பற்றிய கதையை நம்பாவிடில் அவன் புரிந்த பாவத்திற்காய்க் "கடவுள்" மனிதவருக்கத்திற்கு அளித்த தண்டனையை எவ்வாறு ஏற்றுக் கொள்வது? இதிலிருந்து பழைய ஏற்பாட்டிற்கும், புதிய ஏற்பாட்டிற்கும் ஒற்றுமையிருப்பதைக்காண்க. சீர்திருந்திய முன்னேற்றக் கிறைஸ்தவர் பழைய ஏற்பாட்டைத்தள்ளிவிடுவதாயின் அவர் தம்மை எங்ஙனம் சரியான கிறைஸ்தவர் என்று கூறிக்கொள்ளக்கூடும்? பெரிய பிரித்தானியாவிலும், அமெரிக்காவிலும் பழைய ஏற்பாடுகள் கிறைஸ்தவ சமயத்தின் ஆதாரங்களென மக்கள்மீது சுமத்தப்பட்டிருக்கின்றன. அவை "கடவுளின் அருள் மொழி" யல்லவென்று கூறிடில் அது சட்ட விரோதமாகும். அதற்குத் தண்டனையாக அபராதமும், மறியலும் கிட்டும். சில வேளை மதப்பித்தர்களது ஆவேசத்திற்குள்ளாக நேரிடும். அங்ஙனமாயின் சந்தேகிகளது உயிருக்கே ஆபத்தாய் முடியும்.

இங்கு கிறைஸ்தவத்தைத் தள்ளிவிடுவதென்றால் பழைய, புதிய ஏற்பாடுகள் "கடவுளின் அருள் மொழி" யென்பதை மறுப்பதாகுமென்க. விவிலியத்தில் அருள் மொழிகளில்லை அதன் கொள்கைகள் மிலேச்சத்தனமானவை. எனவே தள்ளுக உதறி, அன்றியும் வைதிகச் சமயங்களான ரோமச்சபை, இங்கிலாந்து சபைகளும். அவைகளின் "இறையதிகாரம் பெற்ற" போதனைகள், உபதேசங்களும் இக்கட்டுரையில் மறுத்தொதுக்கப்படுகின்றன. அவர்களது விசுவாசப்பிரமாணங்கள், புரோகிதத்திரு சிருபங்கள், பிரார்த்தனைப் புத்தகங்கள், அதிகாரங்கள் ஆணைகள், பிரசங்கங்கள் பிறவும் கவைக்குதவாதவை யென்று தள்ளப்படுகின்றன. உலுத்தர் கல்வீன், உவேசிலி முதலியோரது பிரிவினைச் சமயங்களின் கதியும் அஃதே.

கிறைஸ்தவக் குருக்கள் தருக்கமிடுகையில் உலகின் தேர்ச்சியும், முன்னேற்றமும், நாகரிக உணர்ச்சியும் கிறிஸ்தவத்தால் விளைந்த பலன்களென வீறு பேசுவர். அதற்குக் காரணமென்னவெனில் மக்களுக்குத்தொண்டாற்றி நன்மை புரிந்த பெரியார்கள் பலர் ஏதாவதொரு கிறைஸ்தவ சபையில் பெயரளவில் (Nominal) அங்கத்தினராயிருந்தமையாலென்க. ஆனால் மக்களுக்கு நற்றொண்டாற்றிய புனிதமாந்தர் அவ்வாறு பயனுடை வாழ்க்கை நடத்தி உலகுக்கு ஒளியாயிருந்தது அவரது கிறிஸ்தவத்தாலன்று; ஆனால் அதற்கு, அதன் கொள்கைகளுக்கு மாறாகவே யென்கிறேன். (not because of christianity but in spite of it.) அவர்கள் எவ்வளவு விவிலியத்தின் மடத்தனமான கொள்கைகளை மறுத்து, எதிர்த்து, ஒதுக்கித் தள்ளினரோ அதேயளவுக்கு மக்கட்கு நன்மை புரிந்தனர். விவிலியத்தின்பிற்போக்கான மூடக்கோட்பாடுகளில் அப்பெரியார்களுக்கு நம்பிக்கையிருந்தால் அவர்கள் பொது நலத்தை நாடியேயிரார். "கிறைஸ்தவம், கடவுளிடத்திலிருந்து அற்புதமாய்ப் பெற்ற மிக்க வன்மை பொருந்திய அதிகாரத்தால் மத நம்பிக்கையின் மீது ஆதிக்கஞ் செலுத்துகின்றது. மனிதவுணர்ச்சிகளையும், எண்ணங்களையும் மட்டுப்படுத்தவும், திட்டப்படுத்தவும் அதற்கு உரிமையுண்டு. ஏனெனில் இறை அருள்பெற்ற புனிதரால் எழுதப்பட்ட புனிதத்திருமறைகளையுடைத்தாயிருக்கின்றமையால்" என்றோர் கிறைஸ்தவ குரவர் எழுதுகின்றார். நம்பிக்கையீனராகிய நாங்கள் இந்த அதிகாரத்தை ஒப்புக்கொள்வதில்லை. எனவே கிறைஸ்தவ சபையின் ஆதிக்கம் எங்கள் மீது செல்லாது. மனிதவுணர்ச்சியையும், எண்ணத்தையும் மட்டுப்படுத்தும் உரிமையையும் நாங்கள் மறுக்கின்றோம். எவரது ஆணைக்கும் அல்லது எச்சமயத்தின் அதிகாரத்திற்கும் உடன்படாது, இணங்காது தன் மூப்பாய், தன் மனம் போன போக்கில் எவன் தன் சிந்தையைச் செலுத்துகின்றானோ அவனே மனிதனெனவும், அத்தகைய சிந்தையாளரால்தான் உலகில் பெரிய எண்ணங்களும், ஆழ்ந்த கருத்துச் செறிந்த சிறந்தசொற்றிரட்டுகளும் எழுகின்றனவென்றும் நம்புகின்றோம்.

### அடிமை வர்த்தகத்தை அடியோடழித்ததேது?

உலகில் அடிமை வர்த்தகத்தை அடியோடொழிக்கக் காரணமாயிருந்ததெது? சில நாடுகளில் அடிமைகள் விடுதலையடையவும், சிலவற்றில்அடிமை வியாபாரம் ஒழியவும் முயன்றதெது? நாகரிகத்திற்கும் அடிமைத்தனத்துக்கும் வெகு தொலையென்று கூறியதார்? நம்பிக்கையீனமும், நம்பிக்கையீனருமே யென்க. அடிமைத்தனத்தை யெதிர்த்த ஒரு சமயத்தைப்பற்றியும் எனக்குத்தெரியாது. கிறைஸ்தவரும், கிறைஸ்தவ குருக்களும் அடிமைத்தனத்தை யாதரித்தே வந்தனர். பழைய ஏற்பாடு அடிமைத்தனத்திற்கு ஆதாரமாய்ப் பல விதிகளைக் கொண்டிருக்கிறது. புதிய ஏற்பாடோ அதை மறுத்து யாதுஞ் சொல்லவில்லை. கிறைஸ்தவ ஊழியின் (Xtian era) 19ம் நூற்றாண்டுகள் கழிந்த பின்னரும் அடிமைத்தனமும், வியாபாரமும், கிறைஸ்துவ உலகில் தாண்டவம் புரிகின்றன. விடுதலைபோர்க்குரல் ஒலித்து இன்னும் ஒரு நூற்றாண்டும் முற்றுப்பெறவில்லை. சில ஆண்டுகளுக்கு முன்புதான் அமெரிக்க ஐக்கிய மாகாண அரசியல் மன்றத்தில் அடிமை விலக்கு விதி சட்டமாக்கப்பட்டது. வடஅமெரிக்காவும் அடிமைத்தனத்தை விலக்க முயற்சி செய்யப்பட்டபொழுது "கிறைஸ்துவ" சபைகள் பலவும் ஒருங்கு திரண்டு எதிர்த்தன. ஆலயப்பிரசங்கமேடையும், "கிறைஸ்துவ" ப்பத்திரிகைகளும் சங்கங்களும் குரவர் குழாங்களும் மிக்க வன்மையாய் அடிமை மீட்பருக்கு விரோதமாய்ச் சமராடின. அவற்றின் செல்வாக்கு அடிமை வர்த்தகருக்குச் சார்பாகச் செலவிடப்பட்டது. இக்காலக்கிறைஸ்துவர் சிலர் அடிமைத்தன ஒழிவுக்குக்கிறைஸ்துவ சபை முக்கிய காரணமாயிருந்ததென்று கூறுகின்றனர். அடிமை மீட்பவருட் சிலர் "கிறைஸ்துவ" ராயிருந்தமையினால் அவர்கள் அவ்வாறு சொல்ல முற்படுகின்றனர். ஆயின் அடிமைத்தனத்தை ஒழிக்கங்கணங்கட்டியுழைத்த உண்மையாளரான ஆண்களும், பெண்களும் தாம் நம்பிய கிறைஸ்துவ சமயக்கொள்கைகளுக்கு அவரையறியாமலே எதிரிகளாயினர். அவர்களது தண்ணளி (சீவகாருண்யம்) அவர் நம்பிய சமயத்தைக்காட்டிலும் மேன்மையுடையத்தாயிருந்தது. ஐரோப்பிய வல்லரசுகள் அடிமைத்தனத்தை ஒழிக்க ஒப்புக்கொண்டு இன்னும் 76 ஆண்டுகள் தானும் முடியவில்லை. 19 நூற்றாண்டுகளாய் கிறைஸ்தவம் ஐரோப்பிய வல்லரசுகள்மீது அதன் செல்வாக்கையேன் உபயோகிக்கவில்லை? கிறைஸ்துவ பிரான்சு (France) அடிமை வர்த்தகம் புரிந்தகாலை அது அடாதசெயலென்று "பதிதனான" கொண்டார் செற் என்பவரே கூறி மன்றாடினர். பல நூற்றாண்டுகளாக "கிறைஸ்துவ" ஸ்பெயினும் [Spain] "கிறைஸ்துவ" போர்த்

தொடர்ச்சி 16-ம் பக்கம் பார்க்க.

# சமதர்ம முரசு.

## “அழகும், இன்பமும்” தனிவுடைமையா? பொதுவுடைமையா?

(தோழர் A. இரத்தினசபாபதி)

“அழகு” (Beauty) என்ற ஒரு சொல், ஓர் தனிப்பட்ட வசீகரத்தைக்கொண்டதாயிருக்கின்றது. உலகமே “அழகு” என்ற ஒன்றில்தான் இயங்கிக்கொண்டிருக்கிறது. ஆனால் சற்று உற்றுணர்ந்தாலன்றி, இது எளிதில் தெள்ளிதாய் விளங்காது. ஆதலின் ஆதனை ஈண்டு சற்று ஆராய்வோம்: கருத்தூன்றிக் கவனிக்க.

உலகில் ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு ஸ்திரீயாலும் தத்தமது வாழ்நாளில் காண விரும்பப்படுவது எது? உலகில் வாழ் உயிரனைத்திற்கும் மகிழ்ச்சியளிக்க வல்லதெது? மக்களைப் போலவே மிருகங்களாலும், பறவைகளாலும், ஊர்வனவாலும், நீர்வாழ்வனவாலும் அடைய—அனுபவிக்க— விரும்பப்படுவதெது? உலக வாழ்க்கையில் ஒவ்வொரு உயிரும் “ருசி” கண்டு மகிழச்செய்வதெது? பொதுவாக உலகிலுள்ள உயிர்களெல்லாம், தேடிக்கொண்டிருப்பதெது? இன்பம்! இன்பம்!! இன்பமேயன்றோ?

ஆம்! உலகிலுள்ள ஜீவராசிகளெல்லாம் (மனிதனுட்பட) தம் வாழ்நாளில், அனுபவிக்க விரும்புவது இன்பத்தையே! இன்பமான வாழ்க்கையையே! என்பதில் ஏதேனும் ஐயமுண்டோ? இல்லை! இல்லை!! இது மக்களனைவரும் பிரத்தியட்சமாகக் கண்ட பெரியஉண்மையாகும்! உலக வாழ்க்கையில் இந்த இன்பத்தை அனுபவிக்கத்தான் ஒவ்வொரு மனிதனும் விரும்புகின்றான்! ஒவ்வொரு ஸ்திரீயும் விரும்புகின்றார். அதே போன்று கண்ணுக்குத்தெரியாத அணுப்போன்ற பிராணி முதல் யானை, அல்லது திமிங்கிலம் போன்ற உயிர்ப்பிராணிகளெல்லாம், ஒருமுகமாய் இன்பத்தையடையவேவிரும்புகின்றன. அதற்காக வழி தேடுகின்றன. பாடுபடுகின்றன.

மனிதன் பூமியில் பிறந்தது முதல் இறக்கும் வரை தன் தேகத்தை நோயற்ற நிலையில் சுகதேகமாக வைத்துக்கொள்ள விரும்புகின்றான். ஏதனால்? மனிதனது தேகம் ஆரோக்கியத்துடனில்லாதவரையில் அவன் பலவிதக் கஷ்டங்களையும் நஷ்டங்களையும் அனுபவிப்பான். கஷ்டமும் நஷ்டமும், தோன்றிய இடத்தில் அவற்றால் பெறப்படுவது துன்பமேயன்றோ? சுகவீனத்தால் துன்பத்தை அனுபவிப்பதுடன், ஆரோக்கியத்தால் மனிதன் அடையத்தக்க சுகத்தையும் லாபத்தையும் அவன் இழக்கவேண்டியவனாகிறான். சுகமும், லாபமும் அழிந்துவிட்ட இடத்தில் கஷ்டமும், துன்பமும் தோன்றுகின்றன. சகஜமாகவே, ஒரே விஷயத்தைப் பொறுத்து ஓர் மனிதன் அதில் ஒரே நேரத்தில் துன்பத்தையும் இன்பத்தையும் அனுபவிக்க முடியாதல்லவா? ஏனெனில் துன்பமும் இன்பமும் ஒன்றுக்கொன்று எதிரிடையான குணத்தை உடையனவாக இருப்பதால்தான் (துன்பம் × இன்பம்).

மனிதன் சுகவாழ்வை—ஆரோக்கிய வாழ்வை விரும்புவது போலவே, தன்வந்தனாக வாழவும் விரும்புவதை நாம் காண்கிறோம். ஏன்? உலகின் பெரும் பாகத்தின் இன்றைய நிலைமையில், தனவந்தர்கள் தான் எல்லாவித சுகபோகங்களையும் அனுபவிக்க முடிகிறது. சுகபோகங்களிலிருந்துதான் இனபம் தோன்றுகின்றது. சுகபோகங்களின் பயன் இன்பமே! பெரிய வியாபாரம் செய்து முதலாளியாவதும், ஏழைகள் கடல் கடந்து காப்பித்தோட்டங்களிலும், தேயிலை, ரப்பர்த்தோட்டங்களிலும் சென்று அரும்பாடுபடுவதும், இந்த நிமிஷத்தில் தான் நிம்மதி என நிர்ணயிக்க முடியாதபடி எந்த நேரமும் ஆபத்தை எதிர் நோக்கும் சுரங்கங்களில் ஆயிரக்கணக்கான மக்கள் இறங்கி உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு வேலை செய்வதும், ஏன்? பணம் சம்பாதிக்கத் தானல்லவா?—இவ்விதக் கஷ்டங்களுக்கிடையில் பணம் சம்பாதிக்க மக்கள் ஏன் முயல்கின்றனர்? அத்திரவியம் உலக இன்பங்களையளிக்கும் சாதனமாயிருப்பதால் தான்! உலகமே பணமயமாயிருக்கிறதன்றோ?

மானிட வகுப்பில் ஆண் பெண்கள் உள்ளிட்ட, எல்லா ஜீவராசிகளிலுமுள்ள ஆணினங்களும் பெண்ணினங்களும் பருவ காலத்தையடைந்தவுடன் தத்தமக்குரிய,—மனதிற்குகந்த ஓர் துணையைத் தேடி அடைவதில் விசேஷ கவனம் செலுத்துவதை நாம் காண்கிறோம். பருவமடைந்த ஆணினம் ஓர் பெண்ணினத்தையும், பெண்ணினம் ஓர் ஆணினத்தையும் அடைய ஏன் முயலவேண்டும்? தகுந்த ஓர் துணையைத் தேடிக்கொள்வதற்காக ஏன் அவ்வளவு விசேஷ கவனம் எடுத்துக்கொள்ள வேண்டும்? தாம் விரும்பும் ஜோடியின் தன்மையை, நடை, உடை பாவனைகளைக் கொண்டு கண்டுபிடிக்க மக்கள் ஏன் பிரயாசை எடுத்துக் கொள்ளவேண்டும்? மணத்திற்குரிய எத்தனையோ ஆடவரும் பெண்டிரும் நாட்டிலிருக்க, அத்தனை கோடிக்கணக்கான பெண்களில் ஓர் பெண்ணைத்தனக்கெனத் தெரிந்தெடுத்துக் கொள்ள ஏன் விசேஷ கவனம் செலுத்தவேண்டும்? யாரேனும்மொரு பெண்ணை கண்டவுடன் இந்த ஆடவன் அம்மாதை ஏன் மணந்துகொள்ளக்கூடாது? ஓர் ஸ்திரீ, கோடிக்கணக்கான ஆடவர்களில் யாரேனுமொருவனை சுலபத்தில் மணந்து கொள்ளாமல், ஒவ்வொருமனிதனது தன்மையையும் ஆராய்ந்தறிந்து பின்னர் அடைய ஏன் முயற்சிக்கவேண்டும்?

இன்னோரன்ன கேள்விகளை ஆராய்ந்து விடையிறுக்கையில் “உண்மை இன்பத்தைப் பெறுவதற்காக” என்ற ஒரே விடைதான் இத்தனை வினாக்களுக்கும் பொதுவான பதிலாகக்கிடைக்கிறது. இந்த உண்மையின்பம் எத்தகையதன்மைத்து என விளங்கவேண்டியதவசியம்.

இதில் நாம் கவனிக்கத்தக்க தென்னவெனில், உண்மை அன்பிலீடுபட்ட ஓர் ஆணும் பெண்ணும் பெறும் இன்பம் எத்தகைய பெருமையும் வல்லமையுமுடையதாயிருக்கிறதென்பதைப்பற்றியே யாகும்.—ஓர் இளவரசன், தெருவில் பிச்சையேற்றுண்ணும் ஓர், எளிய அழகிய பெண்ணை உண்மையாகக் காதலிப்பானானால், அவன் தனது அந்தஸ்தின் உயர்வையும், தான் விரும்பியபெண்ணினது அந்தஸ்தின் தாழ்வையும் கவனியாது அவ்வேழைப்பெண்ணைத் தனது உயிர்க்காதலியாக ஏற்றுக் கொள்வான். தனது காதலுக்காக அவன் தனது அரசபதவியையும் துறப்பான்;—சாதாரணமாக, நாட்டில் நாம் பிரத்தியட்சமாகக் காணும் காட்சியில் ஒருவன் தான் காதலிக்கும் நங்கையை அடைவதால் தனது பெருஞ் செல்வத்தை இழக்க சித்தமாயிருப்பது சகஜமான திருஷ்டாந்தமாகும். மற்றும் ஒரு பெண்ணை இரண்டு ஆடவர்கள் காதலிப்பார்களானால், அவ்விருவரில் அப்பெண்ணையடைவது யார் என்பதுபற்றித் தர்க்கமிட்டு, ஒருவரை யொருவர் கொன்றுவிடத் துணிவதையும்,—அதாவது, தாம் விரும்பும் அப்பெண்ணை அடைவதற்காகத் தமது உயிரையும் பொருட்படுத்தாது, அவளை அடையும் முயற்சியில் முனைந்து நிற்பதை நாம் காண்கின்றோம். எனவே, இதிலிருந்து, தான் உண்மையாகக் காதலிக்கும் ஓர் மங்கையை அடைந்து வாழ முடியாது போனால், அவளையன்னியில், தான் உயிர்வாழ இயலாதெனக் காண்கிறானென்பதும், ஆதலாலேயே அப்பெண்மணியை இழப்பதாயிருந்தால் தனது உயிரையும் இழந்துவிடத் துணிகிறானென்பதும் நன்கு விளங்குகின்றதன்றோ? அப்பெண்ணை அடைவதற்கும்,—தனது உயிரை இழப்பதற்கும் இடையிலுள்ள அவனது சொத்து சுதந்திரங்களெல்லாம் பொருட்படுத்தாது தள்ளப்படுவன காண்க,

இவையாவும் ஏன், என நாம் கவனித்தல் வேண்டும். ஒருவன் கோடீஸ்வரனாயிருப்பினும், அவன் காதலித்த அழகியை, மனைவியாக அடையமுடியாது போமானால், தனக்கு இவ்வுலகில் இன்பம் பயக்கவல்லது, வேறெதுவுமில்லை யென்றே அவன் கருதுகின்றான். அவனது கோடிக்கணக்கான ஆஸ்தியினால், அடையக்கூடிய இதர இன்பங்களெல்லாம், அவனது காதலியால்அடையும் இன்பத்திற்கு எதிர் நிற்க மாட்டாதென அவன் எண்ணுகிறான்!

“பொன்னாசை, மண்ணாசை, பெண்ணாசையாம், இவற்றுள் பெண்ணாசையே பெரிதாம் பேசிடுவார்” என்னும் முது மொழி இக்கூற்றினை வலியுறுத்துவதாகின்றது. எனவே இதிலிருந்து, மனிதன், இளமையும், அழகும், குணமும், அமைந்து தன்னால் காதலிக்கப்பட்ட ஒரு பெண்மணியை அடைந்து வாழ்வதாலுண்டாகும் இன்பத்தை விடப் பெரிய இன்பம் வேறெதுவும் உலகில் இல்லையெனக் கொள்கிறான் என்பது அறியக் கிடக்கிறதல்லவா?

காதல்வாழ்வில் இடம்பெற்று அனுபோகமடைந்தோர், இவ்வளவு தூர ஆராய்ச்சிவிளக்கத்தின் அவசியமின்றியே இதனை அறிவர்.

இனி ஒரு ஆடவன் ஓர் ஸ்திரீயையோ, அன்றி ஓர் ஸ்திரீ ஆடவனையோ, ஏன் காதலிக்கின்றார்கள்? அவர்கள் ஒருவரை யொருவர் காதலிக்கச் செய்வதெது? என ஆராயின்; இதில் பலவகைகளைக் காணுவோம்.

முன் பின் அறியாத, ஓர்வாலிபனும் ஒருயுவதியும், தனி இடத்தில் சந்திக்கின்றனர் என வைத்துக்கொள்வோம். இந்த இடத்தில் அவ்விருவரும் காதற் கயிற்றிற் கட்டுப்படுவார்களானால், அதன் காரணம், அவ்விருவரது வெளித்தோற்றமாகிய “அழகும் வசீகரமுமே” யென்பது வெளிப்படையான விஷயம். இங்கு “தேக அழகு” ஆதிக்கம் பெற்று இருவர் மனதையும் ஒருமுகப்படுத்திற்று.

மற்றோர் வகையில், சிறுவயதிலிருந்தே ஒரு ஆணும் பெண்ணும் அறிமுகமும் அதன் பின் நட்பும் உடையவர்களாயிருந்து, தக்க பருவம் வந்த காலத்தில் அவ்விருவரும் காதல் கொண்டார்வளாயின் அவர்களது காதலுக்குக் காரணம் யாது?

இந்தஇடத்தில் சிலர் “அவர்களது நீண்ட நாள் நட்புத்தான் காரண” மெனக்கூறுவர். ஆனால் அது சரியாகமாட்டாது. ஏனெனில் அவ்விருவரும் நட்பினராய் ஆவதற்கும் ஓர் ஆதி காரணம் இருக்கவேண்டும்! இல்லையெனில், நட்பினராயிருக்கும் எல்

தொடர்ச்சி 16-ம் பக்கம் பார்க்க,

சென்னை

# ஆதிதிராவிடர் கூட்டம்.

## திரு. சிவசண்முகத்திற்குப் பாராட்டு.

சர். கே. வி. ரெட்டி தலைமை வகித்தார்.

—:0:—

14-7-32 மாலை எழும்பூர் ஏரியில் தாழ்த்தப்பட்டார் தொண்டர் படை யாதரவில் ஓர் பெருங்கூட்டம் கூடியது. திரு. ஜ. சிவஷண்முகம் பிள்ளை எம். ஏ. கார்ப்பொரேஷன் கவுன்சிலராக நியமிக்கப்பட்டதை பாராட்ட அக்கூட்டம் கூட்டப்பெற்றது. சுமார் 2000 ஜனங்களுக்குமேல் வந்திருந்தனர். கொடிகளாலும் தோரணங்களாலும் அம்மகாநாடு மிகச்சிறப்பாய்க்காணப்பட்டது. இம்மகாநாட்டிற்கு சர். கே. வி. ரெட்டி, தலைமை வகித்தார். திவான்பகதூர் ஏ. ராமசாமி முதலியார், திருவாளர்கள் கோதண்டராம முதலியார், ரங்கநாதஞ்செட்டி, டி. சுந்தரராவ் நாயுடு, டி. ஜகன்னாதராவ் நாயுடு, எம். சுந்தரம் நாயுடு, ஹட்டன், ரீட், புஷ்பராஜ் முதலியபலர் வந்திருந்தனர்.

### சர். கே. வி. ரெட்டி.

தலைமைவகித்துப்பேசியதாவது:— அன்பர்களே!

“தாழ்த்தப்பட்டார் கூட்டமாகிய உங்கள் கூட்டத்தில் என்னைத் தலைவராகத் தேர்ந்தெடுத்ததற்கு நன்றி செலுத்துகிறேன். உங்கள் தலைவராகிய திரு. சிவஷண்முகம் பிள்ளை, கார்ப்பரேஷனில் அங்கத்தினராகத்தேர்ந்தெடுத்ததற்கு நான் மட்டிலா ஆனந்தமடைகிறேன். தாழ்த்தப்பட்டாரில் திரு. பிள்ளையவர்களே முதல் முதலில் எம். ஏ. பட்டம் பெற்றவரென்பதை உங்களுக்கு சந்தோஷத்துடன் எடுத்துக்காட்டுகிறேன். இத்தகைய மாபெருங் கூட்டம் சிறந்த ஏற்பாடுகளுடன் கூட்டுவித்தது அவருக்கு மரியாதை காட்டுவதற்கு மட்டுமல்ல, உங்கள் கூட்டத்தாருக்கும் இது ஓர் உயரிய மரியாதையாகும். சுமார் 15 வருடங்களுக்குள் நமது மாபெருந்தலைவர் நாயர் பெருமான் இதே இடத்தில் தான் உங்கள் குறைபாடுகளுக்காகக் கூட்டப்பெற்ற கூட்டத்தில் தலைமை ஆற்றியுள்ளார் என்பதை உங்களுக்கு ஞாபகமூட்டுகின்றேன். ஆதலின் இதைவிடவேறு தக்க இடம் எதுவும் இல்லை என்பதைத்தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

அக்காலத்தில் உங்களில் பி. ஏ. க்கள் அதிகமில்லை. சமூகத்துறையில் தொண்டாற்றுபவர்களுமில்லை. அப்பொழுதுதான் இந்தியாவிலும் உயர்ந்த ஜாதி இந்துக்கள் என்று சொல்லிக்கொள்பவர்களால் இம்சிக்கப்பட்ட தாழ்த்தப்பட்டார் என்ற ஓர் பிரிவு உண்டு என ஆங்கிலேயர்கள் தெரிந்துகொண்டனர். நமது ஜஸ்டிஸ் கட்சியினராகிய பார்ப்பனரல்லாதார் இந்த மாகாணத்தில் மந்திரி பதவியைப் பெற்றது முதல்கொண்டுதான் தாழ்த்தப்பட்டாரின் குறைபாடுகளையும், கஷ்டங்களையும், அவ்வப்பொழுது கவனித்து பணி செய்துவந்தனர். எமது கட்சியாகிய ஜஸ்டிஸ் கட்சியைவிட உங்களுக்குப் பணி செய்யும் ஸ்தாபனம் ஒன்றுமில்லை என்பதை நீங்கள் ஞாபகத்தில் வைக்கவேண்டும். தென்னாப்பிரிக்காவில் நான் சென்று தொண்டாற்றி வந்தகாலத்தில் அங்கு தாழ்த்தப்பட்டாரிருந்த நிலையைச்சிறிது விளக்குகின்றேன். இந்தியாவிலிருப்பதைப்போலவே அங்கும் தாழ்த்தப்பட்டார் கஷ்டங்கள் பல உண்டு. ஆங்கிலேயர்கள் அங்குதான் தாழ்த்தப்பட்டார் நிலையை நன்கு உணர்ந்தனர். ஜாதி ஹிந்துக்கள் என்னும் சுயநலவாதிகள் அங்கு உங்களினத்தாரைச் செய்து வந்த கொடுமை அளவிடற்பாலன. ஆயினும் இந்தியாவில் தாழ்த்தப்பட்டார்பெற்றிருக்கும் உரிமைகளை காட்டிலும் அங்குள்ள உங்கள் சகோதரர்கள் அதிகம் பெற்றிருக்கின்றனர். இங்கு தாழ்த்தப்பட்டார் எனக்கூறும் உங்கள் வகுப்பில் பிறந்து, ஆப்ரிக்காசென்று வியாபாரத்தாலும், செல்வத்தாலும், ஓங்கிய பின்னர் ஜாதி ஹிந்துக்களின் பெண்களை மணஞ்செய்துகொண்டிருக்கின்றனர். இத்தகைய பலரை எனக்குத்தெரியும். ஜாதிவித்தியாசங்கள் வந்த பிறகே இந்தியாவிற்குச் சனியன் பிடித்தது. இதுவே இத்தேசத்திற்கு ஓர் சாபமாகும். இதைவிட அடிமை தேசம் வேறொறிருக்கிறதா? ஏன் இதை அடிமை தேசம் என்று அழைக்கப்படாதென்று கேட்கிறேன்?

நம்மாகாணத்தைப் பொருத்த மட்டில், ஜஸ்டிஸ் கட்சியின் ஆதிக்கத்தில் ஜில்லா போர்டுகளும் தாலூக்கா போர்டுகளும் வந்த பின்னரே உங்களுடைய நிலைமை கவனிக்கப்பட்டு வந்திருக்கிறது. இன்னும் செய்துகொண்டும் வருகின்றனர். எனவே இக்கட்சியினது தீவிர உழைப்பாலேயே உங்கள் கிளர்ச்சிதோன்றியதென்னக் கூறுவது மிகையாகாது. அக்கட்சியை ஆதரிப்பதும் மேலும் மேலும் ஊக்கமளிப்பதும் உங்கள் வசமே உள்ளது. உயர்வு என்பது ஒழுக்கத்தால் தான் ஏற்படுகிறது. உங்கள் வகுப்பில் தியாகஞ்செய்ய பலர் முன்வரவேண்டும். திரு. சிவஷண்முகம் பிள்ளையைப்போல நீங்கள்படித்து சமூக உலகத்திற்குப் பணி செய்ய வீரர்களாய் வருதல் வேண்டும்.

### முதலாளிகள் ஆதிக்கம்

தற்சமயம் நம் நாட்டில் தொழிலாளரியக்கம் தீவிரமாகப் பரவிவருவது கண்கூடு. தொழிலாளர்களாயிருப்பவர்கள் பெரும்பாலும் உங்களினத்தவர்களே. முதலாளிகள் எனச்சொல்லப்படுபவர்களும், ஜாதி ஹிந்துக்களும் தொழிலாளருக்கு இழைக்கும் கொடுமைகள் சொல்ல முடியாதனவையா யிருக்கின்றன. தொழிலாளர்கள் ரத்தத்தை உறிஞ்சி கசக்கிப்பிழிகின்றவர்கள் இந்தச்சுயநல முதலாளிகளேயாகும். கஷ்டப்படுகின்றவர்கள் நீங்கள், சுகமனுபவிப்பவர்கள் அவர்கள். நீங்கள் உழைக்கின்றீர்கள் அவர்கள் லாபம் பெறுகின்றனர். குடிஸைகளில் வசிப்பவர்கள் நீங்கள்; மாளிகைகளில் வசிக்கின்றவர்கள் அவர்கள், நீங்கள் விதையிடுகின்றவர்கள் அவர்கள் அறுக்கின்றவர்கள், எத்துணைக்காலத்துக்கு இச்சுயநல வாதிகளின் ஆர்ப்பாட்டம் ஓங்கும். உங்களுடைய நல்லகாலத்திற்குப் பல அறிகுறிகள் தோன்றுகின்றன. இச்சந்தர்ப்பத்தை நீங்கள் கைவிடப்படாது ‘ஒத்தால்வாழலாம்’ என்றபழமொழியை நீங்கள் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். உங்களுக்குள் ஒற்றுமை பாராட்டவேண்டுவது அவசியமாகும். சிலர் உங்களைக்கலைக்க வேண்டுமென்று முயற்சி செய்து வந்தனர். செய்தும் வருகின்றனர். அதற்கு நீங்கள் செவிகொடாதிருங்கள். பிரிட்டிஷார் பிரித்தாலும் தந்திரமுறையை அனுஷ்டிக்கின்றனர் என்று உங்களிடைக் கழறுவர். அதைக் கேட்காதீர்கள். நீங்கள் ஒரேமனதுடன் உங்கள் கோரிக்கைகளுக்கு முயன்றால், முடிவில் வெற்றிக்கொடியை நாட்டுவீர்கள் என்பது திண்ணம்.”

என்று தமது முன்னுரையைப் பேசிமுடித்தார். பிறகு திரு. ஜ. சிவஷண்முகம் பிள்ளைக்கு, செங்கற்பட்டு தொழிலாளர் சங்கம், சென்னை பிரஜானுகூல சங்கம், சேத்துப்பட்டு தேசப்பயிற்சி சங்கம், இளைஞர் சங்கம் தொண்டர்படை, முதலிய பல ஸ்தாபனங்கள் வாழ்த்துப் பத்திரங்கள் வாசித்துக்கொடுத்தன. பின்னர்

### திவான்பகதூர் ஏ. ராமசாமி முதலியார்.

பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

“திரு. ஜ. சிவஷண்முகம் பிள்ளை கார்ப்பரேஷன் அங்கத்தினராக நியமனஞ் செய்யப்பட்டதற்கு நான் சந்தோஷமடைகின்றேன். இவர் இங்ஙனம் நியமனஞ் செய்யப்பட்டது ஜஸ்டிஸ் கட்சியின் ஆதரவினாலேயே என்பதை உங்களுக்கு அறிவித்துக்கொள்ளுகின்றேன். ஜஸ்டிஸ் கட்சியாராகிய நாங்களும் ஐரோப்பியர்களுஞ் சேர்ந்து, கார்ப்பரேஷன் தலைவர் வகுப்பு வீதமுறையால் பிரதி தேர்தலில் வருதல் வேண்டுமென ஓர் ஏற்பாடு செய்திருந்தோம். அந்த திட்டத்தின்படி ஒவ்வொரு பிரிவினரும் ஒவ்வோர் காலத்தில் நகரசபைத்தலைவர் ஸ்தானம் பெற உரிமை இருக்கிறது. இந்த உரிமையால் தாழ்த்தப்பட்டாரும் நகரசபைத்தலைவர் பதவியைப் பெறுவர் என்பது உறுதியாகும். எனவே இன்னும் இரண்டு வருடங்களில் உங்கள் தலைவர் ஒருவர் நமது நகரசபைத் தலைவராக நியமிக்கப்படுவர் என்பதை நீங்கள் உணரவேண்டும். உண்மையாகத்தொண்டாற்றும் சிறந்தவர்களே இந்த ஸ்தாபனத்திற்கு வரவேண்டுமென்பது எமது அவாவாகும்.”

பின்னர் கவுன்சிலர் ஹட்டன், கவுன்சிலர் ரீட், திரு. புஷ்பராஜ் முதலியோர் பேசினர். திரு. சிவஷண்முகம் பதிலளிக்கு முகத்தான் ஜஸ்டிஸ் கட்சியின் தொண்டையும் ஆதரவையும் புகழ்ந்து தன்னால்கூடிய தொண்டாற்றி வரப்போவதாகவும் பேசினார். பின்னர் தலைவரது முடிவுரைக்குப்பின் திரு பாலகுருசிவமவர்களால் வந்தனம் கூறப்பட்டு கூட்டம் இனிது முடிந்தது. “திராவிடன்”

---

## மதுரை
## சுயமரியாதைச்சங்கம்.

இச்சங்க ஆதரவில் நாளது 31—7—32 ஞாயிற்றுக் கிழமை பகல் 12 மணிக்கு மதுரை மாரியம்மன் தெப்பக்குளம் வடசரகிலுள்ள தோப்பில் ஜாதி வித்தியாசங்களைப் போக்குவதின் நிமித்தம் ஒரு சமபந்தி போஜனம் நடைபெறும்.

நான்கு அணுசெலுத்தி எல்லா தோழர்களும் ஜாதி, மத. கட்சி வித்தியாசமின்றி இதில் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். என காரியதரிசி எழுதுகிறார்.

---

## பிரசங்கம்.

16-7-32 தேதி கோலார் தங்க வயல் மாரி குப்பம் தென்னிந்திய பௌத்த சங்க சபா மண்டபத்தில் திருவாளர் ஜி. அப்பாதுரையார் அவர்கள் தலைவராக அமர, ஷை சங்க வித்வான் தமிழ் ஆசிரியர் இ. நா. ஐயாகண்ணு புலவர், திருமதி கே. சி. எம். ஜெகதாம்பாள், திருமதி எம். சொர்னம்மாள், திரு. கே. முனுசாமியார், திரு. பி. தனப்பால் முதலியோர் சொற்பொழிவாற்றினார்கள். தலைவர் முடிவுரையுடன் 9-30 மணிக்குக் கூட்டம் இனிது முடிந்தது என ஷை சங்க கௌரவ காரியதரிசி அறிவிக்கிறார்.

# கடவுள் வெறியும், மதவெறியும்.

[தோழர் அ. இராகவன்]

கடவுள் என்றால் என்ன? யாண்டுளது எத்தன்மையது? அத்தகைய பொருளொன்று ஏனிருத்தல் வேண்டும் என இவ்வுலகந்தோன்றிய நாள்முதல் கேட்கப்பட்டுவருகிறது. அதற்குத்தகுந்த விடை எவராலும் இன்றுவரை கொடுக்கப்படவில்லை. ஒவ்வொரு சமய ஸ்தாபகர்களும் தத்தமக்குத்தோன்றியவாறு கூறிச்சென்றார்களேயொழிய மக்கள் கொண்ட ஐயத்தைப் போக்கினார்களில்லை. ஒருவர் சக்தியே கடவுள் என்றார், மற்றொருவர் அன்பே இறைவனென்றார், பின்னொருவர், அறிவே ஆண்டவனென்றார் இன்னொருவர், எல்லாம் நானே என்றார்பிறிதொருவர்கடவுள் உண்டென்றால் உண்டு, இல்லையென்றால் இல்லை என்றார், ஒருவர் இது சம்பந்தமாய் பேசுவதே பாவம் இவ்வித ஐயம் கொண்டவர் பெருநரகடைவரென மொழிகின்றார். ஒவ்வொரு சமய ஆச்சாரிகளும் கடவுள் இந்நிறத்தன், இவ்வண்ணத்தன் என்று கற்பனை செய்தது மக்கள் வாழ்க்கை ஒழுங்குற நடைபெறத்தங்களாலியற்றப்பெற்ற சட்டங்களை கடவுளால் சொல்லப்பட்டது, எழுதப்பட்டது. நம்பி நடந்தால் மோட்சம், இல்லாவிடில் நரகம் என்று பயங்காட்டி தாங்கள் வகுத்த சட்டங்களின்படி நடக்கத் தூண்டினர். அக்காலத்திய மக்கள் பலர் ஏற்றுக்கொண்டனர். பிற்காலத்தில் கடவுளுணர்ச்சியும், கடவுளால் உண்டாக்கப்பட்ட கதைகளும் அதன் சட்டதிட்டங்களும் மக்களுக்குக்கேடு விளைப்பனவாய் விடவே புத்தர்பிரான் போன்ற அறிஞர்கள் மக்களுக்குவேண்டிய சட்டதிட்டங்களை உண்டாக்கி கடவுளுணர்ச்சியை உலகினின்று ஓட்டப் பெருமுயற்சி புரிந்தனர். கடவுளுணர்ச்சி குறையவே சுயநலமிகளான புரோகிதர்கள் பிழைப்புக்குப் பங்கமேற்பட்டது. உடனே பலவித சூழ்ச்சிமுறையாலும் புத்தர்கண்ட நல்லியக்கத்தை இந்தியாவைவிட்டுத்துரத்தி விட்டனர். "பொய்யுடையொருவன் சொல்வன்மையினால் மெய்போலுமே மெய்போலுமே" என்ற முதுமொழிக்கிணங்க வாக்கு வல்லமைகொண்ட புரோகிதப்பூண்டுகள் கடவுள் பெயரைஸ்தாபிக்கக்கையாண்டமுறைகள் மிகமிக இழிந்ததாயிருந்தது. கனவிலும் நினைவிலும் கடவுள் வந்து பேசிய கட்டுக்கதைகளும், ஊமைகள் பேசிய கதைகளும், அறுக்கப்பட்ட மச்சங்கள் துள்ளிக்குதிக்கும் கதைகளும், பிள்ளையில்லாதவர்கள் கடவுளை வணங்கிப்பிள்ளை பெற்ற கதைகளும், புருஷனே அறியாத கன்னிகைகள் பிள்ளைபெற்ற புராணங்களும் நாடெங்கும் பரவும்படி செய்து விட்டனர். யாண்டும் அசைக்க முடியாதபடி கடவுளுணர்ச்சி ஸ்திரப்பட்டுவிட்டது. கடவுளுணர்ச்சியினாலே உலகிலே எண்ணத்தொலையாத மதங்களும், வேதங்களும், புராணங்களும் சாதிகளும், கட்டுப்பாடுகளும் தோன்றி மக்களை நாளடைவில் அஞ்ஞானப்படுகுழியிலாழ்த்தி ஊரெங்கும் நாடெங்கும், கோவில்களென்னும் கள்ளர்குகைகளை—இல்லை—விபசார விடுதிகளைப் பெருக்கி மக்கள் கஷ்டப்படுத்தித்தேடிய பொருள்களை பயனற்ற வழியில் வாரியிறைத்து அதனால் மக்களுலகிலேஹிந்து, முஸ்லீம், கிறிஸ்துவன் என்ற மத பேதங்களையும் பார்ப்பனர், வேளாளர், மறவர், இடையர், யூதர், ஆங்கிலேயர், நீக்ரோவர் முதலிய பேதங்களையும் பெருக்கி என்றுமுலகில் வேற்றுமையும் விரோதத்தையுமுண்டாக்கி ஒருவருக்கொருவர் சண்டையிட்டு இரத்த ஆறுபெருகிக் கோடிக்கணக்கான மக்கள் சாகும்படி செய்து விட்டது. வியாதியினால் இறந்த மனிதர்களைப்பார்க்கிலும் உலகிலே கடவுள் பக்தியினால் வெறிகொண்டு சண்டையிட்டு இறந்தமனிதர்கள் பலர். எனவே கடவுளுணர்ச்சியினால் நாட்டில் நடைபெறும் அக்கிரமங்களையும், அவமானங்களையும் விபரமாய் வெளியிட்டால்தான் அவ்வுணர்ச்சி ஒழிதல் அவசியமென்னு முடிவிற்கு மக்கள் எளிதில் வரக்கூடும். எனவே இதனடியில் அவைகளை வெளியிடுவாம். மக்களுலகிற்கு கடவுளைப்பற்றிய எண்ணமும் கொள்கையும் பெருந்தீங்கு விளைவித்துக்கொண்டு இருப்பதினாலேயே கடவுளைப்பற்றிய கவலைகளையும் ஆராய்ச்சிகளையும், தர்க்கங்களையும், புராணங்களையும் ஒழித்துவிட வேண்டுமென்று சுயமரியாதை இயக்கம் சொல்லுகிறதே தவிர கடவுளில்லையென்று பிரசாரம் பண்ணவரவில்லை. இவ்விதம் கூறுவதிலிருந்து அவ்வியக்கத்தின் எதிரிகள் இது ஒரு நாஸ்திக இயக்கம் என்று பிரசாரம் பண்ண ஆரம்பிக்கவே, ஆம் நாம் நாஸ்திகர்கள் தாம், உங்கள் மிரட்டலுக்கு அஞ்சுபவர்கள் யாங்களல்ல நீங்கள் சொல்லுகிறவடிவமும் தன்மையும் குணமுமுடைய ஒரு கடவுள் உண்டென்று ரூபிக்க நீங்கள் காட்டும் ஆதாரங்களைவிட அத்தகைய கடவுள் இல்லையென்று காட்டத்தக்க ஆதாரங்கள் அனந்தமுண்டு என்று தோழர்களான சிங்காரவேலு, நாஸ்திகன் குப்புசாமி முதலிய நல்லோர் ஞயம்பெற நவில்கின்றனர். அவர்களுடைய மறுக்கமுடியாத கேள்விகளுக்கு யாரே பதில்கூறவல்லார். மேனாட்டில்தோன்றிய பல நிரீச்சுரவாதிகளாகிய ஸ்பென்சர், கார்லைல், டைண்டால், ஹக்ஸி முதலிய அறிஞர்களினும் மேம்பட்ட பெரியார் இங்கர்சாலின் சொற்பொழிவின் முன்னே அறிவில் மேம்பட்ட மேனாட்டு ஆஸ்திகக்குழாங்கள் இடியோசை கேட்ட நாகம்போற் பதுங்கிவிட்டனர். நமது நாட்டிலும்கூட இந்து மத பிரமாண நூல்களாகிய ஆறு சாஸ்திரங்களில் கிட்டத்தட்ட நான்கு சாஸ்திரங்கள் நிரீச்வர சாஸ்திரமாய்த்தான் மிளிர்கின்றன. சுமார் 60 70 ஆண்டுகளுக்கு முன்னர்கூட திருச்சியில் தோன்றிய போதிஞர் முத்துசாமி முனிவர் விஞ்ஞான சாஸ்திரம் (Science book) என்றொரு சிறந்தநூல் அச்சிட்டிருக்கிறார். துரதிஷ்ட வசமாய் அந்நூல் போதிய பிரபல்யம் பெறுமற்போய் விட்டது அந்நூலிலே கடவுள், வேதம், மதம், உலக உற்பத்தி முதலியவைகளைப்பற்றி அவர் கூறும் கூற்றுக்களை வாசகர்களின் நன்மையை உத்தேசித்து வெளியிடுவோம் அன்பர்கள் ஆராய்ந்து பார்ப்பார்களாக

### கடவுளிருந்தால் தன்னைக் காட்டுவாரேன்பது.

1. அண்டமுதற் பலவான
உருவமெல்லாம்
அமைத்து வைத்த கடவு
ளென்போருகிருந்தால்
தொண்டரென விளங்கும்
உருவங்கள் காண
தோன்றி யவர்பலதுன்பத்
துயரை நீக்கி
விண்டதென தன் செயலை
யார்க்குங்காட்டி
விளங்காரோ மனத்துதித்த
விசனந்தீரக்
கண்டாரார் அமுதுகரங்
குவித்தலுமிலை
காணவசமாமோ பொய்க்
கதையின் கட்டே

### கடவுள் எந்த சத்துடையது.

2. சத்தன்றிப் பொருளுண்டோ
அறிவுள்ளோர்க்கு
சாட்சியன்றிப் பேசிடவும்
வாய்தானுண்டோ
பற்றன்றி நின்றவொன்றுள
தோ வென்று
பாராமற் புலம்பி வயிர்
வளர்க்கும் பேர்கள்
எத்தன்றி செய்வதென்ன
முன்னோர்கூடி
இசைத்த பொய்யை மெய்
யெனவே இருமாப்புண்டு
சுற்றன்றி வழிகண்டோம்
வாங்கவென்று
சூதுடைய நூல் வலையிற்
சுருக்கினாரே

### தெய்வம் பொய்யேனல்.

3. ஐயமொன்றில்லா நம்மை
யமைத்துளமிருப்பானாகிற்
பொய்யன் எவ்வாறு நம்முட்
புகுந்தனனவனையன்றி
மெய்யனும் பொய்யனோடு மெ
ன்னுடன் மூன்றாய்நின்றால்
வையகத்தனிலே யொன்றாய்
வாழ்த்துதென்ன கண்டே.

### கடவுளைக்காணாமல் தொழுகிறவர் பலன் பெறார் எனல்.

4. யசமானை யின்னவனென்ற
றிந்திடாமல்
யெய்ப் பிளப்பில்லாமலே
இருளன் மண்ணை
வசமாக வெட்டியன்று முழு
தும் போட்டு
வாடி நின்றால் அவன் கூலி
வருமோகையில்
நிசமாக எதையும்முற்றே
யாய்ந்திடாமல்
நின்றனந்த நூல்கள் செய்த
நேர்மையாலே
பிசகாமல் மனுச்செய்த தவசு
நோன்பைப்
பெற்றவரார்கண்டு செய்யார்
பெறுவதேதே

### பஞ்சபூதியங்களாற் சகலமும் உண்டாயிற்றெனல்.

5. கருத்து நின்ற ஐம்பூதம்
ஒன்றோடொன்று
கலக்கும் விவகாரத்தால
னேகமாக
உதித்தவைகள் மென்மேலு
மாறலாலே
உண்டான வுருபேதம்
கணக்கிற்கெட்டா
மதித்தறிவதறிவாகும்
வெளியினாட்டம்
மாய்கை யென்பார் தனை
யறியா மாய்கைதன்னை
விதித்த விதம் சித்தர்கள்
வந்துரைத்திட்டாலும்
விளங்காது மாய்கைகொ
ண்ட வேடத்தோர்க்கே.

### இரண்டு பொருளிருக்குமெனில் ஒன்றையொன்றுதொழாதெனல்.

6. பண்டான ஐம்பூதமன்றி
யொன்றைப்
பார்க்கவென்றால் அதின்
மேலோர் பலனுமில்லை
துண்டாகி நிற்குதென்ற
மனப்பேயற்கு
தோற்றாது தோற்றுதற்குப்
பொருளுமில்லை
கண்டாய்ந்து வுண்மைவெளிப்
படவெல்லோரும்
கட்டியதோர் நூலாலும்
கருத்தினாலும்
உண்டான பொருளதென்று
காட்டவல்லோர்
உலகில் முன்னுமில்லை பின்
னுமில்லை உண்மைதானே.

(தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க.

# இந்தியாவைப்பற்றிய இறுதியான முடிவு.

## மாகாண சுய ஆட்சியே.

## மற்ற ஆட்சிகள் பின்னால்.

(நாகை N. B. காளியப்பன்.)

சென்ற மாதம் இந்தியா மந்திரி சர். சாமுவேல் ஹோர் அவர்கள் இந்தியாவுக்கு எத்தகைய ஆட்சி வழங்கப்படும் என்று வெளியிட்டிருக்கும் அறிக்கையிலிருந்து வரப்போகும் ஆட்சி பஷ்டமாக மாகாண சுய ஆட்சிதான் இந்தியாவுக்கு நிச்சயம் என்று தெரிகிறது. ஆனால் இந்தியா மந்திரியின் இந்த அறிக்கையை இந்தியாவிலுள்ள ஜெயகர், சாப்ரு முதலான மிதவாதிகள் முதற்கொண்டு மற்ற எல்லா அரசியல் வாதிகளாலும்கண்டிக்கப்படுகிறது. இவ்வறிக்கையை கண்டிப்பவர்கள் அனைவரும் ஒவ்வொரு காரணம் சொல்லியே கண்டித்து வருகிறார்கள். ஆனால் நமது தோழர் ஜார்ஜ் ஜோசப் அவர்கள் சொல்லியது போன்று யார் எதைச் சொன்னாலும், எவரெவர்கள் திட்டினாலும் இந்தியா மந்திரியின் முடிவுதான் முடிவு. இதில் நமக்கு ஆச்சரியமோ, ஆத்திரமோ ஒன்றும் இல்லை. ஏனென்றால் நாமும் நமது இயக்கமும் சைமன் கமிஷன் வருவதற்கு முன்னும், வந்து சென்ற பின்னும், லாகூர் காங்கிரஸ் சுயேச்சை தீர்மானம் செய்வதற்கு முன்னும், காந்தி (தக்ளி) உப்புக்காய்ச்சச் சென்ற பின்னும், முதல் வட்டமேஜை மகாநாட்டிற்கு முன்னும், 2வது வட்டமேஜை மகாநாட்டிற்கு பின்னும் பார்லிமெண்டார் இந்தியாவுக்குக் கொடுக்கப்போகிற ஆட்சி மாகாண சுய ஆட்சியாகத்தான் இருக்கும், மற்ற ஆட்சிகள் ஒன்றும்கொடுக்க மாட்டார்கள் என்று சொன்னோம். இதைச் சொன்னதற்கு நமது சிநேகிதர்களாகிய "தேசிய வீரர்கள்" சிறை சென்றவர்கள், செல்லுபவர்கள் முதல் பத்திரிகை படித்து தேசியம் பேசி, சிறை என்றவுடன் அடுப்புக்குள் புகும் தேச பக்தர்கள்வரை, நம்மையும் நமது இயக்கத்தையும் தேசத்துரோகிகள் என்றும், தேசவிரோத இயக்கம் என்றும் சொன்னார்கள், இப்பவும் சொல்லுகிறார்கள். ஆனால் அந்தப் பெரிய தேச பக்தர்கள் இன்று இந்தியா மந்திரியின் அறிக்கையைப்பார்த்து ஏமாந்து போனோமென்பதற்கு பதிலாக இந்தியா மந்திரியை எதிர்ப்போம் என்கிறார்கள். எதிர்ப்பவர்கள் எதிர்க்கட்டும். இந்தியா மந்திரியும் இருக்கட்டும். எந்த ஆட்சி வந்தாலும் வரட்டும். இந்திய தேசபக்தர்கள் பூரண சுயராஜ்யம் பிடித்தாலும் பிடிக்கட்டும். பிரிட்டிஷார், இருக்கும் சுயராஜ்யத்தை பிடுங்கிக் கொண்டாலும் கொள்ளட்டும். இதுவரையும் வந்த—வரப்போகிற சுய ஆட்சிகளில் ஏழைகளாகிய இந்தியர்களுக்கு என்ன ஆச்சுது ஆகப் போகிறது என்றுதான் கேழ்க்கின்றோம். பணக்காரர்கள் பணக்காரர்களாக இருக்க திட்டமும் ஏழைகள் ஏழைகளாகவே இருக்க சட்டமும், இன்னும், மதங்களை, காப்பாற்ற காங்கிரசும், காந்தியும், மாளவியா (களிமண்) களும், அவர்களை பின்பற்ற படித்த பணக்கார ஜமாக்களும் இருந்து கொண்டு தேசியக் கிளர்ச்சியின் பேரால் பூர்ண சுயாட்சி வாங்க நினைத்தால், நினைத்துக் கிளர்ச்சி செய்தால் அந்தக் கிளர்ச்சி வெற்றி பெற முடியாது என்றுசொல்லுவதோடு, வெற்றி பெற முடியுமாவென்று இந்த வெட்டி தேசியத் தலைவர்களையும், வாலர்களையும், காலர்களையும் கேட்கின்றோம். நம்மை ஆண்டு வருகிற பிரிட்டிஷார் எப்போதும் இந்தியாவையே தாங்கள் வைத்துக் கொள்ளவேண்டும் என்று நினைத்ததும், நினைக்கப்போவதுமில்லை. இந்த விஷயம் நன்றாக, காலஞ்சென்ற ராணி விக்டோரியா அவர்களாலேயே விளக்கமாகச் சொல்லப்பட்ட யாதாஸ்து இன்றும் இருக்கிறது. ஆனால் ஏன்? பிரிட்டிஷார் இந்தியர்களிடத்தில் இந்தியாவைக்கொடுக்க மறுக்கிறார்கள் என்று பழுத்து கீழே விழுந்த மாம்பழங்களான தேசிய வீரர்கள் நம்மைக் கேட்கலாம். இந்தியாவை இந்தியர்களே ஆள இந்தியர்களுக்கு இன்னும் சரியான திறமை வரவில்லை என்ற காரணத்திற்காகவேதான். என்பது எனது பதில் இதில் சில "தேசிய"காரர்களுக்கு கோபம் வரலாம். அதாவது, இந்தியர்களுக்கு திறமை உண்டென்பதற்கு உதாரணமாக படேல் இல்லையா? காந்தி இல்லையா? களிமண் (மாளவியா) இல்லையா? ஆம் இருக்கிறார்கள். ஒரு காந்தியும், ஒரு களிமண்ணும், ஒரு படேலும் இருந்தால் போதுமா? என்று இந்த தக்ளி வீரர்களைக்கேட்கிறேன்.

உதாரணமாக, மன்னர்பிரான்முதல்வட்ட மேஜை மகாநாட்டைத் திறந்து வைத்தபோது பேசிய பேச்சும், திரு. சர்ச்சில் அவர்கள் இந்தியாவைப்பற்றி அடிக்கடி சொல்லி வந்தஅபிப்பிராயமும்,கடைசியாகதிரு.சர்ச்சில் அமெரிக்கா சென்று வந்து சீமையில் செய்தஒரு பிரசங்கமும், இன்னும் மற்றுமுள்ள பிரிட்டிஷ் அரசியல் வாதிகளின் கருத்தும், மிஸ். மேயோவின் புத்தகமும் இந்தியருக்கு இந்தியாவை ஆள இன்னும் போதுமான திறமை வரவில்லை என்று தெற்றென விளக்குவதோடு நாமும் நமது கண்ணாலேயே நம்முடைய நிலைமையை தெரிந்து கொண்டும் வருகிறோம்.

குறிப்பாக நமது இந்திய தேசிய வாதிகள் கேட்கும் பூரண சுயராஜ்யம் வந்தால் நமது ஏழை மக்களின் நிலை என்னாகும் என்பதைப்பார்க்க கட்டிச்சாதம் கட்டி காதம் போய்ப்பார்க்க வேண்டியதில்லை. இன்று பூர்ண சுயேட்சையோடேயே நடந்து வருகிற அகில பாரத சர்க்கா சங்க நிர்வாகத்தில்பொதுமக்கள்சற்றுகவனம் செலுத்தினாலே போதுமானது. இந்தியர்களின் மானத்தைக்காக்கவும் ஏழை மக்களின் பசிப்பிணியை போக்கவும் ஏற்பட்ட இந்த சங்கம் என்ன செய்கிறது. நாளெல்லாம் உட்கார்ந்து நூற்கிற ஏழை கிழவிகளுக்கு ஒன்றே காலணாவும், அவர்கள் நூற்றுகொண்டுவந்து கொடுக்கிற நூலை வாங்கிக்கொண்டு பஞ்சு கொடுத்துக் கணக்கெழுதுகிற ஆட்களுக்கு மாதம் 30, 40ம் அதற்கும் மேலும்.

அதுதான் போகட்டும் என்றால் எல்லாரிடத்திலும் பணம் வாங்கி பிரிட்டிஷார் சம்பந்தமில்லால் வைக்கப்பட்ட கதர் சங்கத்தில் குறைந்த எண்ணிக்கையுள்ள ஒரு கூட்டத்திற்கு மட்டும் அதிக ஆதிக்கமென்றால் யாரை நோவது? இதைப் பற்றி அதிகம் எழுதவேண்டியதில்லை. இதே கதிதான் இந்திய பூரண சுயராஜ்யத்திலும் கிடைக்கப்போகிறது. ஆகையால் பிரிட்டிஷார் பூரண சுயராஜ்யம் கொடுக்க தயங்குவதற்கு காரணங்கள் இல்லாமல் போகவில்லை. கொடுக்காமலும் இருக்கப்போவதில்லை, இந்தியர்கள்தகுதியானவர்கள் என்று தெரிந்த அன்றே பூரண சுயராஜ்யம் கொடுத்து விடுவார்கள்.

ஆகையால் இந்திய அரசியல் காங்கிரஸ்காரர்களே! உங்களின் வீண் கிளர்ச்சி வேண்டாம்.

---

### திறப்புவிழா.

4—8—1932 மாலை 4 மணிக்குஎன்னுடைய பெயரால்திருப்பத்தூர் த்தாலுக்கா ஜோலார்ப்பேட்டை போர்டு பாடசாலையின் திறப்பு விழாநடைபெறும், அவ்வமயம் தாங்கள் வந்திருந்து சிறப்பிக்குமாறு வேண்டுகின்றேன்.

தங்கள் அன்புள்ள,
வி. வரதராஜுலு முதலியார்,
ரயில்வே கண்டிருக்டர்,
ஜோலார்ப்பேட்டை.

---

### ஈரோட்டில் நபிகள் நாயகம் பிறந்தநாள் கொண்டாட்டம்.

ஈரோடு ஒப்பணக்காரவீதியும், குயின் வீதியும் சம்பந்தமாகும் முடக்கில் உள்ள ஈரோடு முஸ்லீம் வாலிப சங்கக் கட்டிடத்திற்கு முன்னால் ஒரு பெரிய பந்தல்இட்டு அலங்காரம் செய்து அதில் 23-7-32 ந்தேதி இரவு வேலூர் மௌல்வி ஷர்புதீன் சாயபு அவர்களின் தலைமையில் திரு நபி அவர்களின் பிறந்தினக்கொண்டாட்டம் நடத்தப்பட்டது. மறுநாள் காலை 2000 மக்களுக்கு மேற்பட்ட ஏழைகளுக்கு அன்னமளிக்கப்பட்டது. அன்று மாலை 6 மணிக்கு முஸ்லீம் வாலிபர் சங்கத்திலிருந்து வேலூர் மௌல்வி ஷர்புதீன்சாயபு அவர்களையும், பொதுக் கூட்டத்திற்குத் தலைமை வகிக்கும் மகாஜன ஹைஸ்கூல் ஹெட்மாஸ்டர் திரு. எஸ். மீனாக்ஷிசுந்தரம் பி, ஏ. எல். டி. அவர்களையும், திரு. ஏ. ரத்தினசாபாபதி அவர்களையும் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டது. ஊர்வலத்தில் அநேகஇந்து முஸ்லீம் கனவான்கள் கலந்துகொண்டார்கள். ஊர்வலம் 7 மணிக்கு அலிசவுக்கிற்கு வந்து சேர்ந்தது. பொதுக்கூட்டம் ஆரம்பமாயிற்று. சுமார் 1000 பேர்கள் இந்து முஸ்லீம்கள் வந்திருந்தனர். கூட்டத்திற்கு திரு மீனாக்ஷிசுந்தரம் பி. ஏ. எல். டி. அவர்களை தலைமைவகிக்குமாறு திரு. எச். பாட்சா அவர்கள் பிரரேபிக்க முனிசிபல் கவுன்சிலர்ஜனாப் கே. கே. குதரத்துல்லாசாயபு அவர்கள்ஆமோதிக்க திரு. மீனாக்ஷிசுந்தரம் அவர் தலைமைவகித்தார்கள் தலைவர் முகவுரையாகச் சிலவார்த்தைகள் பேசினார்.

பின் திரு அ. ரத்தினசபாபதி அவர்கள் திரு நபிகள்நாயகம்அவர்களின்சரித்திரத்தையும், அவர்செய்த சீர்திருத்தங்களைப்பற்றியும் வெகு அழகாகப்பேசினார். பின் மௌல்வி ஷர்புதீன் சாயபு அவர்கள் நபிகள் நாயகம் அவர்களின் ஜீவியசரித்திரத்தையும், அவர்செய்த வேலைகளையும் பற்றிப்பேசினார்.

பின்தலைவர் முடிவுரைகூற திரு. எச். பாட்சா அவர்கள் வந்தனோபசாரம் கூறகூட்டம் கலைந்தது.

(ஒரு நிருபர்.

---

### மருத்துவ குலசங்கம் புதுக்கட்டிடத் திறப்பு விழா.

ஷைசங்கத்தின் புதுக்கட்டிடத்திறப்புவிழா 1-3-32ந்தேதி பொன்னையா ஸ்கூலுக்கு அடுத்த மல்லிய புரத்தில் திருமதி எஸ். நீலாவதி ராமசுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் நடைபெறும். அது சமயம் திரு ஜே. எஸ். ராமனுஜம் பி. ஏ. பி. எல். ,,. வி. ராமசாமி அவர்களின் உருவப் படத்தைத்திறந்து வைப்பார் திரு கே. எம். பாலசுப்பிரமணியம் பி. ஏ. பி. எல். அவர்கள் சொற்பொழிவாற்றுவார்களென ஒரு நிருபர் எழுதுகிறார்.

## தஞ்சை—திருச்சி ஜில்லா

# தமிழர் மகாநாடு.

### தோழர் அ. பொன்னம்பலம் அவர்களால் அனுப்பப்பட்ட தீர்மானங்கள்.

நாளது ஆகஸ்டு மாதம் 6.7-தேதிகளில் துறையூரில் நடைபெற விருக்கும் தமிழர்மகாநாட்டில் கீழ்க்கண்ட தீர்மானங்களை நிறைவேற்றுவதற்காக மகாநாட்டுக் காரியதரிசி அவர்கட்கு தோழர் அ. பொன்னம்பலம் அவர்களால் அனுப்பப்பட்டிருக்கிறது:—

1. தேசியம் என்பதின் பெயரால் பார்ப்பனர்களும் அவர்களது கூலிகளும் ஹிந்தி பிரசாரம் செய்வதானது நமது தமிழ்மொழிக்குக் கேடு சூழ்விக்கும் கெட்ட எண்ணத்தோடு செய்யப்படுவதால் இம்மகாநாடானது ஹிந்திப் பிரசாரத்தை அழுத்தமாகக் கண்டிக்கிறது

பிரரேபிப்பவர் ஈரோடு ஆசிரியர் அ. ரெத்தினசபாபதி.

ஆமோதிப்பவர்:-பட்டுக்கோட்டை கே. வி. அழகிரிசாமி.

2. தமிழர்கள் ஒற்றுமையாய் வாழ வேண்டுமானால் தமிழ் மக்களைப் பிடித்துள்ள ஜாதி வித்தியாசங்கள் ஒழிய வேண்டியது அவசியமாகையால் அவைகளைக் குறிக்கும், ரெட்டியார், செட்டியார், நாயுடு, நாட்டார், நாடார், அய்யர் போன்ற ஜாதிப்பட்டங்களை விட்டொழிக்கவேண்டுமென்று இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

பிரரேபிப்பவர்:-மாயவரம் எஸ். வி. லிங்கம்.

ஆமோதிப்பவர்:-பூவாளூர் அ. பொன்னம்பலம்.

3. தமிழர்களின் ஐக்கியத்திற்கு மதப்பிரிவுகள் தடையாயிருப்பதால் கிறிஸ்து, இஸ்லாம், சைவம், வைணவம் முதலிய மதங்களை தமிழர்கள் அடியோடு ஒழிக்க வேண்டுமென்று இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

பிரரேப்பிப்பவர்:-திருச்சி டி. வி சோமசுந்தரம் பி. ஏ. பி. எல்.

ஆமோதிப்பவர்:—திருச்சி கே. எம். பாலசுப்பிரமனியம் பி. ஏ பி, எல்.

4. தமிழர்களில் பெரும்பாலோர் மாமிச உணவு சாப்பிடுவதின் காரணமாக அதைச்சாப்பிடாதவர்கள் "சைவம்" என்ற தன் பெயரால் அவர்களை இழிவு படுத்தும் மனப்பான்மையை அகற்றிவிட வேண்டுமென்று இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

பிரரேபிப்பவர்:—பூவாளூர் அ. பொன்னம்பலம். ஆமோதிப்பவர் ஜோலார்பேட்டை வி. பார்த்தசாரதி.

5. தமிழர்கள் ஒற்றுமைப்பட வேண்டுமானால் அவர்களுக்குள் வேற்றுமை உண்டாக்குவதற்கு அடையாளமாகவுள்ள திருநீறு, குங்குமம், திருமண், சந்தனம், பூணூல், லிங்கம், உருத்திராக்கம் உச்சிக்குடுமி முதலிய சின்னங்களை உடனே அகற்றிவிட வேண்டுமென்று இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

பிரரேபிப்பவர்;—உறையூர் ச. ம. சி. பரமசிவம்.

ஆமோதிப்பவர்:—சித்தக் காடு கே. ராமையா.



திரு. சாமிநாதன்—தமயந்தி.

சென்ற 19-7-32ல் சென்னையில் நடைபெற்ற திருமண தம்பதிகள்.

6. தமிழ் நெடுங்கணக்கில் 216 எழுத்துக்கள் இருப்பதால், புதிதாசத் தமிழ் படிப்பவர்கள் மிகக் கஷ்டப்படுவதால், அவசியமற்ற பலஎழுத்துக்களை நீக்கி புதியசப் தங்களுக்காக சில புது எழுத்துக்களையும் சேர்த்து தமிழ் மொழியைத்திருத்தம் செய்ய வேண்டுமென்று இம்மகாநாடு தீர்மானிக்கிறது

பிரரேபிப்பவர்:—சென்னை எஸ் குருசாமி. பி. ஏ.

ஆமோதிப்பவர்:—கோயம் புத்தூர் எ. ஆர். சிவானந்தம்.

7. கடவுள் வழிபாடு என்ற பெயரால் பலவித உருவங்களை வைத்து வழிபாடுசெய்வதாலும், அவைகட்காக பல கோவில்கள்கட்டி அவைகளுக்கு கும்பாபிஷேகம், உற்சவம், பூஜை என்ற பெயர்களால் ஏராளமான பணச்செலவு செய்தலும், தமிழர்களின் முன்னேற்றத்திற்குத் தடையாயிருப்பதோடு, வீண் பொருள் விரயமாயும் இருப்பதால், உருவவழிபாட்டை அடியோடு ஒழித்து, கோவில்களை தமிழ்க் கல்லூரிகளாகவும், வைத்திய சாலைகளாகவும் மாற்றி அமைக்க வேண்டுமென்று இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

பிரரேபிப்பவர்:— மாயவரம், சி. நடராஜன்.

ஆமோதிப்பவர்:—அம்பில் செல்லப்பா.

8. தமிழ் மொழியில் இப்போதுள்ள தேவாரம், திருவாசகம் திருவிளையாடற்புராணம், ராமாயணம், மகாபாரதம், தலபுராணங்கள் முதலியவைகளெல்லாம் ஆபாசங்களும், பொய் புரட்டுகளும், நிறைந்த கட்டுக்கதைகளாக இருப்பதோடும், மனித அறிவுக்கு முரண்பட்டதாகவும், அவைகள் இன்று கற்கப்படும் முறையில் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குத்தடையாகவும் இருப்பதால், நேர்மையான மொழியில் தமிழ் இலக்கியத்தை வளர்க்க வேண்டுமென்று இம்மகாநாடு கேட்டுக் கொள்ளுகிறது.

பிரரேபிப்பவர்:— சென்னை "திராவிடன்" ஆசிரியர் டி. வி. சுப்பிரமண்யம்.

ஆமோதிப்பவர்:— சென்னை தமிழ்பண்டிதர் திருஞான சம்பந்தம்.

9. மனித சமூகத்தில், அன்பு சகோதரத்துவம், சமத்துவம் ஒற்றுமை முதலியன நிலவவேண்டுமென்பதற்காகப் பாடுபட்ட சமணர்களையும் புத்தர்களையும் தேவாரம் முதலிய தமிழ்நூல்களில் அவதூறாக எழுதப்பட்டிருப்பதை நீக்கிவிட வேண்டுமென்று இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

பிரரேபிப்பவர்:—ஈரோடு ஆர். அன்னபூர்ணி அம்மையார்.

ஆமோதிப்பவர்:—பட்டுக்கோட்டை கே வி. அழகிரிசாமி.

10. பூர்வீக தமிழர் நாகரீகத்திற்கு முரணாக உள்ள, கல்யாணச்சடங்கு, சாந்தி முகூர்த்தம் திதி, கருமாதி, முதலிய அர்த்தமற்ற சடங்குகளைச்செய்வதை அகற்றிவிட வேண்டுமென்று இம்மகாநாடு தீர்மானிக்கிறது

பிரரேபிப்பவர்:—சென்னை எஸ். குஞ்சிதம் பி. ஏ., எல். டி.

ஆமோதிப்பவர்:— புதுச்சேரி தமிழ்ப்பண்டிதர் பாரதிதாஸன்.

11. திருநீறு, உருத்திராக்கம். முதலிய எந்தச் சின்னங்களைப் பற்றியும் குறிப்பிடாதவரும், சகல மதத்தினரும் தங்கள் தங்களைச் சார்ந்தவர் என்று சொல்லப்படுபவருமாகிய, பெரிய சமதர்ம வாதியான திருவள்ளுவரின் உருவத்தை திருநீறு, உருத்திராக்கச்சின்னங்களோடு சைவ சித்தாந்தசபையார் படங்கள் தயாரித்து வெளி-

தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க.

# குடி அரசு.

ஈரோடு 1932 ஜூலை மீ 31-உ


## தேர்தல் ஜாக்கிரதை!

—:0:—

நமது நாட்டில் பல ஆயிரக்கணக்கான வருஷங்களாக ஒரு சிறு கூட்டம், தேசத்தில் உள்ள பெரும்பாலான ஏழை மக்களை ஏமாற்றி வயிறு பிழைத்துக்கொண்டேயிருக்கிறது. அச்சிறு கூட்டமே நாட்டின் அரசியல் துறையில் செல்வாக்கு வைத்துக்கொண்டும், சமூகத் துறையில் தலைமை வகித்துக் கொண்டும் தங்கள் சுகபோக வாழ்வுக்கு எந்த வகையிலும் குறைவுவராமல் காப்பாற்றிக்கொண்டும் வருகிறது. தாழ்ந்த நிலையிலிருந்து துயரப்படும் மக்களில் எவரேனும் உயர் நிலையடைந்து வாழ்ந்திருக்கும் அச்சிறு கூட்டத்தாரின் சூழ்ச்சிகளை அறிந்து, வெளிப்படுத்த ஆரம்பித்தார்களாயின் அப்போதே அவர்களை, அரசியல் துறையிலும், சமூகத்துறையிலும், தங்களுக்கு இருக்கும் செல்வாக்கை உபயோகித்துத் தலைதூக்க வொட்டாமல் செய்து கொண்டு வந்தார்கள். இது பண்டைக்கால முதல் நடைபெற்று வரும் மறைக்க முடியாத உண்மையாகும்.

பண்டைக்காலத்தில் இக்கூட்டத்தார் பாமர மக்களைப் பயமுறுத்தி அடிமைப்படுத்துவதற்கு உபயோகித்த ஆயுதங்கள், "கடவுள்" "வேதம்" "மதம்" "சடங்குகள்" "புராணங்கள்" "வருணாச்சிரம தருமங்கள்" "மோட்சம்" "நரகம்" "சுவர்க்கம்" "பாவம்" "புண்ணியம்" முதலிய வார்த்தைகளேயாகும். இவ்வார்த்தைகளுக்குப் பயந்தே ஏழை மக்கள், தங்கள் சுயமரியாதையையிழந்து வாடி வதங்கிக் கிடந்தனர். ஆயினும் நாளேற நாளேற மக்களுடைய அறிவும் சிறிதுவளர்ச்சியடைந்தகாரணத்தாலும், அக்கம் பக்கத்தில் உள்ளவர்களைப் பார்த்து "நாமும் ஏன் அவ்வாறு இருத்தல் கூடாது" என்று சிந்திக்கத் தொடங்கிய காரணத்தாலும், தமது உரிமையை அடைய முடியும் என்ற தைரியம் உண்டான காரணத்தாலும், மேற்கூறிய அர்த்தமற்ற வார்த்தைகளுக்கு அடியோடு அஞ்சிக்கட்டுப்படுவதிலிருந்து நீங்கினர். ஆகவே மேற்கூறிய வார்த்தைகளுக்குள்ள கௌரவமும், அவைகளால் உயர்ந்த கூட்டத்திற்கு இருந்த மதிப்பும் கொஞ்சம் கொஞ்சம் குறைய ஆரம்பித்தன. ஏழை மக்களும், அரசியல் துறையிலும், சமூகத்துறையிலும் பண்டு முதல் இருந்து வந்த கட்டுப்பாடுகளை ஒழித்துக்கொஞ்சம் சமநிலையும் சௌக்கியமும் அடையத்தொடங்கினர்.

இது கண்ட, உயர்ந்த அச்சிறு கூட்டத்தினர்,—இனி மத சம்பந்தமான காரியங்களைக் கொண்டும், வார்த்தைகளைக் கொண்டும் பாமர மக்களை ஏமாற்றுவது முடியாதெனக் கண்ட அக்கூட்டத்தார்,—தங்கள் பழைய பழக்க வழக்கங்களையும், நாகரீகங்களையும் அடியோடு விட்டு விட்டுப் புதிய கல்விகளையும் தொழில்களையும் கற்றுக்கொண்டு அரசியல் பதவிகளை மட்டிலும் கைப்பற்ற ஆரம்பித்தார்கள். அக்கூட்டத்தார்கள் தான் நமது நாட்டில் உள்ள வைதிகப்பார்ப்பனர்கள் என்பதை நாம் விரித்துக்கூறவேண்டிய அவசியமில்லை என்றே கருதுகின்றோம். இக்கூட்டத்தார், இந்தியாவின் நன்மைக்கு என்றோ, இந்திய மக்களின் முன்னேற்றத்திற்கென்றோ, ஏழை மக்களின் உதவிக்கென்றோ ஏற்படும் எந்த ஸ்தாபனங்களிலும் நுழைந்து கொண்டு, அவைகளின் மூலம் கிடைக்கும் செல்வாக்கையும், நன்மைகளையும், தங்களுக்கும், தங்கள் சமூகத்திற்கும் மாத்திரம் உபயோகப்படுத்திக் கொண்டும், பாமர மக்களை வழக்கம் போல் கீழே அமிழ்த்துக்கொண்டுமே வந்திருக்கின்றார்களென்பது நமது நாட்டின் உண்மை நிலையை அறிந்தவர்களுக்கெல்லாம் தெரியாத விஷயமல்ல.

உதாரணமாக நமது நாட்டிற்குச் சுயராஜ்யம் வேண்டும் என்று கிளர்ச்சி செய்ய ஏற்பட்ட அரசியல் ஸ்தாபனமாகிய "காங்கிரஸ்" ஏற்பட்டது முதல் இதுவரையிலும் எந்தச்சமூகத்தார் நன்மையடைந்து வந்தார்கள் என்பதை உணர்ந்தால் இவ்வுண்மை விளங்காமற் போகாது. திரு. காந்தி அவர்கள் காங்கிரசைக்கைப்பற்றுவதற்கு முன், அதில் ஈடுபட்டிருந்தவர்கள் யாவரும், அரசாங்கத்தாரை மிரட்டுவதும், பிறகு அரசாங்கத்தார் கொடுக்கும் உத்தியோகத்தை ஏற்றுக்கொண்டு, தாசானுதாசராகி, ஏழை மக்களின் இரத்தத்தை உறிஞ்சுவதுமாகவே இருந்து வந்தார்கள் என்ற விஷயம் காங்கிரசின் பழைய நிலையை அறிந்தவர்களுக்கெல்லாம் தெரியும். காங்கிரசைத் திரு. காந்தியவர்கள் கைப்பற்றிய காலத்திலும்கூட, ஒத்துழையாமையியக்கத்தைக் காங்கிரஸ் நடத்தாத காலத்தில் எல்லாம், வைதீகக் கூட்டத்தைச் சேர்ந்த பார்ப்பனர்கள் அனைவரும் காங்கிரஸ் பெயரைச் சொல்லிக்கொண்டு பட்டம் பதவிகளை வேட்டையாடி வந்ததும், ஒத்துழையாமைக் காலங்களில் ஏமாந்த பார்ப்பனரல்லாதார் அடிபடுதலும், அபராதம் செலுத்துதலும்,சிறைப்படுத்தலுமாயிருக்கப் பார்ப்பனர்கள் மாத்திரம் காங்கிரஸ் பேச்சை விட்டு விட்டு வேறு பல பெயர்களால் ஜன சமூகத்தை ஏமாற்றிப் பட்டம் பதவிகளைப் பெற முயற்சிப்பதும் நமது நாட்டினருக்குத்தெரியாத விஷயமல்ல.

காங்கிரசின் சட்ட மறுப்பு இயக்கமாகிய ஒத்துழையாமையோடு கலந்து கஷ்டப்படுவதின் மூலம் பாமர மக்களின் செல்வாக்கைப் பெறுதவர்கள், வேறு தேசியத்தின் பெயரால் பாமரமக்களை ஏமாற்றிச் செல்வாக்குப் பெறும் பெருட்டு "சுதேசிப்பொருள்களை வாங்குங்கள்" சங்கம் ஏற்படுத்திப்பிரசாரம் பண்ணிக்கொண்டு வருகிறார்கள் என்பதும் இச்சமயத்தில் நினைவுக்குக்கொண்டு வரவேண்டிய ஒரு விஷயமாகும். சுதேசிப்பொருள் விருத்தியாக வேண்டுமென்பதைப்பற்றியும், அப்பொருள்களை ஆதரிக்கவேண்டுமென்பதைப்பற்றியும் நமக்கு யாதொரு ஆட்சேபணையும் இல்லை. ஆனால் நஷ்டப்படக்கூடியதும், பிழைப்புக்கு வழியில்லாததும், படித்த கூட்டத்தாராகிய பார்ப்பனர்கள் கொள்ளையடிக்கக் கூடியதுமாகிய கதர் போன்ற போலிச் சுதேசிகளை விட்டு விட்டு, அன்னிய நாடுகளுடன் நாமும் போட்டி போட்டு வியாபாரம் செய்யக்கூடிய முறைகளில் யந்திர சாதனங்களைக்கொண்டு,துணி நெய்தல் போன்ற பல வகையான கைத்தொழில்களையும் வளர்க்க வேண்டுமென்பதே நமது நோக்கமாகும். இவ்வாறு செய்வோமானால் நமது நாட்டுப் பொருள்கள், சிறந்ததாகவும், குறைந்த விலையுள்ளதாகவும் இருக்கக்கூடுமென்பதில் ஐயமில்லை. இத்தகைய சிறந்ததும், குறைந்த விலையுள்ளதுமாகிய பொருள்களை மக்கள் தாமே பிரியப்பட்டு வாங்குவார்கள். இவைகளை "வாங்குங்கள்" என்று பிரசாரம் பண்ண வேண்டிய அவசியம் கூட அதிகமாக உண்டாகாது. இதற்கான முயற்சி ஒன்றும் செய்யாமல், சும்மாவாவது "சுதேசிப் பொருள்களை வாங்குங்கள்" என்றும், "அப்பொழுதுதான் சுயராஜ்யம் வரும்" என்றும், வீண் பிரசாரம் செய்வதும், இப்பிரசாரத்தில் பார்ப்பனரல்லாதார்க்கு இடந்தராமல் முழுதும் பார்ப்பனர்களையே சேர்த்துக்கொண்டிருப்பதும் தேர்தல்களில் பார்ப்பனர்கள் வெற்றி பெறுவதற்காகச் செய்யப்படும் தேர்தல் பிரசாரம் என்றுதான் நாம் கூறுகின்றோம்.

முதலில் "மதம்" "கடவுள்" "வேதம்" "பாவபுண்ணியம்" முதலிய அர்த்தமற்ற சொற்களால் பாமர மக்களை ஏமாற்றி வந்த மக்கள் பிறகு அவைகளை விட்டு விட்டு, காங்கிரசின் பெயரால் அரசியல் ஆதிக்கம் பெற்றுப்பாமரமக்களை ஏமாற்றத்தொடங்கினார்கள். காங்கிரசிலிருந்தால் கஷ்டம் உண்டாகக்கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்ட போது அதன் பெயரையும் சொல்லிக்கொள்ளாமலும், "கதர்" "சுதேசி" என்பவைகளின் பெயரால் பாமர மக்களை ஏமாற்றத்தொடங்கியிருக்கின்றார்கள்.

இக்கூட்டத்தார், இப்பொழுது வேறொரு இயக்கத்தையும் ஆரம்பித்து அதன் பெயராலும் பாமர மக்களை ஏமாற்றத் தொடங்கியிருக்கின்றார்கள் என்று தெரிகின்றது. இப்பொழுது, மக்கள், "சமத்துவம்", "சகோதரத்துவம்" "சமூக முன்னேற்றம்" முதலிய வார்த்தைகளைக் கேட்டு, அவைகளைப்பெறவேண்டும் என்றும் இச்சிக்கின்றார்கள். ஆகையால், "சமூக ஊழியம்" "சமூக சீர்திருத்தம்" "சமூக முன்னேற்றம்" என்று சொல்லிக்கொள்ளுகின்றவர்களுக்கும் நாட்டில் ஒருவகையான செல்வாக்கு ஏற்படத் தொடங்கியிருக்கின்றது. இசசந்தர்பத்தையும் பார்ப்பனர்கள் வீண்போக்காமல், "சமூக முன்னேற்றச் சங்கம்" என ஒன்று ஏற்படுத்திக்கொண்டு தேர்தல் பிரசாரம் பண்ணப்புறப்பட்டிருக்கிறார்கள் என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறோம்.

இவ்வாறு ஒரு சங்கம், திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் தோன்றி, அதைச்சேர்ந்த சிலர் கிராமங்களில் பிரசாரம் பண்ணிக்கொண்டு வருவதாகப் பத்திரிகைகளில் செய்திகள் வெளி வந்துகொண்டிருந்தன. இச்சங்கத்திற்குத் தற்பொழுது, திரு. டி. எஸ். எஸ், ராஜன்

அவர்களும், கே. ஜி. சிவசாமி அய்யர் அவர்களும், முறையே தலைவராகவும் காரியதரிசியாகவும் இருந்து வருகிறார்கள். இவர்களை நன்றாய் அறிந்தவர்கள் இச்சங்கம் உண்மையில் ஏழை மக்களை முன்னேற்றும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டதா? அல்லது, பார்ப்பன சமூகத்தை மறுபடியும் ஜில்லா போர்டுகளிலும், தாலூகா போர்டுகளிலும் முன்னேற்றமடையச் செய்வதற்கு ஆரம்பிக்கப்பட்டதா? என்பதைக் கண்டுகொள்ளுவார்கள். முதலில் இச்சங்கத்தைத் தொடங்குகின்ற காலத்தில், கோவை திரு. சி. எஸ். இரத்தினசபாபதி முதலியார், திருச்சி திரு. டி. எம். நாராயணசாமி பிள்ளை முதலியவர்களை யெல்லாம் வரவழைத்துச் சங்கத்தை விளம்பரப்படுத்தினார்கள். இவ்விளம்பரம் பார்ப்பனரல்லாத மக்களை வசப்படுத்துவதற்காக வேண்டியென்பது பின்னால் விளங்கிவிட்டது.

இச்சங்கத்தின் நடவடிக்கைகளிலும், கிராமப்பிரசாரங்களிலும் கலந்து கொள்ள விரும்பிய, சமூக ஊழியப் பிரியர்களான பார்ப்பனரல்லாதார்களை இச்சங்கத்தார்களுடன் கலந்து கொள்ளுவதற்கு இடங்கொடுக்காத காரணம் ஒன்றே இச்சங்கம் பார்ப்பன ஆதிக்கத்தை நிலைநிறுத்துவதற்காக ஏற்பட்டது என்பதற்குப் போதியசான்றாகும்.

கட்டாய ஆரம்பக்கல்வி, தீண்டாமை ஒழித்தல், மதுவிலக்கு, சுதேசியம், சிக்கனம் முதலியவைகள் இச்சங்கத்தின் முக்கிய நோக்கமாக அமைக்கப்பட்டிருப்பதும், பார்ப்பனரல்லாத மக்களை ஏமாற்றுவதற்கென்பதில் ஐயமில்லை. இச்சங்கத்தார்களின் கொள்கைகளை ஆதரிப்பதாக ஒப்புக்கொள்ளுகின்றவர்களையும், இதற்காக இவர்கள் வெளியிட்டிருக்கும் உறுதி மொழிப்பத்திரத்தில் கையொப்பமிடுபவர்களையும், ஸ்தலஸ்தாபனங்களுக்கு அபேட்சகர்களாக நிறுத்தி ஓட்டுச்சேகரித்து கொடுப்பதாகவும் பிரசாரம் பண்ணிவருகின்றனர். அதோடுகூட தற்போது இருக்கும் ஸ்தலஸ்தாபனஉறுப்பினர்களையும், தலைவர்களையும் பற்றிப்பாமர மக்களிடம் அவர்களுடையசெல்வாக்குகுறையும்படியான வழியில் பிரசாரம் பண்ணிக்கொண்டு வருகின்றார்கள். இதைக்கொண்டு இச்சங்கத்தாரின் சூழ்ச்சியை நன்றாய் உணரலாம். தற்போது இருக்கும் ஸ்தலஸ்தாபன உறுப்பினர்களும், தலைவர்களும், பார்ப்பனரல்லாதார்களே யென்பது எல்லோருக்கும் தெரியும். பார்ப்பனரல்லாதார்கட்சி தோன்றிய பிறகும் ஸ்தல ஸ்தாபனங்கள் பெரும்பாலும் பார்ப்பனரல்லாதார் வசமாகிவிட்டன. ஸ்தல ஸ்தாபனங்களில் பார்ப்பனரல்லாதார் ஆதிக்கம்பெற்றபின் அவைசம்பந்தப்பட்ட உத்தியோகங்களும் "கண்ராக்ட்டு" களும் பார்ப்பனர்களுக்கே ஏகபோகமாக இருந்தது போக பார்ப்பனரல்லாதார்க்கும் கிடைக்க ஆரம்பித்துவிட்டன. பார்ப்பனர்கள் எவ்வளவு முயன்றும் அவைகளில் முன்போல ஆதிக்கம்பெற முடியாமல் போய்விட்டது. ஆகையால் தான் இப்பொழுது மீண்டும் சிலவருஷங்களுக்கு முன்புஇருந்ததுபோலவே ஸ்தலஸ்தாபனங்களில் பார்ப்பனர்களும், அவர்களுக்கு "ஆமாம் சாமி" போடும் போர்வழிகளும் ஆதிக்கம் பெறும் பொருட்டுப் பாமரமக்களை ஏமாற்றி ஓட்டுப்பறிப்பதற்காகவே "சமூக முன்னேற்றச் சங்கம்" என்றும் "சுதேசியம் பிரசாரச்சங்கம்" என்னும் வகையான சங்கங்களை ஏற்படுத்திக் கொண்டு தேர்தல் பிரசார வேலை செய்ய முன்வந்திருக்கின்றார்கள் என்று தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

இந்தச் "சமூக முன்னேற்றச் சங்கம்" மாத்திரம் அல்ல; இன்னும் இதுபோன்ற பல சங்கங்கள் தேர்தலின் பொருட்டு பார்ப்பனர்களால் ஏற்படுத்தப்படலாம். ஆனால் எந்தப் பெயருடன் எத்தகைய சங்கங்கள் பார்ப்பனர்களால் ஏற்படுத்தப்பட்டாலும் அவர்களால் செய்யப்படும் பிரசாரம் மதப்பிரசாரமாயிருந்தாலும், காங்கிரஸ் பிரசாரமாயிருந்தாலும், சுதேசிப்பிரசாரமாயிருந்தாலும், சமூக ஊழியப்பிரசாரமாயிருந்தாலும், தீண்டாமை விலக்குப்பிரசாரமாயிருந்தாலும், மதுவிலக்குப்பிரசாரமாயிருந்தாலும் அவையெல்லாம் தங்கள் சமூகத்தின் சுயநலத்தை அடிப்படையாகக் கொண்ட பிரசாரமாக இருக்குமே தவிர வேறொன்றாயிருக்க முடியாது என்பது இதுவரையிலும் நாம் கண்டுணர்ந்த அநுபவம் அன்றோ? ஆகையால் நமது மாகாணமெங்கும் ஸ்தல ஸ்தாபனத் தேர்தல்கள், அதாவது ஜில்லா தாலூகா போர்டுத்தேர்தல்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற இச்சமயத்தில் பார்ப்பனர்கள் செய்யும் பிரசாரத்திற்கு ஏமாறாமல் ஜாக்கிரதையாயிருப்பது அவசியம். பார்ப்பனர்களின் வலைபிற் சிக்கியவர்களும் அவர்களிடம் கூலிபெறுபவர்களும் ஆகிய சில பார்ப்பனரல்லாத கூலிப்பிரசாரகர்களும் புறப்பட்டுப் பார்ப்பனர்களுக்குச்சாதகமாகப் பிரசாரம் பண்ணக்கூடும். ஆதலால் அவர்கள் சொற்களையெல்லாம் நம்பி ஏமாற்றமடைய வேண்டாம் என்று பொது ஜனங்களுக்கு எச்சரிக்கை செய்கின்றோம். உண்மையில் பொது ஜனங்களின் நன்மைக்கு உழைக்கக்கூடியவர்களும், சுயநலம் கருதாதவர்களும், 'குருட்டு நம்பிக்கையில்லாதவர்களும், சாதிபேதம் பாராட்டாதவர்களும், மதப்பிடிவாதம் இல்லாதவர்களும் ஆகிய சிறந்தவர்களையே தேர்தல்களில் ஆதரிப்பதுபொது ஜனங்களின் கடமையாகும். இத்தகைய மனிதர்கள் ஸ்தல ஸ்தாபனங்களில் அங்கம் பெற்றால் தான் அவர்களால் அடையக்கூடிய நன்மைகளைப் பொதுஜனங்கள் அடைய முடியும். இப்படியில்லாமல் பார்ப்பனர்களுடைய தயவு தாட்சண்யங்களுக்குக் கட்டுப்பட்டோ, அவர்கள் கூறும் "சுதேசியம்" "சமூகஊழியம்" "சுயராஜ்ஜியம்" முதலிய பூச்சாண்டி வார்த்தைகளுக்கு ஏமாந்தோ பார்ப்பனர் கையாள்களை ஸ்தலஸ்தாபனங்களுக்கு அனுப்புவீர்களானால் பிறகு கஷ்டப்பட வேண்டியவர்கள் நீங்கள் தான் என்று இப்பொழுதே பலமாக எச்சரிக்கை செய்கின்றோம். பொதுஜனங்களே! வாக்காளர்களே! தேர்தல் பிரசாரம்! ஜாக்கிரதை!! ஜாக்கிரதை!!!

---

## தமிழர் மகாநாட்டிற்குப் பிரதிநிதிகள் புறப்பாடு.

துறையூரில் நடைபெறும் தஞ்சை, திருச்சி தமிழர் மகாநாட்டிற்கு சென்னையிலிருந்து 5-8-32 இரவு திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸில் தோழர்கள் எஸ். குருசாமி பி. ஏ., எஸ். குஞ்சிதம் பி. ஏ., எல். டி., டி. வி. சுப்பிரமணியம் திராவிடன் ஆசிரியர், (தமிழ்ப்பண்டிதர்) திருஞானசம்பந்தம், (தமிழ்ப்பண்டிதர்) பாரதிதாசன், ப. சு. தெண்டபாணி, அ. பொன்னம்பலம், கே. வி. அழகர்சாமி முதலியவர்கள் புறப்படுவார்கள். 6-8-32-ந் தேதி காலை திருச்சியிலிருந்து ஸ்ரீரங்கம் லால்குடி, திருச்சி, பூவாளூர், மாயூரம், ஈரோடு, கோவை முதலிய இடங்களிலிருந்து வரும் பிரதிநிதிகளுடன்கூட துறையூர் மகாநாடு செல்வார்கள்.

## சென்னையில் சுயமரியாதைப் பிரசாரம்.

சென்னை சுயமரியாதைச்சங்கத்தின் ஆதரவில் நாளது 30 31-7-32 தேதிகளில் சுயமரியாதைப்பிரசங்கம் நடைபெறும்.

அது சமயம் தோழர்கள்:— "திராவிடன்" ஆசிரியா டி. வி. சுப்பிரமணியம் திருஞானசம்பந்தம் (தமிழ் பண்டிதர்) எஸ். குருசாமி பி. ஏ., எஸ். குஞ்சிதம் பி.ஏ. எல். டி., ப. சு. தெண்டபாணி., கே. வி. அழகர்சாமி, அ. பொன்னம்பலம், முதலியவர்கள் "சுயமரியாதை இயக்கம்" என்பது பற்றி பிரசங்கம் செய்வார்கள் என்று சங்கக் காரியதரிசி எழுதுகின்றார்.

---

## அ. பொன்னம்பலம்.

சென்னை சுயமரியாதைச்சங்கத்தின் ஆதரவில் சென்னை நகரத்தின் பல பகுதிகளிலும் நடைபெற்று வரும் சுயமரியாதைப் பிரசாரத்தை முன்னிட்டு நாளது 5-8-32 தேதி வரை சென்னையில்தானிருப்பார். 6. 7. தேதிகளில் துரையூர் தமிழர் மகாநாட்டிற்குச்செல்வார். அவர் விலாசத்திற்கு எழுதும் தபால்களை கீழ்கண்ட விலாசத்திற்கு 5-8-32தேதிவரை அனுப்புமாறு அறிவிக்கிறார்.

விலாசம்:—

அ. பொன்னம்பலம்.
2/24 சிவராமன் தெரு
திருவல்லிக்கேணி
சென்னை.

---

## திருச்சி பார்ப்பனரல்லாதார் வாலிபர் சங்கம்.

திருச்சி பிராமணரல்லாதார் வாலிபர் சங்கத்தின் காரியக்கமிட்டிக்கூட்டம் திரு. தங்கவேலு அவர்களின் இல்லத்தில் திரு. எம். ஏ. அருணசலம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அது போது நிறைவேறிய தீர்மானங்களாவது:—

நமது சங்கத்தின் மூன்றாவதாண்டு விழாவை ஆகஸ்டு மாதம் இரண்டாவது வாரத்தில் நடத்துவதென்றும், அவ்விழாவிற்கு தலைமை வகிக்க திருவாளர்கள் ஏ. கிருஷ்ணசாமி பி. ஏ. ஹானர்ஸ் டாக்டர். பி. சுப்பராயன் எம். எல். சி., டி. ஏ. வி. நாதன் ஆகியவர்களை அழைப்பதென்றும், இவ்விழாவின் செலவிற்காக தென்னிந்திய நல வுரிமை சங்கத்தாரை பதினைந்து ரூபாய் கொடுக்கும்படியும், பணவசூல் செய்ய கமிட்டி நியமித்தும் இன்னும் சில முக்கிய தீர்மானங்கள் நிறைவேறிய பின் கூட்டம் கலைந்தது.

(ஒரு நிருபர்)

## உழைப்பின் பெருமை.

—:0:—

### தலைவர்களின் மனைவியர் தொழில் செய்கின்றார்.

ரஷ்யப் பெண்கள் முற்போக்கு.

ருஷியாவில் தலைவர்களின் மனைவிமார்களும் மற்றைய தேசத்து தலைவர்கள், பணக்காரர்கள் முதலானவர்களின் மனைவிமார்களைப்போல்பட்டுப் பட்டாடை உடுத்திக்கொண்டு மேனமினுக்கிகளாய் சோம்பேறிவாழ்க்கை நடத்த முடியாது. ருஷியத்தலைவர்களின் மனைவிகள் மற்றைய ஸ்திரீகளைப்போலவே வேலைகள் செய்து தீரவேண்டும். தன் புருஷன் பெரிய தலைவர் என்று சொல்லிக்கொண்ட எந்த ருஷிய ஸ்திரீயும் எந்தவிதமான சலுகையும் பெறமுடியாது.

ருஷிய சர்வாதிகாரியான திரு. ஸ்டேலினுடைய மனைவியான நாடியா அலுலூவாவும், முதல் மந்திரியாரின் மனைவியான ஸ்ரீமதி மோலடோவும் நெசவுத் தொழிற்சாலையில் மானேஜர்களாய் இருந்துவேலைபார்த்து வருகிறார்கள். சோவியத் தலைவரின் மனைவியான ஸ்ரீமதி மைக்கேல் காலினின் சைபீரியாவிலுள்ளஒரு பண்ணையில் மானேஜராய் வேலை பார்க்கிறார். கல்வித் தலைவரின் மனைவியான ஸ்ரீமதி பப்னல் மாஸ்கோவில் வெளிநாட்டு இலாக்காவில் சாதாரண குமாஸ்தா வாக இருக்கிறார். ருஷிய ஸ்திரீகளுக்கு குடும்ப வேலையைப்பற்றி கவலையில்லாமலே வேலை செய்யப்படுகிறது. தங்கள் குழந்தைகளைப் பராமரிக்கும் வேலைகூட அவர்களுக்கு இல்லாமல் செய்யப்பட்டுவிட்டது. ஏறக் குறைய இப்போது 100,000 பெண்கள் தொழிற்சாலைகளில் வேலை செய்கிறார்கள். இவர்களுள் பல உத்தியோகஸ்தர்களின் மனைவிமார்களுமிருக்கிறார்கள்.

(முன்னேற்றம்)

## கத்தோலிக்க குருமார்கள் இல்லாத சீர்திருத்தத் திருமணம்.

சென்னையில் திருமயிலை பெரிய பள்ளித்தெருவில் திருவாளர். ராஜநாயகர் கனிஷ்ட குமாரன் திரு. பொன்னுத்தம்பி நாயகருக்கும் ஷை யூர் திரு. ராஜராவ்நாயகர் திருமதி குமார்த்தி சந்தனமரி அம்மாளுக்கும் 1-7-32ல் சிவில் ரிஜிஸ்தர் திருமணம் பதிவு செய்தபின் 8-7-32ல் சுயமரியாதையியக்கத்தின்படி பொதுக்கூட்டத்தில் திருமணம் வெகு ஆடம்பரத்துடன் நிறைவேறியது அவ்வமயம் சுமார் 300பேருக்குமேல் விஜயம் செய்திருந்தனர் என நமது நிருபர் எழுதுகிறார்.

## சென்னையில் சுயமரியாதைச் சடங்கு.

சென்னையில் கிருஷ்ணாங்குளத்துத் தெருவில் 3-7-32ல் திரு. இராதாகிருஷ்ணன் அவர்கள் தாயார், அம்புஜம்மாள் காலஞ்சென்றதின் பதினாறும் நாள் இறுதிச் சடங்கு சுத்த சுயமரியாதை முறையில் நடை பெற்றது குறிப்பிடத்தக்கதாகும். சென்னையில் சுயமரியாதை முறையில் இறந்தவர்க்குஇறுதிச்சடங்குகள் பார்ப்பனீயமற்றசுயமரியாதை முறையில் நடைபெற்றது இது முதலாவதென்று கூறலாம். அன்று மாலையில் ஷையாரில்லத்தில் சுயமரியாதைப் பொதுக்கூட்டம் அம்புஜம்மாள் காலஞ்சென்றதைக் குறித்து நடை பெற்றது. அக்கூட்டத்திற்கு அத் தெருவிலுள்ளவர்களும் பக்கங்களிலுற்ளவர்களும், ஆண்களும் பெண்களும் இல்லம் நிறையக் கூடியிருந்தது போற்றத்தக்கதாகும் கூட்டத்தில் தோழர்கள், குஞ்சிதம், எஸ். குருசாமி, பண்டிதர், திருஞானசம்பந்தர் முதலியவர்கள் கலியாணம் கருமாதி முதலிய சடங்குகளை பார்ப்பனீய மற்ற சுயமரியாதை வழியில் நடத்த வேண்டியதின் அவசியத்தைப் பற்றி வெகு விரிவாகவும் தெளிவாகவும் பேசினார்கள். இவர்கள் சொற்பொழிவு வந்திருந்த ஆண், பெண், முதலிய மக்களின் மனதைக் கவர்ந்து பகுத்தறிவை புண்டுபண்ணியதென்பதில் எட்டுணையும் ஐயமில்லை. இவ்விதமான கூட்டங்கள் சென்னையில் ஆங்காங்கு நடை பெறுமானால் சென்னை வாசிகள் பார்ப்பனீய மற்ற சுயமரியாதைக்காரர்களாக விரைவில் மேன்மையுறுவார்களென்பதில் சந்தேகமில்லை,

(ஒரு நிருபர்)

## சுயமரியாதைச் சங்கத் திறப்பு விழா.

சிதம்பரம் தாலூக்கா பரத்தூர் கிராமத்தில் சுயமரியாதைச் சங்கம் ஒன்று ஆகஸ்டு மாதக்கடைசி வாரத்தில் ஆரம்பிக்கப்படும் அவ்வமயம் நமதியக்கத் தோழர்கள் பலரை அழைப்பதென முடிவு செய்திருக்கிறதென ஒரு நிருபர் எழுதுகிறார்.

## செட்டிக்குறிச்சி ஆதிதிராவிட சங்கம்.

இவ்வூரிலுள்ள சுமார் 20 ஆதிதிராவிட குடும்பங்கள், பாழும் இந்து மதத்திலிருந்து (பாப்டிஸ்டு) கிறிஸ்துவ மதத்தைத் தழுவிவிட்டார்கள். இதில், வைதீகக் கிறுஸ்து மதமாகிய "ரோமன் கத்தோலிக்கிலிருந்தும் சில குடும்பங்கள் சேர்ந்து கொண்டது குறிப்பிடத்தக்கது. மேலும் திருநெல்வேலி ஜில்லா கூந்தன்குளத்தில் 22-6-32ல் நடந்த சுயமரியாதை மணத்திற்கு இவ்வூர் சில ஆதிதிராவிடர்கள் விஜயம் செய்திருந்தார்கள்.

(ஒரு நிருபர்)

## திரு. காளியப்பன்

ஆகஸ்ட்மாதம் 6, 7, தேதிகளில் திருச்சி ஜில்லா துறையூரில் நடக்கும் தமிழர் மகாநாட்டிற்கு ஈரோட்டி லிருந்துநாகைதிரு.காளியப்பன் செல்வார்.

## காரைக்கால் தேசஊழியர் சங்கம்.

### எஸ். ஒ. சி. தொழிலாளர்களின் கூட்டம்.

17—7—32 மாலை 4 மணிக்கு காரைக்கால் எஸ். ஒ. சி. தொழிலாளசங்க அங்கத்தவர்கள் ஒருங்கே திரண்டு ஜே கோஷம் முழங்க ஊர்வலமாக ஷையூர் தேசஊழியர் சங்கத்திற்கு விஜயமானார்கள். தொழிலாளர்களில் பெருப்பான்மையோர் ஆதிதிராவிட சகோதரர்கள் என்பது குறிப்பிடற்பாலது. அன்னார்களை வரவேற்று உபசரிக்கு முகத்தான் தேசஊழிய சங்கத்தாரால் தேபானக் கச்சேரி ஒன்று நடத்தப்பட்டது. அது காலை தோழர் திரு. பொ. கோவிந்தசாமி அவர்கள் தலைமையில் ஒரு கூட்டம் கூடியதில் பிரமுகர்கள் 300 பேர் கலந்துக்கொண்டார்கள். தோழர் திரு. மு. அழகர்சாமி அவர்களால் சுயமரியாதைக் கீதங்கள் பாடப்பட்டதன் முறையே தோழர் திரு. வ. பொன்னையா அவர்கள் உபசாரப்பத்திரம் ஒன்று வாசித்துக் கொடுத்தபின் எஸ். ஒ. சி. தொழிலாள சங்கத்தலைவர் அவர்கள் வந்தனம் கூறும் பொழுது குறிப்பிட்டதாவது. இக்காரையில் அனேக சங்கங்களிருக்கின்றன. ஆனல் சுயமரியாதைக் கொள்கையை அடிப்படையாகக்கொண்ட இத்தேசஊழியர் சங்கம் ஒன்றுதான் தீண்டாமையை தீக்கிறையாக்கி சமத்துவத்தை நிரவிக்காட்டியது ஏழைத்தொழிலாளர்களே! வாயளவில் சமத்துவம் என்று கூறும் ஸ்தாபனங்களையும் மனிதர்களையும் நம்பி நீங்கள் மோசம் போய் விடாதீர்கள். என்று வீரமாக குறிப்பிட்டார். இடையே தோழர் திரு. சொ. சிதம்பரம் அவர்கள் "தொழிலாளர்களின் ஒற்றுமை" என்பதுபற்றி விரிவுரை நிகழ்த்தியபின் 6-30 மணிக்கு கூட்டம் இனிது கலைந்தது என்று தேசஊழிய சங்க காரியதரிசி அறிவிக்கிறார்.

## திருச்சி சமரச சன்மார்க்க சங்கம் திறப்புவிழா.

திருச்சினாப்பள்ளி டவுன் ரயில்வே ஸ்டேஷனுக்குச்சமீபத்திலுள்ள தேவதானம் கிராமத்தில் நேற்று மாலை திருச்சி சமரச சன்மார்க்க சங்கமும், மேற்படி சங்கத்தின் ஆதரவில் தியாகராய வாசக சாலையும் திறக்கப்போவதன் சம்மந்தமாக பிரத்தியேகமாக அமைக்கப்பட்டிருந்த கொட்டகையிலும் அதன் முன்னும் பலர் கூடியிருந்தார்கள். அக்கூட்டத்திற்கு வக்கீல் திரு. ஜே. எஸ். ராமாநுஜம் தலைமை வகித்தார் திரு கே. எம். பாலசுப்பிரமணியம் வக்கீல் மேற்கண்டவைகளைத்திறந்து வைக்குமுன்சங்கத்தின் அவசியத்தைப் பற்றியும் வாசகசாலையின் நோக்கங்களைப் பற்றியும் வெகு தெளிவாகப் பேசி திறந்து வைத்தார். திருவாளர்கள் டி. ஆர். பாலகிருஷ்ணன் வாலிபர் கடமை என்பதைப் பற்றியும், கோவிந்தாச்சாரியார் கைத்தொழில்கள என்பதைப்பற்றியும், அம்பில் செல்லப்பா சுயமரியாதை என்பது பற்றியும், எம். பாலகிருஷ்ணன் சகங்களும் தாழ்த்தப்பட்டவர்களும், என்பதைப்பற்றியும், ஆர். மருதை திருச்சி முனிசிபாலிட்டியும் தாழ்த்தப்பட்ட மக்களும், என்பது பற்றியும், சிவபிச்சை மதுவிலக்கு என்பதைப்பற்றியும், அற்புதம் வைதீக சடங்குகள் என்பதைப்பறறியும், முருகேசன் கிராம அபிவிருத்தியைப் பற்றியும், பேசினார்கள்.

சங்க நடை முதல் வருடத்திற்கு நிர்வாகஸ்தர்கள் தேர்தல்கள் வாசித்து ஒப்புக்கொள்ளப்பட்டது. அக்கிராசனர் திரு டி. எஸ். பாணி, உப அக்கிராசனர் திரு கே. மாரியப்பன், காரியதரிசி திரு எம். சிங்காரம், உபகாரியதரிசி திரு இ. எஸ். மணி, பொக்கிஷதார் திரு கே. ஆறுமுகம், புஸ்தகசாலை அதிகாரி திரு எம். பழனிசாமி.

அக்கிராசனர் முடிவுரையுடன் கற்கண்டு தாம்பூலம் கொடுத்தபின் புஷ்பமாலை சூட்டி வந்தனம் கூறி கூட்டம் கலைந்தது.

(ஒரு நிருபர்)

(9ம் பக்கத்தொடர்ச்சி)

யிடுவதை இம்மகாநாடு மிகவன்மையாகக்கண்டிக்கிறது

பிரேரேபிப்பவர்:-சென்னை எஸ். குருசாமி. பி. ஏ.

ஆமோதிப்பவர்:—நாகை என் பி. காளியப்பன்.

12. சிதம்பரம்அண்ணாமலை கல்லூரியில் தமிழ் ஆராய்ச்சியாளராக நியமிக்கப்பட்டிருந்த தோழர் கா. சுப்பிரமண்யம், எம். ஏ., எம். எல்., அவர்களை பார்ப்பனர்கள் சூழ்ச்சி செய்து கல்லூரியை விட்டு வெளிப்படுத்திய செய்கையைக் கண்டிப்பதுடன், அப்பதவியை அவர்களுக்கு மறுபடியும் அளிக்க வேண்டுமென்று கல்லூரி நிர்வாகஸ்தர்களை இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

பிரேரேபிப்பவர்:—புதுக் கோட்டை, கே. முத்துசாமி வல்லத்தரசு பி. ஏ., பி. எல்.,

ஆமோதிப்பவர்:— சென்னை உலகநாதன் எம். ஏ., பி. எல்.,

## திருச்செங்கோடு

### நகரசபைத் தேர்தல் திரு. பால் வெற்றி.

சென்ற 22-ந்தேதி திருச்செங்கோடு நகரசபைத்தேர்தலில் வெற்றி பெற்ற திரு. ஆர். கே. பால் அவர்களைப்பாராட்டு முகத்தான் ஓர் பொதுக்கூட்டம் கூடிற்று. அது சமயம் ஈரோட்டினின்றும், பல சுற்றுக்கிராமங்களினின்றும் அநேக பிரபலஸ்தர்களும், நண்பர்களும், விஜயம் செய்திருந்தனர். ஷை கூட்டத்திற்கு பழய கோட்டைபட்டக்காரர் ராய்பகதூர் நல்லதம்பிச்சக்கரை மன்றாடியார் அவர்கள் தலைமை வகித்தார். தலைவர் அவர்களுக்கும் திரு பால் அவர்களுக்கும் முறையே உபசாரப்பத்திரங்கள் வாசித்துக்கொடுக்கப்பட்டு அவர்களது அரிய ஊழியங்களைப்பாராட்டிப் பேசப்பட்ட பின்னர் தேநீர் விருந்தொன்று நடத்தப்பட்டது. பிறகு பெருங்கூட்டம் பின் தொடர திரு பால் அவர்கள் ஊர்வலமாக அழைத்துவரப்பட்டு இரவு பெரும் விருந்தொன்று நடத்திவைக்கப்பட்டது.

(நமது நிருபர்.]

## கொழும்பு.

தென் காசி தாலுகா மருத்துவகுல வாலிபர் சங்கம்— இச்சங்கத்தின் பொதுக் கூட்டம் 21-7-32 வியாழக்கிழமை இரவு 10 மணிக்கு பூந்தோட்டம் வீதியிலுள்ள சங்க நிலயத்தில் கொழும்பு இந்தியர் சுயமரியாதைச் சங்கத்தலைவர் தோழர் எம். ஆறுமுகம் அவர்கள் தலைமையில் கூடியது. அது சமயம் தோழர்கள் தெ. ஈ. புஷ்பராஜன் மருத்துவ 'விதவைகளின் பரிதாப நிலைமை என்பது பற்றியும் சு. இராமச்சந்திரன் நம்மவரின் மேற்தன்மை கல்வியின் மேன்மை யென்பது பற்றியும் அதை ஆதரித்து தோழர் கு. சண்முகம் அவர்கள் சொற்பொழிவாற்றியதும் தலைவர் மருத்துவகுல வாலிபர் செய்ய வேண்டிய வேலை என்பது பற்றி நீண்ட நேரம் சொற் பொழிவாற்றியதும் பல தீர்மானங்களுடன் கூட்டம் கலைந்ததென ஒரு நிருபர் தெரிவிக்கின்றார்.

## ஆம்பூர் கஸ்பா ஆதிதிராவிட வீதியில் 127 வீடுகள் தீக்கிரையாயின, சுமார் 10000-ரூபாய்க்கு மேல் நஷ்டம், ஜனங்கள் அலங்கோலம்.

28—7—32-ல் பிற்பகல் சுமார் 3-மணிக்குத்தற்செயலாக தீ பற்றிக்கொண்டு 127 வீடுகள் சாம்பலாய் விட்டது இதை அணைக்க ஆம்பூர் கஸ்பாய் உயா குலத்தோரும் மகம்மதியர்களும் வீடுவீடாய் நுழைந்து நெருப்பை அணைத்தார்கள். மனிதர்களுக்கு யாதொரு சேதமும் இல்லை. அநேக வீட்டில் பணம் நோட்டுகளும் வெள்ளி நகைகளும் வெந்து விட்டது. சுமார் 10000 ரூபாய்க்கு மேல் நஷ்டம். ஏற்பட்டிருக்கும் இந்தீயை அணைக்க ஆதிதிராவிட அபிவிருத்தி சங்கத்தின் மெம்பர்களும் முயற்சி எடுத்துக்கொண்டது குறிப்பிடத்தக்கது. தலைவர் அபாயகரமான நிலைமையிலிருந்து தப்பினார்கள். பல கனவான்களும் துனலக்ஷிமியின் பாங்கி மூலமாய் கஷ்டப்படும் மனிதர்களுக்கு 5 மூட்டை அரிசியை சமையல் செய்து அன்று ராத்திரி சாப்பாட்டுக்கு ஏற்பாடு செய்தார். அவர்களுக்கு எங்கள் கிராமத்தின் சார்பாக நன்றியறிதலை தெரிவித்துக்கொள்ளுகிறோம் என காரியதரிசி எழுதுகிறார்.

## தேவை.

கும்பகோணம் சுயமரியாதைவாலிபர்சங்கத்திற்கு ஷை சங்கத்தின் அங்கத்தினர்களிடமிருந்து சந்தாத் தொகையை வசூலிக்கவும், சங்கத்தின் இதர காரியங்களைக்கவனிக்கவும் ஒரு பில்கலெக்டர் தேவை. மேற்கண்டவேலையை ஒப்புக்கொள்ள விருப்பமுள்ளவர்கள் தங்கள் யோக்யதாம்சம் நன்னடக்கை முதலியவைகளை ஷைசங்கம் காரியதரிசியிடம் நேரில் தெரிவித்து சம்பளம் முதலானவைகளையும் தங்கள் திறமைக்குத்தகுந்தாற்போற் கிரமமாகப் பேசிமுடிவுசெய்து கொள்ளலாம். ஆனால் ஷைவேலையை ஒப்புக் கொள்ள முன்வரும் வாலிபர்கள் சுமார் 20 வயதிற்கு மேற் படாதவாலிபர்களாகவும் கும்பகோணம் முன்சிபல் எல்லைக்குள் வசிக்கக்கூடிய வர்களாகவும் இருக்க வேண்டும்.

காரியதரிசி. சுயமரியாதைவாலிபர் சங்கம் கும்பகோணம்.

## திருப்பூர் டி. மு. கோர்ட்டு.

O. S. No. 1043 of 1930.
I. A. No. 35 of 1932.

மெ. அரு. மு.ம. ராமனாதன் செட்டியார்—வாதி.

அவனாசி தாலுக்கா கணியாம் பூண்டி கிராமம் முருகம்பாளையத்திலிருக்கும் செல்லப்ப கவுண்டன் மகன் பெரியகருப்பகவுண்டன்— 18-ம் பிரதிவாதி.

ஷை 18-ம் பிரதிவாதிக்கு இதனால் தெரிவிக்கும் நோட்டிஸ் என்னவென்றால்:—

ஷை கெம்பரில் ஏற்பட்ட பிரிலிமினரி டிக்ரியை பைனல் டிக்ரி செய்யவேணுமாய் வாதி மனுக்கொடுத்து 1932 ஞு ஆகஸ்டு மாதம் 2-தேதியில் வாய்தா போடப்பட்டிருக்கிறது. ஷை தேதியில் நீர் நேரிலாவது வக்கீல் மூலமாவது ஆஜராகத்தவறினால் ஒரு கட்சியாக உத்திரவாகிவிடும்.

[Sl] M. K. Govindarajulu Chettiar,
Advocate for Pltf.
Tirupur 29-7-32.





உடனே பரீட்சை பார்க்கலாம்!

தாது புஷ்டிக்கு அதிசயமான டானிக்.

"கெய்ரோடைன்"

இந்தியா கவர்ன்மெண்டில் ரிஜிஸ்தர் செய்தது.

ஆறுமுக முத்திரையுள்ள மருந்துகள் மூன்று லட்சம் புட்டிகள் விலையாகி விட்டன. உண்மையான நற்சாட்சிகள் ஏராளம். மெலிந்து வாடியிருக்கிற பெண்கள் "கேய்ரோடைன்" சாப்பிட்டால் தேக புஷ்டியும், செழிப்பும் அழகும் உண்டாகும். டாக்டர்கள் இதை பரீட்சை பார்க்கலாம்.

"கெய்ரோடைன்" டானிக் மருந்து இரத்தசுத்தி, இரத்த விருத்தி, சதை புஷ்டி, பலம், அழகுதரும். மலச்சிக்கல், உஷ்ணவாய்வு, குன்ம வயிற்று வலி, நீர்கடுப்பு, வெள்ளை, வாய்ப்புண், மூலச்சூடு, பெண்கள் சூதக வயிற்றுவலி, சூதக்கட்டுகளைக் குணப்படுத்தும். வாத நோய்கள், மேக நீர், துர்நீர்கள், க்ஷயம், இருமல், எலும்புருக்கி நோய், கைகால் அசதி, பலவீனங்கள் முதலிய நூற்றுக்கணக்கான நோய்கள் நீங்கித் தேகக்குளிர்ச்சியும்உண்டாகும். உடம்புக்குச் சுறு சுறுப்பும், களைப்பில்லாமல் வேலை செய்யக்கூடிய சக்தியும் இந்திரியக்கட்டும், அளவு மீறிய தாதுபுஷ்டியும் உண்டாகும். உடனே பரீட்சை பார்க்கலாம். பத்தியமில்லை கெடுதி செய்யாது. வியாதி இல்லாதவர்களும் தாது பலத்திற்காக இதைச்சாப்பிடலாம்.

பூரண சுகத்திற்கு ஒரு புட்டி மருந்து போதுமானது.

80 வேளை மருந்து புட்டி 1-க்கு விலை ரூ. 5. தபால் செலவு வேறு.

தந்தி விலாசம். "சித்தர்" மதுரை.

விலாசம்:— ஆர். எஸ். பதி அன்கோ., (ரிஜிஸ்டர்)
215, மேலை மாசிவீதி, மதுரை.

[7-ம் பக்கம் பார்க்க]

சீவர்கள் வரும் விதம்.

7. சிறந்தவுயிர் தனையொரு
வனனுப்பவந்து
செனித்ததென்று நூல்தோ
றுஞ் செய்தார் முன்னோர்
பறந்த புவிதனைத் தேடித்
தடாகஞ் செய்து
பாங்கான புனல் நிரம்பிச்
சில நாட்சென்றால்
நிரந்தரமாய் அடர்ந்த சத்துத்
திரண்டங்கங்கு
நீங்காத ஊர்வனவாம்
சீவர்கோடி
தறந்தறமாய் யியல்பாய் வந்து
திக்கும்மல்லால்
தானொருவன் படைத்த
னெற்ற தன்மையேதே.
ஒருபொருளை உண்டு பண்ணின
வன் அழிக்கானெனல்.

8. கற்றோன் ஓடந்தனைச் சமைத்
துக்
கருதியதைப் பின்னு
டைப்பானோ
எத்தேவரையுமுருக்களை
யேதுக்கமைத்தான்
எனழித்தான்
பித்தோவவனைப் பெரும்பேயோ
பிடைத்தோபடைத்துப்
பிழை செய்தான்
சற்றேயிதனைப் பகுத்தறிந்தால்
சகத்தினியல்பு வெளியாமே.

என்று கூறியிருப்பதோடு இன்னும் பல அறிஞர்கள் கடவுளென்பதொன்றில்லை யென்று போதிய ஆராய்ச்சியுடன் நூற்களெழுதியுள்ளார்கள். சைவசித்தாந்தம் கூட கடவுளால் உயிர்கள உற்பத்தி செய்யப்படவில்லை யென்பதை ஒத்துக்கொள்கிறது, மேனாட்டு விற்பன்னரான டார்வின் சித்தாந்தம் கடவுளால் மனிதன் முதலில் தோன்றினான் என்ற கொள்கையைத்தவிடுபொடியாக்கி விட்டதுடன், விஞ்ஞான சாஸ்திரங்களின் உண்மை வெளிப்பட கடவுள் உண்டென்று கூற முடியாததாய் விட்டது. உலகிலே கிட்டத்தட்ட 2 கோடி நாஸ்திகர்கள் பெருகிவிட்டார்கள். கடவுள் மறுப்புச் சங்கம் பல நாடுகளில் தோன்றி மறுக்க முடியாத காரணங்களைக் காட்டி, கடவுள் உண்டென்று பேச வழியில்லாமற் செய்து விட்டது. உலகிலே ஒரு பெரிய மகாத்வாய் போற்றப் பெறும் தோழர் காந்தியும் ஒரு சிறு மாணக்கனிடம் கடவுள் உண்டென்று நிரூபிக்க முடியாமல் எல்லாம் நம்பிக்கையைப் பொறுத்ததே, உண்டென்றால் உண்டு. இல்லையென்றால் இல்லை யென்று கூறிவிட்டார். இவ்வாறெல்லாம் இருந்தும் சுயமரியாதைச் சங்கம் கடவுள் இல்லை யென்று பிரசாரஞ் செய்யாமல் கடவுளைப்பற்றிக் கவலை கவலை கொள்ளவேண்டாம், கடவுளுக்கென காசைச் செலவழிக்கவேண்டாம், கடவுள் பேரிற் கூறும் விபசாரக்கதைகளில் நம்பிக்கை கொள்ளவேண்டாம், கல்லைக் கடவுளென நம்பி மோசம் போகவேண்டாம், கடவுளால் உண்டாக்கப்பட்டதாகச் சொல்லும் சாஸ்திரங்களும், வேதங்களும், ஜாதிகளும் பார்ப்பனரல்லாதாரிடமுள்ள பொருளைப்பறித்து, அவர்களைத்தாழ்த்தி, அவர்கள் அறிவில் சிறந்து விளங்கவிடாமற் செய்யும் ஆயுதங்களென்றே இன்று வரை சுயமரியாதை இயக்கம் சொல்லிவருகிறது. கடவுள் (பொருள் ஒன்றிருக்க) இல்லைஎன்று சொல்வதில் சுயமரியாதை இயக்கத்திற்கு எவ்வித லாபமுமில்லை. சுயமரியாதைக் காரர்களில் எவராவது கடவுள் இருக்கிறதா? இல்லையா என்ற ஆராய்ச்சித்துறையில் இறங்கவில்லை. இறங்குவது ஒரு நாளைக்கு 0-1-9 அணு வரும்படியுள்ள சராசரி 24 வயதுள்ள நமக்கு (இந்தியர்களுக்கு) வேண்டாம். சராசரி ஒரு நாளுக்கு ரூ 4 க்கு மேற்பட்ட வரும்படியுள்ள, சராசரி 56 வயதுக்கு மேற்பட்டவயதுள்ள அமெரிக்கர்கள் செய்து கொண்டிருக்கட்டும் என்று கருதுகின்றது. இதுவரை கடவுளைப் பற்றி ஆராய்ச்சி செய்துள இந்திய ஆஸ்திகர்களும் கடவுளை யான்கண்டேன், காணும்வழி இதுவென்றும் கூறாமல் கடவுள் காணமுடியாதது, அறிய முடியாதது, இப்பேர்பட்டது என்று சொல்ல முடியாதது, ரூபமில்லாதது, அரூபமில்லாதது சூன்யமானது (ஒன்று மில்லாதது) வெட்டவெளி, வெறும்பாழ் என ஏதேதோ வாய்க்கு வந்ததெல்லாம் பிதற்றுவதுடன் கடவுளைக்காண வேண்டுமானால் பரதேசிகளுக்கும், கோயில்களுக்கும், பார்ப்பனர்களுக்கும் உன் சொத்தைக்கொடு, உன்மனைவியைக் கேட்கும் சிவபக்தர்களுக்குக் கொடுத்துவிடு, தாய்தந்தை அண்ணன் தம்பி முதலியவற்றை வெறுத்து நாடுதுறந்து காடுபுகுந்து அன்னந்தண்ணீரின்றி காற்றை நுகர்ந்து நிர்வாணமாய்த்திரிந்தால் கடவுளைக்காணலாம் அதாவது நீ சாகலாம் என்பதுதான் ஆஸ்திகர் சிகாமணிகளின் உபதேசம். எனவே தான் இத்தகைய போலிமிரட்டுகளை யெல்லாம் கண்டு சுயரியாதை இயக்கம் கடவுள் சம்பந்தமாய் தான் கண்டஉண்மைகளைத் தெளிவாய்ப்போதித்து வருகிறது. என்றாலும் எம்ஆஸ்திகத் தோழர்களே! ஒரு சுயமரியாதைக்காரன் உங்கள் பிடிவாதத்திற்கிணங்க கடவுள் ஒருவர் உண்டென்று ஒத்துக்கொண்டாலும் (பகுத்தறிவு வாதிகள் அவனை மூடநம்பிக்கைகாரன் என்று எண்ண இடங்கொடுத்தாலும்) கடவுளுணர்ச்சியும் அதுசம்மந்தமான புராணங்களும், புரட்டுகளும் ஒழியக் கூடாதென்பதையும் ஒப்புக்கொண்டால் அவன் ஒரு சுயமரியாதைக்காரனாக விளங்க முடியாதென்பதோடு உலகில் இன்றுபரவி நிற்கும் அடிமைவாழ்க்கையையும், மூடநம்பிக்கையையும் ஒழித்து, முதலாளி தொழிலாளி, பணக்காரன், எழைஉயர்ந்த ஜாதி தாழ்ந்த ஜாதி முதலியவேற்றுமைகளை அழித்து பகுத்தறிவை வளர்த்து மனுக்குலம் சுபிக்ஷமாய் வாழச்செய்ய முடியமற்போகும் என்பது பின்வரும் காரணங்களால் உங்கட்கு தெற்றென விளங்கும்.

### விபசாரத்தை விருத்தி செய்கின்றன.

கடவுள் உணர்ச்சியே நாட்டில் விபசாரத்தை மலியச்செய்து விட்டது என்பதை மறுக்க முடியா உண்மையாகும். எந்த அயோக்கியமான செயலைக் கடவுள் செய்யும்படி அனுமதி கொடுத்திருகிறார் என்று ஒரு மூடன் ஒரு நூல் எழுதிவிட்டால் அதை நம்நாட்டிலுள்ள எல்லா அறிஞர்களும் மறுக்காமல் ஒத்துக்கொள்ளும்மனப்பான்மையைப்பெற்ற மக்களைக்கொண்ட நாடு நம்மிந்தியா. எனவே உலகில் பல படித்தஅயோக்கியர்கள் தாங்கள் செய்துவரும் விபசாரக்குற்றத்தை மறைக்க கடவுளும் பல விபசாரம் புரிந்ததாக கதைகட்டிவிட்டாரகள். எனவே உலகில் விபசாரம் புரிதல் தவரானசெயல் அல்லவென்று மக்களில் பலர் எண்ணும படி செய்து விட்டது. அஃதுடன் எத்தகைய விபசாரம்புரிந்தாலும் பலவந்தமாய் ஒருபெண்ணுடன் புணர்ந்தாலும் கடவுளுக்கு காணிக்கை கொடுத்துவிட்டாலோ அல்லது 4மாதாந்தம் திருச்செந்தூர் சுப்பிரமணியர்கோவிலுக்குச் சென்றுவந்தாலோ, அல்லதுபத்துபார்ப்பார்களுக்கு 'பிராமணபோஜனஞ்' செய்துவைத்தாலோ இராமேஸ்வரம் போய்த்தீர்த்தமாடினாலோ எல்லாப்பாவமும்விமோசனமாய் விடும் என்று கடவுள் கூறியிருக்கிறார். என்பதை மக்கள் நம்புவதினால் நமது நாட்டில் நாளடைவில் விபசாரம் பெருகி வருகிறது. அரசாங்கத்தார் எத்துணை கடுமையான முறையைக்கையாண்டு விபசாரத்தை நிறுத்த முயற்சித்தாலும் பலனுண்டாகப்போவதில்லை. சட்டத்தோடு மக்களுக்குண்டாகிய மதபக்தியை (அதாவது மதவெறியை) ஒழிக்கவும் பிரயத்தனப்பட வேண்டும். கடவுள் பக்தர்கள், அல்லது பார்ப்பனப் புரோகிதர்களின் காம இச்சையைத் தணிப்பது புண்ணியமான செயலென்ற நம்பிக்கை மக்களுக்கு இருந்துவரும் வரை விபசாரதோஷம் தீர்த்தயாத்திரையால் ஒழிந்துபோகுமென்ற மூட எண்ணமிருக்கும்வரை விபசாரம் ஒழியப்போவதில்லை. இன்று நாட்டில் விபசாரிகள் பெருகுவதற்கு பெரும்பாலும் காரணங்களாய் மிளிர்வது கோயில்கள், விழாக்கள், பொட்டுக்கட்டல் (ஆதாவது கடவுள் விபசாரம் செய்ய அனுமதிகொடுத்தல்) முதலியவைகளாகத்தானிருக்கிறதென்பதை யாரேமறுக்கவல்லார். சைவசமய அன்பரிலொருவர் சிவபக்தர் ஒருவர் தன்மனைவியை விழைந்தார் என்பதையறிந்த உடனே அவரிடம் தம்மனைவியைக்கூட்டிக்கொடுத்தார் என்றும் அதனால் அவர் நாயனார் பட்டத்தைப்பெற்றார். என்பதையும் மக்கள் நம்பிக்கொண்டிருக்கும்வரை நாட்டில் எவ்வாறு விபசாரம் ஒழியும். விபசாரம் பெருக நம்மக்கள் கொள்ளும் பிள்ளைப்கைபத்தியமே பெரும் வழியாகக் காணப்படுகிறது. பல வீடுகளில் பிள்ளையென்று பற்பல கோவிலுக்குச் செல்வதும் மாவிளக்கு பாற்பதும், வசனமிருப்பதுமாய் கோவிலில் தங்கியிருப்பதும் கோவிலேயுண்டு கொழுத்து வாழும் தடியர்கள் இப்பெண்களை பொண்டாள்வதும் பலபேதைப் பெண்கள் கடவுளே நமக்குப்பிள்ளை கொடுக்க வந்து நம்முடன் சம்போகம்பண்ண வந்திருக்கிறார் என்று கண்ணை இறுக மூடிப்படுத்துக்கொள்வதும் அத்தடியர்கள் பேதைப்பெண்களை கற்பழித்துச் செல்வதும் சிற்சில சமயம் அச்சம்போகத்தினால் குழந்தை உற்பத்தியானல் கடவுள் அருளால் குழந்தை யுற்பத்தியானதாக அப்பெண்மணிகள் அக்கடவுளைப்பற்றி பெரிய விளம்பரம் செய்து ஏராளமான பெண்களை கோயிலுக்குப்போகச் செய்வதும் அக்கோயிலுள்ள சாமியின் பெயரை தம்பிள்ளைக்கு இடுவதும் வேறுசிலர் மந்திரவாதிகளென்றுபிள்ளை கொடுத்துவிடுவேன் என்று வீடுகளுக்கு வந்து 40 நாள்பூஜை 60-நாள்பூஜை என்று ஏராளமான ரூபாய்ச் செலவையிழுத்து விட்டு, வீட்டிலுள்ள பெண்களை பற்பல ஏமாற்று வழிகளால் கற்பழிப்பதும் சில அறிவிலாப்பெண்கள் அவ்வயோக்கிய மந்திரவாதிகளின் கையிலிருந்து தப்பிக்கவழி தெரிந்தும் பிள்ளைப் பைத்தியத்தால் மயக்குண்டு எப்படியாவது பிள்ளைகிடைத்தால் போதுமென்று சும்மாவிருப்பதும் நாம் கண்டும் கேட்டும் வருகின்றோம். பிள்ளைப்பைத்தியத்தால் கடவுள்பிள்ளைதந்து விடுவார் என்றமூடநம்பிக்கையால் நடந்த உண்மையான சம்பவங்கள் சிலவற்றையும் கீழே தருகின்றோம். அன்பர்கள் ஆராய்ந்து பார்த்துதெளிவார்களாக.(தொடரும்)

---

ஈரோடு முனிசிபாலிட்டி.

## விளம்பரம்.

ஈரோடு டவுன் பூந்துறைரோட்டிலுள்ள முனிசிபல் சக்கிலியர்களுக்குக்குடிசை கட்டிக்கொள்ள வாங்கிய இடத்தில் 75 அடிநீளம் 50 அடி அகலமுள்ள இடத்தில் ஒரு ஷெட் போட்டு முழு இடத்தையும் அனுபவித்துக்கொள்ள திருச்சினப்பள்ளியிலிருக்கும் ரெயில்வே கன்ட்ராக்டர் ஜனப் எம். கே. மகம்மது இப்ராகிம்சாயபு பகதூருக்கு மாத வாடகை ரூ 7—8—0 வீதம் இக்கவுன்சிலார் 5—11—31 முதல் 3 வருஷ வாய்தாவிற்குக் கொடுத்திருக்கிறார்கள். இது விஷமாய் ஆக்ஷேபணையிருந்தால் சேர்மனவர்களுக்கு 1-9-32 தேதிக்குள் தெரியப்படுத்திக்கொள்ளலாம்.

(ஒப்பம்) கே. ஏ. ஷேக்தாவுத்
சேர்மன்,

## நாகை சுயமரியாதைப் பொதுக்கூட்டம்.

நாகை சுயமரியாதைச் சங்கத்தின் சார்பாக 23-7-32-மாலை 6-மணிக்கு போலீஸ் ஸ்டேஷன் திடலில் பொதுக்கூட்டம் ஒன்று தோழர் டி. பி. ஆறுமுகம் தலைமையில் நடந்தது. அதுபோது தோழர்கள் எஸ். பி. கிருஷ்ணன், வி. சாமிநாதன், மயூரம் எஸ். வி. லிங்கம் இம்மூவரும் துண்டு நோட்டீசில் கண்டவாறு "சுயமரியாதையும், நமது கடமையும்" என்பதுபற்றி விரிவுரை நிகழ்த்தினார்கள். அதுபோது தோழர் எஸ். வி. லிங்கம் பேசியதின் சுருக்கம் வருமா:—

தோழர்களே! பெரியோர்களே! இன்று உங்களிடையில் போந்து பேசும் பேறுபெற்றதுபற்றி மகிழ்கிறேன். சென்ற ஆண்டில் உங்கள் தாலூகா சுயமரியாதை மகாநாட்டை சிறப்புற நடத்திக்கொடுத்த பெருமை உங்களுக்கேயுண்டு. இன்று நாம் சுயமரியாதையும் நமது கடமையும் என்பதுபற்றி பேசுங்கால் பார்ப்பனரைத்தூஷித்து பேசவோ அன்றி சர்க்காரைக்கண்டிக்கவோ அன்று மற்றென்னவெனில் சென்ற ஆண்டில் நடைபெற்ற உங்கள் தாலூகா சுயமரியாதை மகாநாட்டிற்கு கடைசியாக விஜயம் செய்து திரும்பிய நமது இயக்கப்பெரியார் தோழர் ஈ. வெ. இராமசாமி தனது உடல் நிலைகெட்டமையின் காரணமாக டாக்டர்கள் அபிப்பிராயப்படி கடல்யாத்திரை செய்ய வேண்டிய அவசியமாயிருந்ததால் மேனாடு போகும்படி நேர்ந்தது. இந்த விஷயம் அறிந்த வைதீக மடிசஞ்சிகளும் ஆஸ்திக சிகாமணிகளும் "போய்விட்டான் நாயக்கன் இயக்கம் இத்துடன் செத்துப்போச்சு" மேலும் கடவுள் இல்லை, மதம்இல்லை என்கிறான் உருப்படுமா? என்பதாக பல விதமாக இல்லாத பொல்லாத பழிகளையும் பிறவும் கட்டிவிட்டார்கள். அதைப்பற்றி விளக்கிச்சொல்லவே யான் பெரிதும் ஆசைப்படுகிறேன். அதாவது,

அவர் சென்ற இந்த 7, 8 மாதங்களில் 5, 6 ஜில்லா மகாநாடுகளும் தாலூக்கா மகாநாடுகளும் நடத்தி வந்திருக்கிறோம். அதுவும் இயக்கத் தலைவரான ஆர். கே. ஷண்முகம் ஜினிவாவுக்கு சென்றிருக்கும் போதும் இயக்கத்தின் முக்கியஸ்தர்களில் சிலர் பிரிந்து ஒதுங்கி நின்ற காலையிலுமேயாகும். மற்றும் மன்னார்குடியில் சென்ற மாதம் நடந்த இரண்டாவது சுயமரியாதை மகாநாடு எவ்விதம் நடந்தது என்பதுபற்றி சிறிது சொல்வது மிகையாகாதென்க்கருதுகிறேன். தஞ்சை ஜில்லாவில் மன்னார் குடி ஒரு பார்ப்பனக் கோட்டையாகும்.

அங்குள்ள காப்பிகிளப்புப்பார்ப்பான்முதற் கொண்டு அரசாங்க உத்தியோகம் பார்க்கும் சப் கலெக்டர் வரை பார்ப்பனர்கள். மன்னார்குடியில் பல பிரபலஸ்தர்கள் ஒரு காலத்தில் தஞ்சை ஜில்லா போர்டு விஷயமாக நம்காலில் விழுந்த இரண்டு மூன்று பார்ப்பனரல்லாத கனவான்களும் பெரும்பாலரான பார்ப்பனர்களும் சேர்ந்து மகஜர் ஒன்று தயாரித்து சுயமரியாதைக்காரர்கள் மகாநாடு கூட்டி கோவிலை கொளுத்தி கொள்ளையிட்டு அக்கிரகாரங்களில் புகுந்து அட்டகாசம் செய்யப்போகிறார்கள் என்று கையெழுத்திட்டு அனுப்பினார்கள். அனுப்பியும் பலன் ஒன்றும் தராது போகவே பின் வாங்கினார்கள். மகாநாடு குறித்த நாளில் பற்றுடைய தோழர்கள் பலவூர்களிலிருந்தும் வந்து மகாநாடு சிறப்புற நடந்தது. ஆதலின் இயக்கம் அழிந்துவிடும் என்று அவலம்பித்த ஆஸ்திகர்களும் உன்மத்தர்களும் இப்பொழுது உண்மையை உணர்ந்து கொள்ளட்டும். மகாநாட்டில் தீர்மானித்த விஷயத்தைப்பற்றி அதாவது வது தஞ்சை ஜில்லாவிலுள்ள தஞ்சை, திருவாரூர், திருத்துறைபூண்டி, மாயவரம் இவ்ரயில்வே ஸ்டேஷன்களில் உள்ள சாப்பாட்டுக் கிளப்புகளில் 100க்கு 3 இருக்கப்பட்ட பார்ப்பனருக்கு பாதி இடமும் 97 வருக்கு பாதியிலும் விறகு புளிமூட்டை, அரிசி அடுக்கி கொஞ்சயிடமேயுள்ள இடங்களில் சாப்பிடுவதற்கும் இடமும் ஒதுக்கி வைத்திருப்பதைக் கண்டித்து அதைப்பற்றிகிரமப்படி அதிக இடம் ஒதுக்கவேண்டுமென்பதற்கும் மேற்படி இடங்களில் உள்ள பிள்ளையார் கோயில்களையும் அப்புறப்படுத்த வேண்டுமென்பதாகவும் ரயில்வே ஏஜண்டுக்கும் நமது தோழர்கட்கும் கடிதப்போக்கு வரத்து நடந்து வருகிறது. இரண்டு மாதங்களில் பதில் வரும். வரும் பதில் மாற்றமாக இருந்தால் நாமென்ன செய்வது என்பதுபற்றி பின்னர் யோசனை செய்வோம்.

ஆனால் சத்தியாக்கிரகம் செய்யப் போகிறோமா, அதுதான் இல்லை. எப்போது சத்தியாக்கிரகம் சண்டித்தனமாக கொள்ளப்பட்டதோ அப்போது அதில்லை என்பதாயிற்று. நமது தலைவர் திரும்பிவரும் போது இப்போது கூடியுள்ள ஆயிரக்கணக்கான தோழர்கட்கு மேல் லட்சக்கணக்கில் கூடி பெரியாரை வரவேற்று அவர் மேனாடு சென்று ஆங்கு தான் கண்ட அநுபவத்தை எடுத்துக்கூறுவார்கள். அதைக்கேட்டு நாம் அமுலில் நடத்துவோமாக என்பதை தங்களுக்குஞாபகப்படுத்தி விட்டு என் சொற்பொழிவை முடித்துக்கொள்ளுகிறேன்.

பின்னர் தலைவர் முடிவுரை கூறியதும் இரவு 8-30 மணிக்கு கூட்டம் இது முடிந்தது.

---

## அபிராமம்.

நாளது 1932-ஞு ஜூலைமீ 17௳ ஞாயிற்றுக்கிழமை இரவு மணி 10க்கு நத்தம் முஸ்லீம் நேயர் சங்க ஆதரவில் நபிகள் நாயகம்பிறந்த தினவிழாக் கொண்டாட்டம் அபிராமம் முஸ்லீம் செக்காண்டரி ஸ்கூல் உர்தாமுன்ஷிஆலி ஜனாப் எஸ். செய்யத் அப்துல் ஜப்பார் அதர்கள் தலைமையின் கீழ்க்கொண்டாடப்பட்டது.

தலைவர் முன்னுரைக்குப் பின் "நபிகள்நாதர் (ஸல்) ஜனனதினவிழா" என்ற துண்டுப்பிரசுரத்தை ஜனாப் வி. எம். முஹம்மதுகனி அம்பலம் அவர்கள் வாசித்தார். நபிகள்நாதர் சேவைகள் என்ற விஷயம்பற்றி ஜனாப் எம். கே. எம். முஹம்மது இபுறாகீம் அவர்கள் மிகஉருக்கமாய் அநேகமேற்கோள்களுடன் பிரசங்கித்தார். ஜனாப் முஹம்மது கனிபாஅவர்கள் நபிநாயகப்புகழ்ப்பாக்கள் பாடினார். அதன் பின் காரியதரிசி அஹமத்நபியும் (ஸல்) அயல் மதவாதிகளும் என்ற புஸ்தகத்திலிருந்து சிலபக்கங்கள் வாசித்து, நபிகள் திலகமவர்களின் சமூக சீர்திருத்தங்களைப்பற்றி சிறிது நேரம் உபன்யாசித்தார். "நபிகள்நாதர் (ஸல்) ஜனனதினவிழா" என்ற துண்டு பிரசுரம் சபையில் விநியோகிக்கப்பட்டது. காரியரிசியால் வந்தனோபசாரம் கூறப்பட்டானதும் சென்னை தீ நள் இஸ்லாம் ஆசிரியர்அவர்களால் இயற்றப்பட்ட "அஹ்மத்நபியும் (ஸல்) அயல் மதவாதிகளும்" என்ற புஸ்தகங்களும் விநியோகிக்கப்பட்டது பின்னர் சபையினருக்கு சிற்றுண்டி வழங்கப்பட்டு சபை சுமார் 11 30 மணிக்கு இனிதேகலைவுற்றது

(ஒரு நிருபர்.)

---

## பெண் தேவை.

சுமார் 30 வயதிற்குட்பட்டவரும், இதுவரை விவாகமில்லாதவரும், ஒரு பத்திரிக்கை ஆபீசில் கௌரவமான உத்தியோகம் வகிப்பவரும், போதிய வருமானமுள்ளவருமான எனது சகோதரருக்கு ஒரு பெண் தேவை. பெண் எந்தச் ஜாதியையேனும், மதத்தையேனும் சார்ந்தவராய் இருக்கலாம். விதவையாயினும் பாதகமில்லை. நல்ல தமிழ் படிப்பு இருக்கவேண்டும். கொஞ்சம் ஆங்கிலம் தெரிந்திருந்தால் மிகவும் சிலாக்கியமே. விவாகம் சீர்திருத்த சிக்கன முறையில் நடத்தப் பெறும். கடிதங்கள் ரகசியமாய் வைக்கப்படும். விருப்பமுள்ளவர்கள் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

மீனாட்சி.
C/O குடி யரசு
ஈரோடு.

---


உங்கள்
**கண்ணையும்**
**காதையும்**
**கவனித்துக் கொள்ளுங்கள்**

**பூவிழல் !!**

கண்ணில் பூவிழுந்து பார்வையைத் தடுப்பதை ஆபரேஷன் இல்லாமல் சுகப்படுத்தப்படும். நிலைமை எவ்வாறு இருப்பினும் நான்கு வாரங்களில் நிச்சயமாக குணப்படுத்தி விடுவோம்.

**செவிடு !!**

பாதி அல்லது முழுவதும் செவிடாயிருந்தால் கூடப் பரவாயில்லை. காதிரைச்சல், தலைவலி இருந்தாலும் அக்கரையில்லை. சுத்தமாக நிவர்த்திக்கப்படும். குணத்திற்கு உத்திரவாதம்.

விபரங்களுக்கு இங்கிலீஷில் விண்ணப்பித்துக் கொள்ளவும்.

**"Sri" Works**
**Beadon St. Calcutta.**

---

**"செவிடு"**

மற்றெல்லாவித காது நோய்களையும் குணப்படுத்துவது "கரம்த்எண்ணெயே" ஒரு பாட்டில் வாங்கி உபயோகித்துப் பாருங்கள். பலனுக்கு உத்திரவாதம்.

1 பாட்டல் எண்ணெய் விலை ரூபாய் 1—4—0.

1 பாட்டில் டிராப்பர் உள்பட விலை ரூபாய் 1—8—0.

3 பாட்டல் வாங்குபவர்களுக்கு தபால் செலவு இனாம். இங்கிலீஷில் விண்ணப்பிக்கவும்.

Ballabha & Sons
Pilibhit R. K. Ry., U. P.


---

## உடனே தேவை.

நமது பத்திரிகை விற்பனை செய்வதற்குக் கீழ்க்கண்ட நகரங்களில் டிபாசிட் கட்டக்கூடிய ஏஜண்டுகள் உடனேதேவை.

சேலம்.
கோயம்புத்தூர்.
பொள்ளாச்சி.
ஜோலார்பேட்டை.
தஞ்சாவூர்.
வாணியம்பாடி.

விபரங்களுக்கு எழுதவும்.

மேனேஜர், குடி அரசு

---

**கடவுள்கள்**
**என்பவை**
**விளையாட்டுக்**
**கருவிகள்.**

[5ம் பக்கத்தொடர்ச்சி]

லாஆடவரையும், அல்லது எல்லா
ஸ்திரீகளையும் அந்த ஸ்திரீயோ புரு
ஷனோ ஏன் காதலிக்கக்கூடாது?
என்ற கேள்வி எழும்! மற்றும் சிலர்
அவர்கள் ஓர் ஊர்க்காரராய் அல்லது
உறவினராய் இருந்ததால் அவர்கள்
நட்பினராகவும் காதலராகவும் நேர்ந்
தது எனக் கூறுவர். ஆனால், இதற்
கும் முந்திய ஓர் காரணம் இருக்க
வேண்டும், இல்லையெனில், ஒரே
ஊரில் உள்ள எல்லோரையும் அவ
னோ, அவளோ, நட்பினராகக் கொண்
டுஏன் காதலிக்கக்கூடாது? அல்லது
நெருங்கிய பந்துவாயுள்ள எல்லோ
ரையும், ஏன் காதலிக்கக்கூடாது?
என்ற கேள்விகளுக்கு விடையிறுத்
தாக வேண்டும்.

எனவே இக்காரணங்களெல்லாம்
அவ்விருவரும் ஒருவரையொருவர்
காதலிப்பதற்கு உதவியாயிருந்தன
எனக்கூறுவதுதான் பொருத்தமு
டையதாகும். அப்படியாயின் இதற்
குஓர் "ஆதிகாரணமும்" வேண்டுமல்
லவா? அது எது? எனில் இங்குதான்
"அழகு" என்னும் சொல் இடம்
பெறுகிறது உடனே சிலர் "அழகில்
லாத அவலக்ஷணமான ஒரு ஸ்திரீயும்
புருஷனும் காதலிக்கின்றார்களே,
அதற்கு என்ன காரணம்? எனக்கே
ட்கமுற்படுவர். இங்கு "அழகு" என்
பதைச்சற்று தெளிவு படுத்த வேண்
டியதாயிருக்கிறது.

அவலக்ஷணமாண இருவர் (ஒரு
ஆணும், பெண்ணும்) காதலிப்பார்
களாயின், அவர்கள் அழகாயிராத
காரணத்தால் அவர்களது காதல்,
அழகின்மேல் எழுந்ததன்று, எனக்
கூறுவதுதவறும். அவ்விருவரும் ஒரு
வரிடம் ஒருவர் ஏதோ ஓர்வித அழகு
கண்டே காதலிக்கின்றனர் என்பது
தான் உண்மை. எத்தகைய அழ
கெனில், அவர்களது நடையழகு,
உடையழகு, சொல்லழகு, குணஅழகு
செயலழகு போன்ற "அழகு" களில்
வெளிலக்ஷணமற்ற அவ்விருவரும்
ஒருவரோடொருவர் ஈடுபடுகின்ற
னர். "புறஅழக"ற்றோர் (வெளிய
ழகு) "அகஅழகு" (உள்ளழகு)ம்
அற்றவர்களாகவே இருத்தல்வேண்டு
மென்பது என்னநியதி? வெளித்
தோற்றத்தில் குரூபியாகவுள்ள ஒரு
வர், மிகவும் விவேகியாகவும், குண
சீலராயும் பெருந்தன்மையும் கண்
ணியமுங்கொண்ட பேருபகாரியா
யும் இருப்பதையும், வித்தையிலுங்
கூட அத்தகைய ஓர் குரூபி சிறந்த
சங்கீத வித்வானாகவோ, சிற்ப சாஸ்
திரியாகவோ இருப்பதையும் நாம்
காண்கின்றோமல்லவா? எனவே,
"புறஅழகி"ல்லாவிடினும், அவ்வழ
கற்ற ஒரு ஆடவனும் ஸ்திரீயும்
மேற்கூறிய "அகஅழகு"பற்றி ஒரு
வரையொருவர் விரும்பக்கூடும்.
நாளடைவில் அவ்விருப்பம் நட்பாக
வும் பின்னர் காதலாகவும் விர்த்தி
யடையக்கூடும். ஆதலின் வெளி
யழகற்ற காதலருங்கூட, ஓர்வித
"உள்ளழகி"ன் காரணம்பற்றியே
காதலிக்கின்றனரென்பது இனிது
புலனாகின்றதன்றோ? இஃதிவ்வாற
ல்லவெனின் நாம் பிரத்தியட்சத்தில்
காண்கிறபடி ஓர் அழகியபெண்
வெளித்தோற்றத்தில் லக்ஷணமற்ற
ஒருவனை உண்மையாகக்காதலிப்பத
ற்கு என்னகாரணம்? என்ற சரி
யான விடைதரமுடியாத கேள்விக்
குப்பதில் கூறவேண்டியதாகும்.
தோழர்களே!

இதுவரை நாம் கூறிவந்தவற்றால்
உலகில் வாழும் உயிர்களனைத்தும்
—அனைவரும் இன்பத்தையே நாடி
நிற்கின்றனர் என்பதும், மற்றெவ்
வகை இன்பத்தையும் விட உண்மை
க்காதலின் இன்பமே மிகப்பெருமை
யுடையதும், உண்மை இல்லற சுகத்
தைத்தரத்தக்க மேம்பட்டதனி இன்,
பமென்பதும் கண்டோம். அத்து
டன் அவ்வின்பத்தின் காரணமான
காதலும் ஏதோ ஓர்வித அழகுபற்றி
யேஏற்படுகிறதென்பதுங் கண்டோம்
எனவே இவற்றிலிருந்து நாம் முத
லில் கூறியபடி "அழகு என்பது
தனிப்பட்ட வசீகரம் பொருந்திய
ஒருவார்த்தை" என்பது மெய்ப்பிக்
கப்படுவது காண்க. அதன் காரண
மும் "அவ்வழகு இன்பத்தைத்தர
வல்லதாயிருப்பதுதான்" என்பதும்
இவ்வுலகமே இன்பத்தின் வழிநோக்
கித்தான் இயங்கிக்கொண்டிருக்கின்ற
தென்பதும் நன்கு விளக்கப்பட்ட
மையும் அறிக.

இத்தகைய அழகை விரும்பாதார்
யாரேனுமுலகிலுண்டா? இல்லைய
ன்றோ? ஒவ்வொருவரும் ஒவ்வொ
ருமனிதனுக்கும் அல்லது மகளுக்
கும் "பொது உடமையான அழகை
இயற்கையின்படி அவ்வழகின்மேல்
உண்டாகும் இன்ப உணர்ச்சியை
அனுபவிப்பதுதான் நீதி. ஒவ்வொ
ருவரும் அவரவர்மனம் உண்மை
அழகு கண்ட இடத்தில் ஒன்று சேர்
வதுதான் இயற்கையின் தத்துவத்
திற்கு ஒத்ததாகும்.

ஆனால் இன்று இந்நாட்டில் ஒவ்
வொருவரும் உண்மையான தத்து
வத்துடன் அழகின் இயற்கை இன்
பத்திற்கு உயர்வும் மதிப்
பும் கொடுத்து, ஆணும் பெண்ணும்,
மக்களின் "பொதுஉடமை" யாகிய
இன்பத்தை அனுபவிக்கிறார்களா?
அது சாத்திய மானதாக இருக்கிற
தா? "இல்லை" யென்ற விடைதான்
இங்கு நமக்குக்கிடைக்கிறது.

என் கிடைக்க வில்லை என்பதை
ஆராய்ந்து அதன் காரணத்தைக்
கண்டுபிடித்து, அதனைத் தகர்த்தெ
றிய வேண்டும். மக்களெல்லோருக்
கும் பொதுவான இன்பத்தை அளிப்
பதான "அழகு" விரும்பும் எந்த
ஒரு ஆண்பாலும் பெண்பாலும்
தடையின்றி அனுபவிக்க தக்கபொது
உடமையாகிய இன்பம் (அழகு) தகு
தியற்ற இடத்தில், மனம் பொருந்
தாத விருப்பமற்ற இடத்தில் பலவந்
தமாகத் "தனிஉடமை" யாக செய்
யப்பட்டிருப்பதுதான் மனிதனுக்
குள்ள "பொதுஉரிமை" யை உரி
மைப்படி அனுபவிக்க இடையூறாய்
நிற்கிறதென்பது விளங்குகிறதல்ல
வா? அத்தகைய பொது உடைமை
யாகிய "அழகின் இன்பம்" ஒவ்வொரு
மனிதனுக்கும் ஒவ்வொரு ஸ்திரீக்கும்
அவரவர் மனஇணக்கப்படி கிடைக்
கும்படி செய்யவேண்டியது நீதியல்ல
வா? கடமையல்லவா? இது யாரு
டைய வேலை? (அறிஞர்கள் சிந்திக்க)
இங்கிதனை இம்மட்டோடு நிறுத்தி
இப் "பொது உடைமை" யாகிய
அழகின்பம் எவ்வாறு ஒருசிலரின்
"தனிஉடமை" யாக ஆக்கப்பட்டி
ருக்கிறதென்பதையும் அதை இயற்
கைப்படி மக்களின் "பொதுஉடை
மை" யாக்கும் முறையாதென்பதை
யும் அடுத்த கட்டுரையில் விளக்கு
வாம்.

———

(4-ம் பக்கத்தொடர்ச்சி)

துக்கல்லும் (Portugal) அடிமை
களை வைத்தாண்டும் வர்த்தகம் புரிந்
தும் வந்தன. அவ்விரு நாட்டின
ரது கொடுங்கோன்மைக்கும், கொ
டுஞ்செயல்கட்கும் அளவும், எல்லை
யும், கணக்குமுண்டோ? "கிறைஸ்
துவ" அரசன் சால்சு ஐந்தாமானும்
ஒரு "கிறைஸ்துவ" சந்நியாசியுந்
தான் ஸ்பெயினுக்குட்பட்டிருந்த
தென்அமெரிக்காவில் பழைய உல
கத்திற்கும் (ஐரோப்பா) புதிய உல
கத்திற்கும் (அமெரிக்கா) இடையில்
அடிமை வர்த்தகத்தை நிலை நாட்டி
னர். ஏறக்குறைய 1800 ஆண்டு
களாய்க் கிறைஸ்துவர் அடிமைகளைப்
பண்ணையாட்களாய் வைத்துக்கொடு
மைப்படுத்தி வந்தனர். விலைக்கு
வாங்கினர். விற்றனர். அடிமை
களை விருத்தி செய்தனர், பிறரிட
மிருந்து திருடினர். "பரிசுத்த"
பிறிஸ்ட்டல் நகரமும் "தெய்விக"
லிவர்ப்பூல் பட்டினமும் ஏறக்குறைய
100 ஆண்டுகட்கு முன்னர் அடிமை
வியாபாரத்தில் பெரும் பொருளீட்டி
க்கொடுத்துவந்தன. 9-ம் நூற்றாண்
டில் கிரேக்க கிறைஸ்துவர் சரசேன
ருக்கு அடிமைகளை விற்று வந்தனர்.
11-ம் நூற்றாண்டில் விலை மகளிர்
அடிமைகளாகரோம் நகரின் தெ
ருக்களில் விற்கப்பட்டனர். அதிற்
கிடைத்த இலாபம் "திருச்சபை"க்கு
அளிக்கப்பட்டது.

அடிமை மீட்பருள் சிறந்தவரான
வில்லியம் வில்வேர்போர்சு
(William Wilberforce] என்
பவர் கிறைஸ்துவனென்று சொல்லப்
படுகிறது ஆனால் அவரது கிறைஸ்து
வத்தில் சந்தேகம், மிக்க பலமாய்
வேலை செய்திருக்கவேண்டும். அடி
மைகளுக்கு விடுதலையளித்தல் வே
ண்டுமென்று மன்றாடி உழைத்த
அவர் விவிலியத் "திருமறை" யின்
லேவியராகமம் 25-ம் அதிகாரம்
44, 46-ம் வாக்கியங்களையும், யாத்
திராகமம் 21-ம் அதிகாரம் 2—6-ம்
வசனங்களையும் ஒப்புக்கொள்ளவி
ல்லை, உதறித்தள்ளியே யிருத்தல்
வேண்டும். அவை:— "உன் ஆண்
அடிமையையும், பெண் அடிமையை
யும் உன்னைச்சுற்றியுள்ள பிறசாதிக்
காரராயிருக்கட்டும் அச்சாதியாரிட
மிருந்து நீ அடிமைகளை விலைக்கு
வாங்கலாம், உங்களீ தேயத்தில்
தங்குகிற பிறநாட்டினரை நீங்கள்
அடிமைகளாகக்கொண்டு தலைமுறை
தலைமுறையாக அவர்கள் உங்கள்
குடுப்பத்தில் அடிமைகளாகவிருக்
கும் படிச்செய்து கொள்ளலாம்
"ஒருவனை அடிமையாய்க்கொண்டா
யானால் அவன் ஆறு ஆண்டுகள்
உன்னைச்சேவித்த பின் ஏழாம் ஆண்
டில் ஒன்றும்கொடாமல் விடுதலை
பெற்றுக்கொள்ளட்டும், தனியனாய்
வந்திருந்தானாயின் தனிமையாயும்
மணம் புரிந்தவனாயின் அவன் மனவி
யுடனும் போகட்டும். ஆனால் அவ
னது ஆண்டவன் அவனுக்கு மணம்
புரிவித்து அவனுக்குப்பிள்ளைகள்
பிறந்திருந்தால் அப்பெண்ணும் பிள்
ளைகளும் அவனது நாயனைச்சேர்ந்த
வர் அவன் தனியே போகக்கடவன்
எனினும் அவன் தன் பெண்டுபிள்ளை
களைவிட்டுப் பிரியமனமிலானாயிருந்
தால் அவனது நாயன் அவனை நியா
யாதிபதிகளிடத்தில் அழைத்துப்
போய் அடிமையைக் கதவண்டை
யில் நிறுத்தி அவன் காதுகளைக்
கம்பியாற்குத்தி அடிமை அடையாள
த்தை நிலை நாட்டட்டும் 'அதன்பின்
அவன் என்றைக்கும் அவ்வாண்ட
வனைச்சேவித்துக்கொண்டிருப்பான்.'

மேற்போந்தவற்றைக் "கடவுள்"
மொழியென்று அவர் ஒப்புக்கொண்
டிருந்தால் அவர் அடிமைகளைமீட்க
உழைத்திரார். தமது "தெரிந்தெடு
த்த சனங்கட்கு"த் தாம் அளித்த
சிறப்புரிமைகளையும் அடிமைகளை
வைத்துக்கொள்ளுமாறு பணித்த
கட்டளைகளையும் விவிலியத்தில்
"விவிலியக்கடவுளா" ன எகோவா
டாவின் "அருள்மொழிகளாகக்காண
லாகும். அவர் விவிலியக்கொடுமை
யைச் சகியாதவர் 1796-ம் ஆண்டு
பெப்றவரிமாதம் 18-ம் தேதி வில்
பேர்போர்சு பாராளுமன்றப் பொது
மக்கள் கழகத்தில் அவிசுவாசமும்
அராசகமும் நிறைந்த விரான்சு
(France] தேயமானது ஆப்ரி
க்கா அடிமைகட்கு விடுதலையளித்
திருக்க ஒழுங்கஉனகோன் ஆட்சி
முறையும் நேர்மையுமுடைய "கிறை
ஸ்துவ" இங்கிலாந்து நியாயவீன
மான தம் கொடியதுமான அடிமை
வர்த்தகத்தைத் தொலைக்க முற்பட
வில்லை. பிடிவாதமாய் நிற்கின்றது"
என்று பேசினார். அவர் அடிமை
மீட்சியைப்பற்றி பேசி உழைத்து
தருகையில் அவருக்கு எதிராய் ஆங்
கில நீதிமன்றங்களின் செல்வாக்
கனைத்தும் அத்தியட்ச பீடங்களின்
(Episcopal branch] வலிமை
முழுவதும் உபயோகிக்கப்பட்டன.
"கிறைஸ்துவப்" பெருவேந்தன்
மூன்றும் ஜோட்ஸ் என்பானும் அக்
காலகு மக்கள் கழகமும் அடிமை
விடுதலையைப்பற்றிப்பேசவோ, வாதி

டவோ விரும்பினாரல்லர். அடிமை மீட்சிக்கு அவர் விரோதமாயிருந்தனர்.

டெமெற்றேரு என்றநாட்டிலுள்ள (Demerara] நிகிரோவருக்கு கிறைஸ்து மதப்பிரசாரகர் அச்சமயத்தைப்போதிக்க முற்பட்ட காலே "கிறைஸ்துவ" இங்கிலாந்தின் அதிகாரம் பெற்ற "கிறைஸ்துவ". நீதிபதிகள் அப்பாதிரிகளைக்குற்றவாளிகளெனத்தீர்த்தனர். 1824-ம் ஆண்டில் ஆங்கிலக்கிறைஸ்துவ சபையின் அதிகாரம்பெற்ற ஒரு உத்தியோகத்தன் அடிமைகளை ஏலத்தில் விர்க விளம்பரஞ்செய்தார். நீகிரோ அடிமைகள் தமது கேவல நிலைமையைக் குறித்துச் சிந்தை செய்து தமது நிலைமையை யுயர்த்தப் பாடு படவேண்டு மென்று போதித்ததற்காய் இன்னொரு பாதிரி சுட்டுக் கொல்லப்பட்டார். அவ்வாறு செய்தது ஒரு "கிறைஸ்துவ சபை" இராணுவ நீதி மன்றமாகும். அதேகுற்றத்திற்காய்—அடிமைமீட்சி வேலை செய்ததற்காய்— வேறொரு மதப்பிரசாரகன் தூக்கிலிடப்பட்டார். நீதிபதிகள் இங்கிலாந்து சபையினர் பாதிரியோ உருவசிலியன்மெதொடியற் பிரிவினன். ஆனால் குரூரத்திலும் கொடுமையிலும் எல்லாக்கிறிஸ்துவ சபைகளும் ஒன்றையொன்று முந்திவிடப் போட்டியிட்டன வென்றறிக. அதே நாட்டிலுள்ள உரோமன் கத்தோலிக்கர் நீகிரோ அடிமைகளை மனிதரென்று மதித்து நடத்தியதற்காய் "ஈசுபத்தர்" (Jesints] என்ற மதப்பிரிவினரைக்கடுமையாய்த் தாக்கினர். அவர்களைப்பெருங்குற்றவாளியென்றே தீர்ப்பிட்டனர். வைதீகக் கிறைஸ்தவரே தமது தோட்டங்களிலுள்ள ஆடுமாடுகள் பல்கிப்பெருகுவதில் எவ்வளவு கரிசனையெடுத்தனரோ அவ்வளவு கரிசனையுடன் தான் அடிமைகளை நடத்திவந்தனர். "எங்கள் அடிமைகளை நீங்கள் திருத்திப் படிப்பிக்கவிடோம் சட்டப்படி அவர்கள் (அவைகள்?) எங்கள் சொத்து. ஆனால் கல்விகற்றபின்பும், சமய அறிவு உண்டான பிறகும் எங்கட்கு என்றென்றும் அவர்கள் அடிமைகளாக விருப்பரென்று நீவிர் திட்டமாய் உறுதி கூறமுடியுமேல் அடிமைகளுக்கு அறிவூட்டலாகும்" என்று அந்நாட்டுக் "கிறைஸ்துவ" ப்பத்திரிகை 1823ல் எழுதியது.

வில்லியம்லோய்ட்காறிசன் என்றஅடிமை மீட்பன் (அவர் ஒரு புனிதன்) உண்மையாய் அடிமைமீட்சிக்காய் உழைத்த வீரன்,) போஸ்ட்டன் நகரில் அவரது அடிமை விலக்குச் சொற் பொழிவுகளை நிகழ்த்த முயன்ற பொழுது அந்நகரிலுள்ள "கிறைஸ்தவ" சபையினர் தத்தம் மண்டபங்களையும், கூடங்களையும் மூடிவிட்டு அவருக்கு இடங்கொடுக்க மறுத்துவிட்டனர். கடைசியாய் "அவிசுவாசியும், நாத்திகனும்," "போஸ்ட்டன் இன்வெஸ்ற்றிக்கேட்டர்" என்ற பத்திரிக்கையின் ஆசிரியருமான அப்னெர் நீலன்ட் என்ற அறிஞரின் வீட்டிற்றான் அச்சொற் பொழிவு நிகழ்த்தப்பட்டது. அவரையும் "தெய்வநிந்தனை" என்ற குற்றத்திற்காக மறியலுக்கனுபினர். அன்றியும் லோய்ட்காறிசனைத் தூக்கிலிட்டுக் கொன்றிட எடுக்கப்பட்ட முயற்சியில் சில "கிறைஸ்தவ" சபைகளின் உதவியாளர்கள் என்ற உத்தியோகத்தர்கள் அதிக உற்சாகத்துடன் பங்கெடுத்தனராம்.

1790ல் அமெரிக்க ஐக்கிய மாகாணநாடாளுமன்றத்தில் அடிமை மீட்சியைப் பற்றிப்பேசப்பட்ட பொழுது தென்கரோலின மாகாணப் பிரதிநிதியெழுந்து "தென்பகுதிக்குருக்கள் அடிமைகளை வைத்தாளுவதற்காவது அடிமைவர்த்தகம் செய்வதற்காவது எதிராய் இல்லை" என்று பெருமையுடன் கூறினர். ஜோட்சியா மகாணப் பிரதியான ஜெக்சன் என்பார் விவிலியத் "திருமறை" யில் ஆதியாகமந் தொடங்கி வெளிப்படுதல் இறுதியாகவுள்ள எல்லா விதிகளும், சட்டங்களும் அடிமை வர்த்தகத்திற்குச் சார்பாகவும் அனுகூலமாகவுந்தானிருக்கிற தென்றார். "நடுங்குவோர்" அல்லது "நண்பர்கள்" என்ற (Quakers or Friends) கிறிஸ்தவப் பிரிவைச் சார்ந்த எலியசு இக்கிசு என்ற அடிமை மீட்பனை "நாத்திகன்" என்று ஆத்திக சிகாமணிகள் கூறுத்தொல்லைப் படுத்தினர். இருபது ஆண்டுகட்குப் பின்னர் அவரைப்பின்பற்றி அடிமை மீட்சிக்காயுழைத்த ஒரு சட்ட சபை அவயவியைச் சட்ட சபையிலிருந்து விலக்கி விட்டனர். ஏனெனில் அவர் அடிமைகளுக்காய்ப் பரிந்து பேசினமையால் சமய விரோதியாய் விட்டனராம்! கிறைஸ்தவர்களின் தண்ணளிதானென்னே!!

வடஅமெரிக்காவில் அடிமை விடுதலைச்சட்டம் விவாதிக்கப்பட்ட போழ்து எல்லாப்பிரிவுகளையும் சார்ந்த "கிறிஸ்தவ" க்குருக்கள் தத்தம் பிரசங்க பீடங்களிலிருந்து அதற்கெதிராய்ப் பேசினர்; சொன்மாரி பொழிந்தனர். கொடிய அடிமை வர்த்தகத்திற்கநுகூலமாய்த்தம் நாவன்மையைப் பிரயோகித்தனர். சாமுவேல் ஜேபிசுமேய் என்ற பாதிரி அடிமை கட்காக மன்றாடின காரணம் பற்றி "மதவிரோதி" என்றமைக்கப் பட்டுச் சபையை விட்டு நீக்கப்பட்டார். உவென்டெல்விலிப்பிசு என்ற இன்னொரு பேர்போன பிரசங்கி அடிமை மீட்சியைப்பற்றிப் பேசாதிருத்தல் வேண்டுமென வடபகுதிக் குரவன்மார் அவரை வெகுவாய் வேண்டியதன்றி அவர் உடாயையடைக்கவும் முயன்றனர். சால் கசம்னெர் என்ற ஒரு வீரஅடிமை மீட்பனை அடித்துக்கொன்றதைப் பாராட்டித் தென்படுத்திக் குருக்கள் தமது பிரசங்க பீடங்களிலிருந்து புகழ்மாலை பாடினர். எலிசாலொவ்ஜோய் என்ற மற்றொரு தொண்டனைக் கொன்ற மனிதர் கண்ணியமாய் மதிக்கப்பட்ட "கிறிஸ்தவரே" யாகுவர்.

குவிசாட் என்ற பெயரிய ஒருவர், அடிமைவர்த்தகத்தைத் தொலைக்க "கிறைஸ்தவ" சபை மிகுதியும் உழைத்தது; அதன் செல்வாக்கு அவ்வழியிற்சென்றது; என்றெல்லாம் எழுதித் தஞ்சமயத்தை மேம்படுத்துகின்றாரெனினும், வேறொரு பாகத்தில் "அடிமை வர்த்தகம் ஒழிந்ததற்குக்கிறைஸ்தவமே காரணமென இக்கழகத்தில் அடிக்கடி சொல்லப்படுகிறது. ஆனால் இது மிகைப்படக் கூறியதாகும். பன்னெடுங்காலமாய் அடிமை வர்த்தகம் கிறைஸ்தவ உலகத்தில் நிலைத்திருந்தது, அதைக் குறித்து கிறைஸ்தவ சபை வருந்தவுமில்லை; வியப்படையவுமில்லை; நீக்கவழிதேடவு மில்லை; ஒன்றுக்கு மேற்பட்ட பல்வேறுகாரணங்கள் நாகரிகவுணர்ச்சிகள்; தண்ணளிததும்பிய எண்ணங்கள் கருத்துக்கள், அறிவுவளர்ச்சி யாதின ஒருங்கு கூடி உலகிலுள்ள அதிக்கிரமங்கள் அல்லது பாபகிருத்தியங்களுள் தலைசிறந்த அடிமை வர்த்தகத்தைத் தொலைக்கவேண்டியதாயிற்று என்று சொல்கிறார். அவர் குறிப்பிடுங்காரணங்கள்—அதாவது மனிதத்தன்மையான நல்லெண்ணங்கள்—மக்களிடை தோன்றி வளராவண்ணம் "கிறைஸ்தவ" சபை பலமாயிருந்ததேதத்தரசுகளால் தடுக்கப்பட்டுவந்தன. விடுதலை கோரியுழைத்த வீரஞ்செறிந்த புனிதவாதிகளை யெல்லாம் "கிறைஸ்தவ" சபை அடித்தும் உதைத்தும், கட்டியும் எரித்தும், தூக்கிலிட்டும், மறியலில் மடியவிட்டும் துன்புறுத்தி வந்தது. "கிறைஸ்தவ" சபையின்பலம் அதிகரிக்க, அதிகரிக்க அதன் கொடுமையும், குரூரமும் விருத்தியடைந்து கொண்டிருந்தன.

சில நூற்றாண்டுகட்கு முன்வரை "கிறைஸ்தவ" உலக மெங்கும் அடிமை வர்த்தகம் நடந்துவந்தத தன்றி அது "கடவுள் அருளும்" "தெய்வ சம்மதமும்" பெற்ற தென்றும் எண்ணப்பட்டுவந்தது. இந்தத்தவறான எணணம் எப்போதொழிந்த தென்றும், அதற்குக்காரண மென்ன வென்றும், திட்டமாய்க் கூறுவதற்கியலாது. பல காரணங்கள் கூறலாகும். ஆனால் அனைத்திலும் முக்கியமான தென்னவெனில் ஒரு அடிமை செய்யுந்தொழிலை அல்லது வேலையைக் காட்டிலும், விடுதலையடைந்த தொழிலாளி, தன் பிரியப்படி மிக்க அதிகமான வேலை செய்வானென்ற பொருளாதார அறிவேயாகும். முன்குறிப்பிட்ட பிழையான விளக்கம் என்று ஒழிந்ததோ அன்றே அடிமை மீட்சியுந் தொடங்கியது." என்று சங்கை பொருந்திய விறான்சிசுமிடன் பாதிரியார் எழுதுகின்றார்.

அடிமைகளைப் பண்ணையில் வைத்து வேலைவாங்கும் வழக்கம் "கிறைஸ்தவ" ஸ்காத்துலாந்தில் 17-ம் நூற்றாண்டில் குடி கொண்டிருந்தது கிழக்கு லோதியன் என்ற விடத்திலுள்ள நிலக்கரிக் கேணிகளிலும், உப்பளங்களிலும் வேலைசெய்து கொண்டிருந்த அடிமைகள் உயிரற்ற பண்டங்களாகவும், விளையாட்டுச் சாமான்களாகவும் கருதப்பட்டு வந்தனர். அதற்கு 30 ஆண்டுகட்குப் பின் அமெரிக்காவின் தென்பகுதிகளில் நீகிரோவர் விலங்குகளையொப்ப நடத்தப்பட்டனர், இவ்வடிமைகள் (ஸ்காத்லாந்தில்) விலைக்கு வாங்கப்பட்டும், விற்கப்பட்டும், ஈடுவைக்கப் பெற்றும் வந்தனர். தங்கள் நாயன் மாருக்கு அவர் என்றும் அடிமைகளே. "ஸ்காத்துலாந்து நாட்டு" புரோட்டெஸ்ற்றான்று குருவின்மார் தம்முன் மிகக் கொடுமையாய் நிகழ்ந்து வந்த அடிமை வியபாரத்திற்கெதிராய் ஒருசொல்லேனுங்கூறவில்லை. 1799-ல் குடியரசும், சமயவிரோதமும், விடுதலைப்பித்தும் கொண்ட பிரான்சு [France] அடிமைகளை விடுவித்து முன்மாதிரி காட்டியபின்னரே "கிறைஸ்தவ" ஸ்காத்துலாந்தில் அடிமைகள், சட்டத்தால் விடுதலையடைந்தனர் என்று றூபட்சன் எழுதுகிறார்,

(தொடரும்)

---


Goshaye office pillss.

கோஷாயி

ஆபீஸ் மாத்திரை



உதவி டாக்டர்
Dr. T. K. V
Chalam.

மலச்சிக்கலுள்ள ஆண், பெண், பாலர், விருத்தர்களும் எவ்வித பத்தியமுமில்லாமல் சாப்பிட்டு குணமாகக்கூடிய கோஷாயி ஆபீஸ்மாத்திரை 51 கொண்ட சீசா 1க்கு ரூ. 1—10—; 101-க்கு 3—0—0. வி. பி. பாக்கிங் சாஜ் வேறு.

டாக்டர் B. A. எதிராஜ்,
(காலரா பைரி) கோஷாயி வைத்தியசாலை,
தேன்னூர், திருச்சி.

(3-ம் பக்கத்தொடர்ச்சி)

மாணவர் மகாநாடு" என மற்றிரண்டு எதற்கு? என்று கேட்கின்றார்கள்.

தமிழ்ப்புலவர் மகாநாடென்றும், "தமிழ்மாணவர் மகாநாடென்றும் வேறு இரண்டு தனிமகாநாடுகள் பிரித்திருப்பதிலிருந்தே, இதுசைவசமயத்திற்கு ஆக்கம் தேடும் நோக்கங்கொண்ட கூட்டமாக இருக்கக்கூடுமோ என்று கேட்கும் கேள்விகளுக்குச் சரியான விடை கூற முடியாமல் தானிருக்கிறது. ஆகவே மேற்கண்டவாறு ஐயுறும் கூட்டத்தாரை, தமிழர் மகாநாட்டார் பொருட்படுத்தக் கூடியவர்களாயிருந்தால், மற்றொரு அறிக்கையின் மூலம் விளக்கிவைக்க வேண்டியது அவசியமாகும்.

மற்றும் சிலவார்த்தைகள் கூற விரும்புகிறோம். உண்மையில் தமிழ் மொழிவளர்ந்தோங்க வேண்டுமானால் சமயத்திற்கும், மொழிக்கும் சம்பந்தம் இல்லை என்று வறையறுக்கவேண்டும்.

நமது தமிழ் மொழி கெட்டழிந்து போனதற்குக் காரணம், இம்மொழி சமயப்பித்தர்களின் கையில் அகப்பட்டதேயாகும்.

தமிழ்மொழியில் உள்ள நூல்களை இலக்கிய நூல் இன்னின்னவை யென்றும், சமய சம்பந்தமான நூல்கள் இன்னின்னவை யென்றும் பிரித்து இலக்கிய சம்பந்தமான நூல்களையே, வளர்க்கவும், பள்ளிக் கூடங்களில் பாடங்களாகச் சேர்க்கவும், கீழ் நாட்டுக்கலை பட்டப்பரீக்ஷைகளுக்குப்பாடங்களாக அமைக்கவும் ஏற்பாடு செய்யவேண்டும்.

சமய சம்பந்தம் இல்லாமல், இலக்கியம், அறிவு நூல், பூமிநூல், வான நூல், ரசாயன நூல், உடல் நூல், மருத்துவ நூல், சம்பந்தமாக எழுதப்படும் புத்தகங்களையே ஆதரிக்க வேண்டும்.

ஆங்கிலம் போன்ற அன்னிய மொழிகளில் உள்ள தற்காலமுன்னேற்றத்திற்கு வேண்டிய கலைகளை யெல்லாம் தமிழில் மொழிபெயர்க்கவேண்டும்.

தமிழர்க்குள்ள சாதிவேறுபாடு இருப்பதைஒழிக்கவேண்டும். சாதிகள்ஒன்றுபடும் பொருட்டுக் கலப்பு மணங்கள் நடைபெற வேண்டும். சமயத்தின் பேராலும், சாதியின் பேராலும் எற்பட்டு நடந்துவரும் பொருட்செலவுக்கு இடமான எல்லாம் பொருளற்ற சடங்குகளையும் ஒழிக்க வேண்டும். ஆண்களுக்குள்ள எல்லாச் சுதந்தரங்களும் பெண்களுக்கும் இருக்கவேண்டும். மதம் மக்கள் பிரிவுக்குக் காரண மாயிருப்பதனால் அதைப்பற்றிக் கவலைப்படுவதை விட்டொழிக்க வேண்டும். என்பன போன்ற விஷயங்களைத் தமிழர் மகாநாடும், புலவர் மகாநாடும், மாணவர்கள் மகாநாடும் கவனித்து முடிவு செய்து அவைகளைச்செயலில் செய்ய முயலுமானால் தான் நாட்டிற்கு நன்மையுண்டு, இன்றேல் இதுபோன்ற மகாநாடுகளால் பணம் வீணாவதைத் தவிரவேறு ஒருபயனுமில்லை என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறோம்.

சைவத்தை வளர்க்க, இதுவரையிலும் சைவ சிந்தாந்த சபைகளும், சைவ பரிபாலன சபைகளும், சன்மார்க்க சங்கங்களும், சீவகாருண்யச் சங்கங்களும், கம்பர்கழகங்களும், முருகன் கழகங்களும், நாவுக்கரசர், ஞானசம்பந்தர் சபைகளும்வைத்துப் பார்த்தாகிவிட்டது. இப்பொழுது இவைசம்பந்த மான கூட்டங்களுக்கு ஆட்களைக் கூலிக்கமர்த்த வேண்டிய நிலைவந்து விட்டது.

அடுத்தபடியாகத் தமிழ்ச்சங்கங்களின் யெபரால் இப்பொழு சமயப் பிரசாரம் பண்ணத்தொடங்கியிருக்கிறார்கள். இதுவும் நாளடைவில் கூட்டம் குறைந்து செல்வாக்கற்று வீழ்ந்து விடக் கூடிய நிலைக்கு வந்து கொண்டிருக்கின்றன. சைவப்பெரியார் மகாநாடுகள் கூட்டி சைவத்தை வளர்க்க முயன்றார்கள். அதுவும் பயனில்லாமற் போயிற்று. ஆகவே இப்பொழுது சீர்திருத்தத்தின் பெயரால், தமிழர்மகாநாடு கூட்டிச்சைவத்தைவளர்க்கமுயலுகிறார்கள்என்று சந்தேகப்படுகின்ற எம்போன்ற கூட்டத்தார்க்குச் சந்தேகத்திற்கு இடங்கொடுக்காமல் நடந்து கொள்வதே உண்மையான தமிழர் மகாநாட்டாரின் கடமை எனக்கூற விரும்புகிறோம்.

இச்சமயத்தில், தமிழர்களின் முன்னேற்றத்திற்கு உழைத்து வரும் சீர்திருத்தக் காரர்களுக்கும் ஒரு வார்த்தைசொல்ல விரும்புகின்றோம்.

இம்மகாநாட்டைக் கூட்டுகின்றவர்களின் கொள்கைகளைப்பற்றியும், நோக்கங்களைப்பற்றியும்இப்பொழுதுநாம் கவலைப்படவேண்டிய அவசியமில்லை. மகாநாட்டிற்குத் தலைமை வகிப்பவர்கள் சீர்திருத்த நோக்கமுடையவர்கள் என்பதைக் கவனிக்கும்போது ஒருசமயம் மகாநாடு பயனுடையகாரியங்களைச்செய்தாலும் செய்யக்கூடும் என்று நினைக்க இடமிருக்கின்றது.

தமிழர் மகாநாட்டுத் தலைவர் திரு. குமாரசாமி ரெட்டியார் அவர்கள் சமூக சீர்திருத்த நோக்கங்களுக்கு மாறுபட்டவர் அல்லர் என்றே இதுவரையிலும் நாம் கருதி யிருக்கின்றோம். அடுத்தபடியாகப் புலவர் மகாநாட்டுத்தலைவராகிய திரு. நமச்சிவாயமுதலியார் அவர்களைப்பற்றி நமக்கெல்லாம் நன்கு தெரியும் "தமிழ் மொழியில் சாதியும், சமயமும் புகுந்தகாரணத்தால் தான் அம்மொழி தாழ்மையடைந்தது; அம்மொழியின் வளர்ச்சி குன்றியது. சாதியைக்கொண்டும், சமயத்தைக்கொண்டும் தமிழ் மொழியை வளர்க்க முடியாது என்ற கொள்கையை யுடையவர். "எனது சாதி என்ன என்று கேட்டால் தமிழன் என்பேன், எனது மதம் என்னவென்று கேட்டால் தமிழ் என்பேன்" என்று சொல்லிக் கொண்டிருப்பவர். திரு. கல்யாண சுந்திரமுதலியார் அவர்களும் ஒரு சீர்திருத்த வாதியாக இருந்தாலும் கொஞ்சம் சந்தேகப்பட்ட பேர்வழி தான். "இயற்கையன்னை—இயற்கைதேவி—இயற்கைக்கடவுள், மலையில்கடவுள் தோன்றுகிறார். ஆற்றுநீரோட்டத்தில் கடவுள் காட்சியளிக்கிறார்; காலைச்சூரியன் தோற்றத்தில் கடவுள் மிளிர்கின்றார், இயற்கையன்னை எங்கும் எழிலுடன் விளங்குகிறாள்! ஆ! ஆ! என்னே இயற்கையின் சக்தி!" என்று எண்ணி எண்ணி கூறிக்கூறி ஆனந்த பரவசமடைகின்றவராயிருந்தாலும், கொஞ்சம் கடவுட்பைத்தியமும், மதப்பித்தும் உண்டு. ஆனாலும் விவாதத்திற்குரிய இரண்டொரு விஷயங்களைப்பற்றிப் பேசாமல் விட்டுவிட்டு மற்ற விஷயங்களில் அவரையும் நமது நோக்கத்திற்கு இணங்கிவரச்செய்யலாம்.

ஆகையால், சீர்திருத்தக்காரர்கள் தமிழர் முன்னேற்றத்தில் நோக்கமுடையவர்கள் திரளாக அந்தமகாநாட்டிற்குச் சென்று, மகாநாட்டை ஒழுங்குபெற—நாட்டிற்கு நன்மை செய்யும் முறையில்—சைவக்கூட்டமாக ஆக்கி விடுவதற்கு இடங்கொடாமல் நடைபெற முயற்சிக்கலாமென்றே நாம் அபிப்பிராயப்படுகிறோம்.

சீர்திருத்த நோக்கங்களுக்கு எதிரான கூட்டமாகவோ, சைவக் குழுவினரின் கூட்டமாகவோ இருக்குமானால், அச்சமயத்தில், எப்படி நடந்து கொள்வது உசிதமாக இருக்குமோ, அம்மாதிரி நடந்து கொள்ளலாம், நாமே தமிழர் மகாநாடென்று அங்கேயே, அப்பொழுதே ஒன்று கூட்டி, அவர்கள் செய்கைகளைக்கண்டிப்போம், அவர்கள் கொள்கைளுக்கு நாட்டில் மதிப்பில்லாமல் செய்வோம். ஆகையால் சீர்திருதத விருப்பம் உள்ள அன்பர்கள பலரும் மகாநாட்டிற்குத் திரளாக வருமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

கடைசியாக ஒன்று கூறிமுடிக்கின்றோம், மகாநாட்டின் வரவேற்புத்தலைவராக இருக்கும், திரு. உமாமகேசுவரம் பிள்ளையவர்கள், கொஞ்சம் சைவ சமயப்பித்து உடையவர் ஆனாலும், சாதி ஒழிய வேண்டும் தமிழர் ஒன்றுபட வேண்டும், மதங்களால் எற்பட்ட சடங்குகள் ஒழிய வேண்டும், கோயில் களிலும், மடங்களிலும் செல்வம் வீணாவது ஒழிந்து அவைகள் மக்களின் கல்வி கைத்தொழில்களுக்கு உதவியாக இருக்க வேண்டும்" என்ற கொள்கைகளை மனப்பூர்வமாக ஆதரிக்கக் கூடியவர்.

ஆகையால் தமிழர் மகாநாட்டை உண்மையிலேயே தமிழர்களின் சமத்துவத்திற்கும், முன்னேற்றத்திற்கும் பயன்படக் கூடியதாகச் செய்ய முயலலாம் என்றே நாம் கருதுகின்றோம். ஆனால் இவ்வாறு செய்வது சீர்திருத்தக்காரர்கள் மகாநாட்டிற்கு விஜயஞ் செய்வதைப்பொறுத்த விஷயமாகும்.

---


குஷ்டம்

வெண்குஷ்டம் பத்து.

சமீபத்தில் எற்பட்டதாயிருந்தாலும்சரி, பரம்பரையாய் இருந்தாலும்சரி. அபாய இஞ்ஜக்ஷன் கிடையாது. 4- வாரங்களில் பூரணகுணம். வியாதி விபரங்களுடன் இங்கிலீஷில்எழுதவும்.

Post Box No- 11413
Calcutta- (k)

---

ANANGARANGA BATIKA.

Safe and sure remedy against SEXUAL DISABILITY & IMPOTENCY. Restore youthful retaintive & erective capacity & insure PLEASURE FOR ONE HOUR Even an OLD ONE CAN FULLY ENJOY THE HEAVENLY BLISS derived from sexual inter course. COMPLETE SATISFACTION guaranteed. Money will be refunded in case of failure Price for 60 Pills Rs 8 only Sample Phial of 20 Pills Rs 3 only. Please write in English To

*SAILASRAM (K)*
*Chandanpur (Khulna*
*E. B R*


---

"குடி அரசு"
கிடைக்குமிடங்கள்.

வேல்லூர்.
வி டி. ராஜமாணிக்கம், நியூஸ் ஏஜண்ட்.

கரூர்.
சிங்காரவேல்பிள்ளை, ஆப்காரி கண்ட்ராக்டர்.

திருப்பூர்.
முருகேசம், நியூஸ் ஏஜண்ட்

திண்டுக்கல்.
சிக்கந்தர்கான்சாயபு.
மலைக்கோட்டைதெரு.

காரைக்குடி.
விஸ்வநாதர், வெற்றிலைக்கடை
கல்லுக்கட்டி.

மதுரை.
வி. டி. சங்கரலிங்கம், செட்டி
யூரணி தெரு.

---

கலப்பு மண
தான் ஜாத

**Read the**

## "SUPERSTITION OF KHADI"

A Discussion

By

S. Ramanathan
Pattabhi Sitharamyya
& N. S. Varadachari

in English.

Published by Kudi Arasu Publishing House, Erode.

Price per copy two annas. Send 0-3-0 annas postage stamps for a single copy.

*Apply to:—*

Manager "Kudi Arasu" Erode.

## சென்னை லோக்கல் போர்டு ஆக்டு.

(1330ம் ஆு வரையிலுமுள்ள சீர்திருத்தங்களுடன்கூடியது)

M, S. பார்த்தசாரதி அய்யங்கார், B. A., B. L,

அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது.

விலை ரூபா 2—0—0. வி பி செலவு ரூ. 0—5—0.

மானேஜர்,

**குடி அரசு புத்தகசாலை, ஈரோடு.**




## காந்தியின் உண்மைத் தோற்றம்.

திரு. காந்தி பரோடா சமஸ்தானத்திற்கு விஜயம் செய்தபோது, பொதுமக்கள் அளித்த வறவேற்புக்கு பதிலளிக்கு முகத்தான் தனது சுயராஜிய திட்டத்தைப்பற்றியும், கட்குடி, கதர், மறியல் முதலியன பற்றிதான் கொண்டிருக்கும் அபிப்பிராயத்தைப்பற்றியும் செய்த உபந்யாசத்தின் ஆராய்ச்சியாகும்.

21—6—31ந் தேதி வெளியான குடி அரசு தலையங்கத்தை புத்தகமாக்கி வெளியிட்டிருக்கிறோம். இதைப்படிக்கும் அன்பர்கள் காங்கிரசின்யோக்கியதையையும், காந்தியார் கோரும் ராமராஜிய வண்டவாளமும், தொண்டர்கள் செய்யும் போலி மறியல் வேஷத்தின் வெளிப்பகட்டும் கண்டு தெளியலாம்.

100 புஸ்தகங்கள் விலை ரூ. 1—0—0
தபால் செலவு 0—6—0

கிடைக்குமிடம்:—

மானேஜர்,

குடி அரசு, ஈரோடு.

## "குடி அரசு"

ஒவ்வொரு வருஷத்திய குடி அரசும் தனித்தனி வால்யூம்களாக பைண்ட் செய்யப்பட்டு விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன. முதல் வருடம் முதல் ஆறும் வருஷம் வரையில் உள்ள ஆறுவால்யங்கள் இப்பொழுது கிடைக்கும் ஏழாம் வால்யம் பயிண்டாகிக்கொண்டிருக்கிறது. வால்யம் ஒன்றுக்கு விலை ரூ. 4—0—0.

## "ரிவோல்ட்"

ரிவோல்ட் (ஆங்கிலப்பத்திரிகை) முதல்வால்யம் நேர்த்தியாகப் பயிண்டு செய்து விற்பனைக்குத்தயாராயிருக்கிறது. வால்யம் ஒன்றுக்கு விலை ரூ. 4—0—0.

மானேஜர்

"குடி அரசு"

ஈரோடு.

## பலமுள்ளவீரபுருடனாக

குமரனாக, வாலிபத்தன்மையடைய, ஆண் பெண் மனமொத்துவாழ, இல்லற இன்பம் அனுபவிக்க, புத்திர பாக்கியம் பெற வழியில்லையென வருந்துபவர்கள்

## தங்கபஸ்பம்.

சாப்பிடுங்கள்.

அபாரதாது புஷ்டியும், பலமும், பசியும், ரத்தவிர்த்தியும் உண்டாகும் இல்வாழ்வில் அதிய்ற்புத சுகந்தரும்.

48-நாள் பஸ்பம் விலை ரூ. 20. 24-நாளைக்கு ரூ. 10.

## மாதர்களுக்கு

இதுதான்வேணடியது.

**கெர்ப்ப எண்ணெய்**

மாதாந்தர காலத்தில் உண்டாகும் வயிற்றுவலியை உடனே நிறுத்தும். சரியாய் பஹிஷ்டையாகும். கெர்ப்பாசயம் சினைப்பை இவற்றிலுள்ள சகல கெடுதல்களும் நீங்கி கெர்ப்பம் உண்டாகும் மிக்க அநுபவமானது.

புட்டி 1-க்கு ரூ. 2.



அந்நிய தேசவாசிகள் மருந்திற்கு ஆர்டர் செய்யும்போது முன்பணம் ரூ. 5 அனுப்பவேண்டும்.

**வைத்திய ஆசிரியர் C. மலையப்பசாமி,** நித்தியானந்த மெடிக்கல் ஹால், பழனி S. I.

# குடி அரசுப் பதிப்பக வெளியீடுகள்.

## கைவல்யம் அல்லது கலைக்கியானம்.

இது கைவல்ய சாமியாரவர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைத் தொகுத்து வெளியிடப்பட்டது. இங்கட்டுரைகளைப் படிப்பதால் அனேக சாஸ்திர புராண, இதிகாசங்களையும் அவற்றில் உள்ள சாதிப்புரட்டு சமயப்புரட்டு, முதலியவைகளையும் உணர்ந்து நிகரற்ற பண்டித ராகலாம். இதன் விலை அணா. 0—8—0

## இராமாயண ஆராய்ச்சி.

இதில் இராமாயணத்தின் ஆபாசங்களை அறியலாம். கம்பஇராமாயணம், வால்மீக இராமாயணம் இரண்டிலும் உள்ள ஊழல்களையும், ஒன்றற்கொன்று உள்ள வேறுபாடுகளையும் ஆராய்ந்து அவற்றில் உள்ள தெய்விகப் புரட்டுகளை வெளியாக்குவது.

இதன் விலை முதற்பாகம் பாலகாண்டம் அணா. 0—4—0
இரண்டாம் பாகம் அயோதத்தியா காண்டம் அணா. 0—8—0

## ஞானசூரியன்.

இதில் வேதம், புராணம், ஸ்மிருதி முதலியவைகளின் ஆபாசங்களைக்காணலாம். மதங்களின் ஆபாசங்களையும், மதச்சடங்குகளின் ஆபாசங்களையும் அறியலாம். இதை ஒரு முறை படித்தால் ஆரியர்களின் புராதன நாகரீகத்தின் வண்டவாளம் முழுதும் தெரியும் பெரிய புத்தகம் 150 பக்கம். இதன் விலை அணா. 0—4—0

## மநுநீதி மருமம்.

இது மநு தரும சாஸ்திரத்தில் உள்ள அநீதிகளையும், பார்ப்பனர், பார்ப்பனரல்லாதாரை அடிமைப்படுத்துவதற்கு ஏற்படுத்தியுள்ள சூழ்ச்சிகளையும் விளக்குவது. இதன் விலை அணா. 0—2—0

## இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு.

இது இராமலிங்க சுவாமியால் பாடிய அருட்பாவில், ஆறும் திருமுறையில் உள்ள பாடல்களிலிருந்து தொகுக்கப் பட்டது. இதில் உள்ள பாடல்களால், வேதம், புராணம், மதம் முதலியவைகளின் சூள்ச்சிகளையும், அவைகள் பொய் என்பதையும் உணரலாம். இதன் விலை அணா. 0—2—0

## சுயமரியாதைத் தாலாட்டு.

இதில் தீண்டாமைக் கொடுமை, சாதி சமயக் கொடுமை, ஏழை பணக்காரக் கொடுமை முதலியவற்றைக் கண்டித்துக் கூறப்பட்டிருக்கிறது. இனிய பாடல் எளிதில் பொருள் விளங்கும்.

இதன் விலை அணா. 0—2—0

## சோதிடப் புரட்டு.

இதில், சோதிடம் என்பது பொய் என்பதையும், பார்ப்பனர்களும், புரோகிதர்களும் ஜனசமூகத்தை ஏமாற்றுவது தான்சோதிடமெனபதையும் இனிமையான சுலபமான-பாடல்களால் விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா. 0—2—0

## ஈ. வெ. இராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டுச் சொற்பொழிவு.

இதில் ஜன சமூகம், சீர்திருத்தம் பெற்றுச் சுகமாக வாழ வேண்டியதற்கான வழிகளைக் காணலாம். மக்கள் அடிமைப்பட்டுப் பகுத்தறிவின்றி வாழ்வதற்குக் காரணங்களை உணரலாம், ஈ. வெ. ராமசாமியின் சொற்பொழிவுகளில் இது தலை சிறந்ததாகும்.

இதன் விலை அணா. 0—2—0.

## சுயமரியாதைப்பாடல்.

இதில் சுயமரியாதைக் கொள்கைகளை விளக்கி, இனிமையான புதிய வர்ணமெட்டுகளில் பாடிய பாடல்கள் அடங்கியுள்ளன.

இதன் விலை அணா 0—2—0.

## தர்மபரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.

இது ஒரு பழைய நூல். இதில் புராணங்களின் பொருந்தா மற்ற கதைகளையும், முன்னுக்குப்பின் முரணான கொள்கைகளையும் தெள்ளத்தெளிய உணரலாம். இரண்டு இளைஞர்கள் மாறுவேடம் பூண்டு பொதுஜனங்களுக்குப் புராணப் புரட்டுகளை வெளிப்படுத்தும் முறையில் எழுதப்பட்டிருக்கிறது.

இதன் விலை அணா 0—3—0

## பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை.

இது ஒருநாடகம், பார்ப்பனர்களின் புரட்டுக்களையும், ஜாதி வேற்றுமை, மதக்கொடுமை, சாஸ்திரக்கொடுமை முதலியவற்றையும் விளக்கிச் சமதர்மத்தைப் போதிப்பது. இதுவே தமிழில் உள்ள முதல் சுயமரியாதை நாடகம்.

இதன் விலை அணா 0—4—0

## மேயோகூற்று மெய்யா? பொய்யா?

இது அமெரிக்க நாட்டு மாதாகிய "கன்னிமேயோ" எழுதியதிலுள்ள உண்மைகளையும், அதில் சொல்லப்படாமல் இருக்கும்—நமது நாட்டிலுள்ள வேறு பல ஆபாசங்களையும் எடுத்துக் காட்டிச் சீர்திருத்த வேண்டுமென்னும் உணர்ச்சியை உண்டாக்குவது.

இதன் விலை அணா 0—3—0

## அகத்தியர் ஆராய்ச்சி.

இதில் முச்சங்கங்களின் புரட்டுக்களையும், அகத்தியர் சரத்திரப் புரட்டுக்களையும் தமிழ்நூல் ஆதாரங்களோடு விளக்கப்பட்டிருக்கிறது. சென்னை, பண்டிதர் கா. நமச்சிவாய முதலியாரால் எழுதப்பட்டது.

இதன் விலை அணா 0—2—0

## கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?

இதில், கடவுளை நிந்திப்பவர்கள் சுயமரியாதைக்காரர்கள் அல்லவென்றும், புராணமரியாதைக்காரர்கள் தான் கடவுளை நிந்திக்கும் கயவர்களென்றும், இதிகாசப் புராணங்களின் ஆதாரங்களைக்கொண்டே விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. பண்டிதர் அ. ராகவன் அவர்களால் எழுதப்பட்டது.

இதன் விலை அணா 0—2—0

## கதர்-மூடநம்பிக்கை (இங்கிலீஷ்)

இதில், திரு. எஸ், ராமநாதன் அவர்கள் கதரைப்பற்றிச் செய்த உபந்யாசமும், அதற்குத் திருவாளர்கள், பட்டாபி சீதாராமையாவும், என். எஸ். வரதாச்சாரியும் எழுதிய மறுப்புரைகளும், அவைகளுக்கு எஸ். ராமநாதன் எழுதிய பதில்களும் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டிருக்கின்றன. இதைப் படித்தால் கதர்ப் புரட்டை உணரலாம்.

இதன் விலை அணா 0—2—0

**மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.**

உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு திருமதி நாகம்மாள் அவர்களால் வெளியிடப்பட்டது.